நிஜநாடகமெனும்
வாழ்க்கை [illegible]
பந்தி நாடகம்.

T.D.R.C no 324
R.R no 41-4-77.

C

O-,892 M.PK1,T
M79
115802
~~11802~~

உ

ஸ்ரீராமஜெயம்.

# நளநாடகமென்னும்

வழங்குகின்ற

# தமயந்திநாடகம்.

தஞ்சைமாநகரம்-ம-ா-ா-ஸ்ரீ,

## சொக்கலிங்கதேசிகர்

மாணாக்கராகிய

ஷை தஞ்சைமாநகரம்-ம-ா-ா-ஸ்ரீ,

## கிருஷ்ணபிள்ளையவர்களால்

இயற்றியது.

இஃது

கோகுலாபுரம்

## சரவணபண்டிதரால்

பார்வையிடப்பட்டு.

சித்தூர்

## வீராசாமிநாயுடு

அவர்களால்-தமது

## வித்யாவிநோதஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதி௵.

O-,892 MKP1,T
M79

115802

உ

கடவுள் துணை.

# தமயந்திநாடகம்.

---

## விநாயகர்துதி

காப்பு.

நேரிசை-வெண்பா.

சுத்தமிகுமாவிடதத் தூநளனைமாலையிட்ட
நற்றமயந்திச்சரிதை நாடகமா - யுற்றுரைக்கத்
தங்குமுமையோர்பாகன் சங்கரனீன்றகரித்
துங்கமலர்த்தாளே துணை.

விருத்தம்.

திங்களெனும்பதுமமலர்ப்புயத்தோனெட்டுத்
திக்குமன்னர்வணங்கவெகுசெயத்தோன்வெற்றிச்
சிங்கமெனுமிடதநகர்தன்னில்வாழுஞ்
சித்ராபதிச்சத்ராபதிச்செங்கோனீதித்
துங்கநளச்சக்ரவர்த்திச்சரிதைதன்னைத்
துதித்திடவேய்க்கரவந்தும்பைசூடுங்
கங்கையணிசங்கரனீன்றசத்திக்
கணபதிபொற்பாதமலர்காப்பதாமே.

## ஈசுவரர்துதி.

சக்ராத்தாற்புவியனைத்துமொருகுடைக்குளாண்டநளச்சக்ரவர்த்தி
தக்ககதைநாடகமாம்முக்யமிகுஞ்செந்தமிழாற்றமியேன்கூற
மைக்கடலிற்பிறந்துவருமிக்கவிடமுண்டுமழுமானையேந்தி
நங்கனெனும்புரமெரித்தமுக்கணன்றன்பதமனதினாடினேனே.

## முருகர்துதி

மிடதநகர்தனக்கதிபன்றுதிவேலாற்கருதலர்தநெஞ்சினுட்டிக்
கடல்சூழ்ந்தபுவிமுழுதுமொருகுடையிலாண்டநளன்கதையைப்பாடத்
துடியிடைத்தெய்வானைவள்ளிதனையிருபாகத் தில் வைத்துத்து லங்கு
வைவேற், றிடமுடன்கொண்டுயர் மயிலில்வருமுருகன்[illegible]ருபதத்தைச்
சென்னிசேர்ப்பாம்.

## திருமால்துதி.

வாலமதிபோலுநுதற்றமயந்திக்கினியமணவாளனான
சீலமிகுநிடதநகராண்டநளன்சரிதந்தனைச்செப்பமுன்னால்
மூலமெனவோலமிடுவேழமதைக்காத்தருளுமுகின்மெய்போன்ற
வேலைநடுத்துயின்றதிருமாலிருபாதம்புயத்தைவேண்டுவேனே.

## ஈஸ்வரிதுதி,

நீதிபெருகுமநுநீதிவிதிமுறைமைதனைநடத்துநிடதர்கோமான்
ததிபெருகுஞ்சரிதையிதன்விதமதனைச்செந்தமிழாற்சாற்றுதற்கு
மதிமுகமுங்கரகமலவனைத்தனமுந்துடியிடையின்வடிவுபோன்ற
துதிபெருகுமலைமகடன்னிணையடியேயநுதினமுந்துணையதாமே.

## சரஸ்வதிதுதி

நிலமாதுதிருமாதுதனதுடையவசமாகநிறுத்துநீதி
நலமானபதிமேவுநிடதநளன்சரிதைதனைநவிலப்பாரிற்
பலமானகலைநூலின்பொருளாகநின்றிலங்கிப்பநுவற்கூறுங்
கலைமாதுதிசைமுகனின்பூகமலத்தாளிணையைக்கருதுவேனே.

## நூலாசிரியர்.

கங்கைகுலந்தனிலுதித்தசொக்கலிங்கதேசிகன்சொற்கவிகடன்னிற்
பிங்கலமாலனையநளராஜன்மனையாளைவிட்டுப்பிரிந்தபின்பு
கொங்குலவுவனவேடன்றனையெரித்தத்தமயந்திக்குறைமுடர
மங்களமுற்றுளகவியுமவர்சீடன்கிருஷ்ணபிள்ளைவகுத்ததாமே.

## அவையடக்கம்.

பஞ்சிதன்சொற்பநுவலிணைப் புலவர்வஞ்சிக்கதிர்மதியாம்பதுமைக்கை
வாய்,விஞ்சையர்சொன்னூலறியாப்புன்மொழிகொண்டின்பமுற்றுவிள
ங்கியானு,மிஞ்சுபுகழ்நளன்சரிதைதனையறியேன் மூதுரைசொல்விரும்
பிவெண்மை,யிஞ்சொன்மொழிதனையறிஞரறிவலர்சொற்பிழையிதனை
வியம்பிடாரோ,

பாயிர - முற்றும்.

## தோடையம்-நாட்டைராகம்-சம்பைதாளம்.

புவனமுழுதொருகுடை யி-லணிந்துசெங்கோல்தான்செலுத்தும்
புஜபலநளன்சரிதை - யிசைதனைககூற
பவனியதுவருமுடி - காரு - ணசிவ
பாலனுமையருள்விக்நேஸ-பரன்பாதந்துணையே. (ஜெயஜெய)

நீதிநெறிதவறுமு-லாதிநெடுமால்பதமும்
நேயமுடனின்றுட-த-நிருபன்புகழுரைக்க
தாதவிழுங்டப்பமலர்த்-தாரணியும்புயமுருகன்
சரவணபவகமலத்-தாளிணைகடுணையே. (ஜெயஜெய)

செந்திருவைவிகாழுக்கு - சுந்தரஞ்சேர்தமயந்தித்
தேவிமணவாளனைபுகழ் - ஆவலுடன்றுதிக்க
சந்ததமுந்தொண்டர்முன்னே - வந்துவரந்தந்துன்ப
நாமனெழில்பெருமேனி - வாமனடித்துணையே. (ஜெயஜெய)

## மங்களம்.

தரு-இ-ம-பந்துவராளிராகம்-ஆதிதாளம்.

மங்களம் நளேந்திரனுக்கு மங்களம்
மதிமுகத்தமயந்திக்கு மங்களம்

பங்கயக்கண்மாயனுக்கும் பாவைதிருநேயனுக்கும்
சங்குசக்கரதாரனுக்கு மங்களம்-நித்ய
சர்வதயாபரர்க்கு மங்களம்
திங்களணிவேணியர்க்குஞ் செய்யமழுபாணியர்க்கும்
மங்கையுமைபாகனுக்கு மங்களம்-கொன்றை
மாலையணிவாகனுக்கு மங்களம்
ஓதுமறைவேதனுக்கு மூற்றகலைமாதினுக்கும்
சீதளராஜனுக்கு மங்களம்-யாவும
சிருஷ்டிக்கும் ரக்ஷகனுக்கு மங்களம்
வாரணமுகவனுக்கும் வல்லபைக்கணவனுக்கும்
சூரசம்மாரனுக்கும் ஜெயமங்களம்-பசுந்
தோகைமயில்வீரனுக்கும் சுபமங்களம்

## பொது-அகவல்

பூதலம்புகழும் புராதனராஜன்
நீதிசேர்மன்னனிடதநாடுடையோன்
சந்திரகுலத்தான் சக்கராயுதத்தான்
தந்திரநயத்தான் சயிலநேர்புயத்தான்
ஆனையொட்டகமு மசுவமாரதமுஞ்
சேனைகளுடனே சிவிகைதண்டிகையும்
அவனியோர்குடையா னறிவொன்றுடையான்
மமதைவம்படையான் வசிகரமுடையான்
ஐன்னைமூ[illegible]தேச மிருக்குமன்னவர்கள்
தண்மையாய்வந்து தாள்புடைசூழ
கவிராயர்பாடக் கட்டியங்கூற
நவரத்நமயமாய் நலமுடனிழைத்த
சிங்காசனத்தில் ஸ்ரீநளராஜன்
மங்களக்கிரீட வர்த்தனராகி
ஆச்சிரியமாக வரசுசெங்கோலால்
ராச்சியபாரநடத்துமந்நாளில்
வேட்டையில்விருப்பி வேந்தனுங்கண்டு

நாட்டிவில்லாத நல்லன்னப்பக்ஷியை
தூதாக்குவிட்டுத் தோகையையிணக்கிச்
சேதிகள்வந்து ஜெயமென்றுசொன்னார்
இந்திரர்நளனை யினிதூதுவிட்டுச்
சந்தேகமாகத் தானவர்சென்றார்
சமூகனும்வீமன் சுந்தரப்பெண்ணும்
தமயந்திதனக்குந் தான்கலியாணம
ராச்சியமன்னரில்நளமகாராஜன்
ஆச்சரியமாக வப்போதேவிவாகம்
கருத்தின்படியே கலியாணஞ்செய்தார்
இருவருநிடதநாட்டினுக்கிவர்வந்து
நளபூபாலனலமருண்மைந்தனை
வளமையாய்ப்பெற்று மருவுமந்நாளில்
இந்திரன்சொல்லா லேழரைநாட்டான்
வந்துமேபுஷ்கரன் வடிவாநளன்முன்
சொக்கட்டாடித் தோற்றிடச்சீமைச்
சிக்கியேசீமையைச் சொல்லெனக்காட்டில்
மைந்தரைத்தந்தை மனைக்கேயனுப்பி
சிந்தையுநொந்து சென்றனர்வனத்தில்
மறித்தன்னப்பக்ஷி மன்னவன்புடவையைப்
பறித்திடநளனும் பாவையுமொருதுகில்
உடுத்தியேதுயின்று ருணர்வறியாமல்
புடவையைக்கிழித்துப் போகவேயரசன்
அரவங்கடிக்க வப்பாலயோத்தித்
தருரிதுபர்ணன் சமூகத்தில்வந்து
சுயம்பாகஞ்செய்துத் துலைத்திடக்காலம்
பயந்தெழுழித்துப் பார்த்திடமங்கை
புருஷனைத்தேடிப் புலம்பித்திகைக்கச்
சரீரத்திற்சர்ப்பந் தான்வந்துசுற்ற.
வேடனுங்கண்டு வெட்டியேபாம்பைக்
கூடவேமையல் கோதைமேற்கொண்டான்
பக்கமேநெருங்கப் பதிவிருதாடன்
அக்கினியாலே யவ்வேடனெரிந்து
வேதவியாசர் மிகுமாசிர்ம
மாத்ரவாக வவ்டம்விட்டோகி
செட்டிவந்தடுக்கச் செட்டியையானை
முட்டியேகொல்ல மொல்குழலாளும்
தி[illegible]ல்தனையே சேவித்துவணங்கி
வ[illegible]கனைமொழுட்டி வந்தனள்சுவாகுவனி

தாயார்வீட்டிற்குணவள்வந்து
வாயாற்புலப்பி மதிமிகக்கலங்கி
தாதிநாளென்றுந் தான்பெயரிட்டு
ஏவலுஞ்செய்து விருக்குமந்நாளில்
தந்தையாம்வீமன் றன்புரோகிதனைத்
தேசங்களெங்குந் தேடிவாவெனக்
[illegible]ர்கள[illegible] மாதுக்கிண்டாக
கலியாணசுயமர[illegible] களங்கமாய்நாட்டி
வலியவேவயோத்தி மன்னவனறிந்தான்
ராஜாவினுடனே நளமகாராஜன்
ஓசையாய்த்தேர்விட வூர்கலிதுலைய
விதர்ப்பதேசத்தில் மேவியேயிருக்கத்
தப்புளமொழியாள் தமயந்திகண்டு
வணங்கியேயழைக்க மன்னவனாளும்
இணங்கிலனெனவே யீசனுமுமையும்
வேதனும்வந்து விரவியேகாக்ஷி
யாதரவாய்த்தவ மளித்தருள்செய்ய
பகர்நளன்மாதும் பதிபெறுமிடத
நகரதுபுகுந்து நல்லபுட்கரனொடு
மறுசூதாடி வாழ்வெலாங்கெலித்துத்
திறனவமணியொளி சிம்மாசனத்தில்
நலமுடனிருந்த நகிழ்கமுன்னூலை
நாடகமாக ஓம்நமசிவாய
மூனைத்திகுந்தமிழை யுகமுடிவளவும
கல்மேலெழுத்தாய்க் கவிப்புலவோர்கள்
சொற்பிழைதிருத்திச் செல்வதுகணமே.

பொது - விருத்தம்.

பொன்னினவமணியிழைத்த மௌலிதோன்றப்
புவ்ந நுதற்றிலதமதி போலுநால்வாய்க்
கன்னபதமொழுகுதிரு முகமுமைந்து
கரமதிலங்குசபாசங் காணவேந்தி
பன்னுடைநறுமன்னூலா பரணமாடப்
பசுமபொன்னுடையுமிலங்கப் பதாம்புயத்தில்
வன்னமணிக்கிண்கிணியுங் கலகலென்ன
வாலவிணபதிசபையில் வருகின்றாரே.

விநாயகர்வருகிறதரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

ஆதிவிநாயகர்வந்தார்-ஆருவிலேறி-ஆதிவிநாயகர்வந்தார்
காதல்நளன்சரிதை யோதுமதற்பேரிதை
சாதனையுடன் காக்கப் போதுமெல் லோரும்பார்க்க (ஆதி)

வானவர்மலர்தூவ வணங்கிவந்தென்னைத்தாவ
கானமொழிகளகூவக் கனகசபையைமேவ (ஆதி)
மும்மதத்துடன்சோதி மூச்சுடர்தனக்காதி
நன்மைதருகுநீதி ஞானகதைக்கநுபூதி (ஆதி)
சோதிமகுடமின்னத் துலங்குமணிகள்துன்ன
நீதியாயநடந்தின்ன நிறைந்தசபைக்குமுன்ன (ஆதி)

பொது - விருத்தம்.

தட்டிச்சல்லடக்காரன் முடிக்காரன்
சரிகைமுண்டாசிக்காரன்சால்லைக்காரன்
பட்டநாமத்திலதப்பொட்டுக்காரன்
பச்சைக்கல்முருகுவண்டிக்கடுக்கக்காரன்
இட்டவெள்ளித்தகுக்காரன்கேலிக்காரன்
இன்பநயஞ்சொல்லவெகுகெட்டிக்காரன்
கட்டழகுபெற்றநளராஜன்வாசற்
காக்குமெழிற்கட்டியக்காரனும்வந்தானே.

கட்டியக்காரன்வருகிறதரு-இ-ம்- பூரிகலியாணி-ஆதிதாளம்.

கட்டியக்காரனும்வந்தானே-நளேந்திரன்வாசற்
கட்டியக்காரனும்வந்தானே

கட்டியக்காரனும்வாந்தான் மூட்டவிக்ரகமிகுந்தான்
அட்டதிக்கெங்குஞ்சுகந்தா னிட்டமும்பெருகத்தந்தான் (க)
நீடியபிறப்பங்கோலும் நாடியேகொண்டுமென்மேலும்
தாடியும்வாயிற்சால்போலுங் கூடியசபைமுன்னுலும் (கட்டி)
சரிகைமுண்டாசிக்கட்டி வெருவக்கண்ணைமிரட்டி
மருவுங்கச்சையுந்தட்டி யிருகவிசித்துக்கெட்டி (கட்டி)
பாரினில்மிகுந்தமோடி விருளனைக்கொண்டாடி
ஆரபாரத்துடனுடி பூரிகலியாணிபாடி (கட்டி)

(வம்.) அகோதெப்படியென்றால் ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜவந்தண்ட ராஜகெம்பீராஜ கோலாகலராஜதுரந்தரா நவகண்டங்களும் ஒருகுடைக்கீழாளப்பட்ட நளச்சக்ரவர்த்தி மகாராசாவே அரிபக்த சிரோமணியான மகாராசனே பராக்பராக் எச்சரிக்கை.

பொது - விருத்தம்.

ஒப்பமாயன்பத்தாறு தேசமுமொருகுடைக்கீழ்
திக்கெங்குஞ்சக்கரத்தாச் செலுத்தியமன்னர்க்கொற்ற
தப்புடன்றடியுங்கொண்டு தலைதனிற்கணக்குக்கட்டுஞ்
செப்பமாயலங்கரிக்கச் செயவீரசாம்பன்வந்தான்

வீரசாம்பன்-வருகிறதரு-இ-ம்-தன்யாசி-ஆதிதாளம்.

வீரசாம்பனிதோவாரா-வேடிக்கைப்பாரும்
தெரியவாய்ச்சிக்கூவித்-தென்புடனெழுந்துதாவி (வீரசாம்)

மாடறுக்கும்பெருஞ்சூரி-மடியிற்சொருகி — மீதி
பாரிக்கள்ளுண்டுவாயநாறிப்-பண்புடனுருமிக்காறி (வீரசாம)
சொத்தைப்பல்லுங்கண்ணீர்ப்பூளை சொரிந்தலழியுங்கோழை
மெத்தவாயினும்படித்துச் சுற்றிநின்றோயடிதது (வீரசாம)
தம்பட்டமடித்துக்கொண்டு சாமிகளன்வாறென்று
கும்பிட்டுக்கும்பிட்டுநின்று-கோணவாயைமெண்ணுக்கொண்டு ()

கட்டியன்-வசனம்.

அடாவாடா வெட்டியாரப்பயலே நம்மிடநவகண்டபதியாகிய நளச்சக்ரவர்த்திமகாராஜா கொலுவுக்கு வருகிறபடியினாலே வெள்ளிவாழை பொன்வாழை மகுடதோரணம்பூரணகும்பம் வைக்கும்படிக்கும் வீதி அலங்காரஞ்செய்யும்படியாகவும் தமுக்கடித்து எச்சரித்து வாரும்பிள்ளாய்வீரசாம்பனே.

வீரசாம்பன்சொல்-தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

திடுந்திட்டந்திடுந்திட்டம்போடுங்கள்-நல்ல
திட்டமுடனேசெய்துவையுங்கள்
வெள்ளிவாழைத்தோரணங்கட்டுங்கள்-நன்றாய்
வீதியலங்காரஞ்செய்யுங்கள்
பந்தல்விரிவாகப்போடுங்கள்-மிக்கப்
பருத்தவண்ணஞ்சோலை-கட்டுங்கள்
பூரணகும்பங்கள்வையுங்கள்-மணப்
பூவாலேயலங்காரஞ்செய்யுங்கள்
மங்களசோபனம்பாடுங்கள்-மகா
ராஜனுக்கிவ்வாறுசெய்யுங்கள்

பொது-விருத்தம்.

மதிமுகமுந்திருமுடியில்மகுடமின்ன
 மணமகர்குண்டலமுஞ்செவியிற்றுன்னக்
கதிதருகும்புயவலை முத்தாரஞ்செம்பொற்
 காந்திதருஞ்சிவரத்நமாலைபூண்டு
விதமுடனேயங்கிதமான்சாதருவும்
 விளங்கமலர்க்கரந்தனிலேவில்லுமேந்திச்
சதிருடன்கட்டியக்கூறமறையோர்வாழ்த்தச்
 சச்கரவர்த்திநளராஜன் சபைவந்தானே

நளராஜன்வருகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

நளமகாராசேந்திரன் வந்தான்-ஜெகம்புகழும்
நளமகாராசேந்திரன் வந்தான்
தளபதிமந்திரிகள் கூடத்
தத்தைமொழிமாத ராட
வளமிகுநவ்விடதமாநகர்தன்னில்வாழும்
ஜளபாழுங்கஸ்துரிபுயபுளகிதவிஸ்தாரநய (நளமகா)

சந்திரவட்டக்குடை தாங்கவே-யிருபுறமுஞ்
சாமரைகருட்டி யோங்கவே
வந்துமன்னர்திரை தேங்கவே-வந்தனையுடன்
மாநிலத்தோர்கலி நீங்கவே
பைந்தமிட்கவிஞர்கள்சிந்துபதங்கள்பாட
அந்தமிகுந்தஜய துந்துமியொலிநீட
ஆர்த்திடுஞ் சேனையிணங்கச்
பார்த்திபரெல்லாம் வணங்க (நளமகா)
ஆரணம்புகழு ந்திரியே-மறையோர்சொல்லி
ஆசிமகிழ்ந்திட வோதியே
பூரணகும்பங்கள் சோதியே- செழிக்கநிதம்
பூவுலகெங்கும்பிரக் யாதியே
ஆரணங்குடநல்லத்தாரணித் தனங்களும்
வாரணம்பரியுடன்காரண மாகவெங்கும்
மாமறையாளர்க்கு நித்தம்
கோருகமாகக் கொடுத்து (நளமகா)
கதிர்மணிமகுடஞ் சூட்டியே-நகதகெனக்
கனகபொற்பணிகள் பூட்டியே-சிங்காரவ
மதனென்னுஞ்சமயிரமன் கட்டியே-ஒயிலுடனே
வந்தனையமபா ரிட்டியே
சுதியுடனேதோடி யிதமுடனேபாடித்
துதிக்குமனைமகிழ்ந்து மதிசகுந்தயவுக்கது
சுந்தரப்புயவு தாரப்
பைந்தருவெனுங்கெம் பீர (நளமகா)

நளராஜன்சொல்-விருத்தம்.

சென்னியிற்பாகணிந்து செழுநற்பணிகள்பூண்டு
நன்னயநமதுவாச்ல் நயந்தகட்டியனேகேளாய்
சொன்னயமிகுந்தமந்திரி சுமுகனையின்றுநீயும்
மன்னியசமூகந்தன்னில் வருகவேயழைப்பிப்பாயே.

(வ-ம்.) அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நம்மிடமதியூகிமந்திரியை அதிசீக்கிரத்திலழைத்துவாரும்பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியன்சொல்-விருத்தம்.

சீலமுங்குலவுநீதி தெளிந்தநல்லறிவுமுன்று
காலமுங்கருதியோதுங் கருத்துளவமைச்சனோ
ஞாலமேபுகழுங்கீர்த்தி நவகண்டநளராஜேந்திரன்
கோலமாஞ்சமூகந்தன்னிற் குணமுடன்வாச்சொன்னனோ.

வசனம்.

அகோசுமுகஞ்சாணமையாசுவாமி தேவரீரவர்களை நளச்சக்கிரவர்த்திமகாராஜாவானவர் கொலுவுக்குவாச்சொன்னாயாகவாமி.

பொது-விருத்தம்.

தேசமெனுமன்பத்காறதனைத்தன்கைத்
திகிரியினாலடக்கிவென்றசெங்கைவேலோன்
நேசமெனுமுறைதவறுதவனியாண்டே
நீதியுதவுந்தனபதியாம்விடதர்கோமான்
வீசுபுகழ்பெருகிவளர்போசராஜன்
விஜயமார்த்தாண்டனெனும்வெற்றிவேந்தன்
வாசல்வளர்மதியூகிமந்திரிமன்னன்
மன்னர்பணிநளன்சமூகம்வருகின்றானே.

மதியூகிமந்திரிவருகிற-தரு-இ-ம்-தன்யாசி-ஆதிதாளம்.

வந்தனன்மதியூகி மந்திரி-நளேந்திரன்சபைக்கு
வந்தனன்மதியூகி மந்திரி
செந்திருமேவிய விந்தைநிடதமுயர்
தந்திரமிகுமதி மந்திரிசபையினில் (வந்தனன்)

வெற்றிமகுடஞ்சொர்ன அஸ்தக்கடையமின்ன
சுற்றிமாதர்கள்அன்ன நத்துக்கீதங்கள்பன்ன
சத்திரமிகுந்தன்ன சத்ரபதியின்முன்ன
தத்துவமுயர்கன்ன சித்தசனிவனென்ன (வந்தனன்)

அங்கிசார்மாட்டி தங்கப்பணிகள்பூட்டி
அங்கமலர்கள்சூட்டி தங்குங்கீர்த்தியைகாட்டி
பொங்குந்தந்திரங்காட்டி சங்கமிகவேகூட்டி
சிங்கமெனவேமேட்டி யெங்கும்பகையைவாட்டி (வந்தனன்)

ஆசையதனைநீடி வாசமலரைச்சூடி
நேசமுடனேகூடி பேசுமதுரம்பாடி
தேசமந்திரகோடி பேசுவந்தென்னைத்தேடி
வீசிநடந்துமோடி ராஜன்சபையைநாடி (வந்தனன்)

மதியூகிமந்திரிசொல்-விருத்தம்.

புவனமீரேழுமோங்கப் புரவலர்வணங்கிப்போற்ற
அவனியோர்குடையிலாளு மன்னனேயரசர்கோவே
நவமணிமாலைமார்ப நடேந்திரமகிபாவென்னை
யுவகையாயழைத்தசெய்தி யுரைசெய்வீர்சரணந்தானே.

(வ-ம்) அகோசரணஞ் சரணமையாசுவாமி நளச்சக்ரவர்த்தி மகானுபாவரே தேவரீரவர்கள் அடியேனை யழைப்பித்தகாரிய மின்னதென்று அருள்செய்யவேண்டுமையாசுவாமி.

இராஜன்சொல்-விருத்தம்.

மதிதனில்திகமான மந்திரிசொல்லக்கேளாய்
அதிபதிமகுடதாரி யரசர்கோன்மற்றுமுள்ளோர்

சதிர்குணபதியின்மேவுஞ் சகலருஞ்சுகங்கள்தானே
புதியதாய்நமதுவார்த்தை புகலுவாய்ப்புகலுவாயே.

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் மதியூகிமந்திரியே நம்முடைய ஐம்பத்தாறுதேசத்து ராஜகூட்டங்களும் நிக்ஷதாபுர மாதியந்தமும் அன்னசத்திரமுதலானதுகளும் தேவாலயம் தர்மாலயமும செவ்வையாகவும் சுபசந்தோஷகரமாகவும் யிருக்கிறார்களா பார்த்துவந்து சொல்லும் பிள்ளாய் மந்திரியே.

மந்திரிசொல்-விருத்தம்.

நவகண்டமதனையாளு நளச்சக்ராஜனே கேள்
சிவன் செயலாலேயிந்தத் தேசத்திலுள்ளோரெல்லாஞ்
சவுக்யமுன்கிருபையாலே தானவரிருக்கிறார்கள்
சுபமடியேனுங்கூடத் துணையுந்தன்சரணந்தானே.

(வ-ம்) அகோ சரணஞ் சரணமையாசுவாமி நவகண்டபதியாகிய நளச்சக்ரவர்த்தி மகானுபாவரே சுவாமியினுடைய கிருபையினாலும் தங்களுடைய ஆக்கினை சக்கரத்தினாலும் அடியேனும் ஐம்பத்தாறு தேசத்து ராஜகூட்டங்களும் நிக்ஷதாபுர மாதியந்தமும் தேவாலயம்விஷ்ணுவாலயமுதலானதும் அன்னசத்திரமும் சுபமாய் நடந்துவருகுதையா சுவாமி.

இராஜன்-வசனம்.

அகோ வாரும்பிள்ளாய் மந்திரியே நம்முடைய பிராணபதமாகிய தமயந்திதேவியை நம்மிட சமுகத்திற்கு வரும்படி திட்டஞ்செய்துவாரும்பிள்ளாய் மந்திரியே.

மந்திரி-வசனம்.

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

தமயந்தி சிறப்பு அகவல்.

காரணிகூந்தல் கமழ்நறுமலரின்
தாரணிபின்னல் சடைப்பில்லைநாகம்
பகல்மதிப்பிறையும் படயொளித்தாள
நகைமுகமதனில் நற்பணிதுலங்க
நவமணிச்சுட்டி கன்னுக்கிலங்கத்
தவழ்மதிநுதலிற் றவிவெயிலெரிப்பக்
காதினிலணிந்த கதிர்மணிக்கொப்பு
சோதிமாணிக்கத் தோடதுவிளங்க
பத்தரைமாற்றுப் பசும்பொன்னிழைத்த
முத்துமூக்குத்தி முழுநிலவெள்ள
மங்கலத்திகழு மாணிக்கமுத்தணிந்து
தங்கவட்டிகையின் றன்னிலேமின்ன

அத்தசந்திரா மழகியபவழக்
கொத்துமல்லிகையுங் கொப்பினிற்சூடி
சாமிந்திரநீலச் சரப்பளிபதக்க
மருவியமோகன மாலையும்பொன்னின்
வடமணிமுலைமேல் வயங்கெழிலியங்க
அம்புயமலரி னஸ்தமுதாரி
கங்கணசூடங் கலைமதிவயிரச்
செங்கையில்வளையுந் திகழ்விரலாழி
புனைந்திடுவங்கிப் பொன்பாசுபந்து
வினைந்ததாயித்தி மணியெழில்காட்டத்
தூயபொற்சரிகை துகிலணியிழைமின்
னையவொளிரிடையிற் மகரகவெண்ண
மேகலையிரதநம் விளங்குமொட்டியாணந்
தேகம்பசுயபொற் றிருவழகிலங்கத்
தண்டைச்சிலம்பு சதங்கைகள்கொஞ்ச
மண்டொலிபொங்க மலர்ப்பதமெட்டியும்
மானிலைவிழியாள் மலர்க்கரமேந்தத்
தானடைபயிலுஞ் சாதியன்னம்போல்
பரிமளசுகந்தப் பன்மலர்மாலை
மருவுகஸ்தூரி மான்மதமணிந்து
வாடையெங்கெங்கு மலிமணம்வீச
ஆடவர்மயங்க வமரநந்தியங்க
நாமகளிந்திரை நங்கையர்துதிக்கக்
காமனுமிரதியுங் கைதொழுதேற்ற
விஞ்சையர்கீத மிகுந்துகொண்டாட
நஞ்செனுங்கண்ணார் நாட்டியமாட
தாளமத்தளஞ் சரமண்டலங்கள்
மேளவாத்தியங்கள் மிகவுமேமுழங்க
இருபுறங்கவரி இணையிருந்தோங்க
அருவையர்பாங்கி யாலத்தியேந்த
மின்னொளிவென்ன மிகுதமயந்தி
தன்னகர்விடத நளனெதிர்வந்தாள்.

பொது-கொச்சகம்.

அம்போருகந்தநுத லால்வயிரேருகொங்கைகரிக்
கொம்போவமுதமொழிக் கொண்டலிகரோகூந்தல்
செம்பூதலாதிபதித் தீரனளராஜனுடன்
சம்போகரஞ்சிதஞ்சேர் தமயந்திவந்தனளே.

தமயந்திவருகிற-முடுகுவிருத்தம்.

கருமுகிலையனையகுழலணியுமலர்கமகமெனகனகமதிககிரொளிசெய்
இருகுசமுழயுகவமணியுமுகமதியுதிககிகென விலகுதுடியிடைதுவளவே

முருகுபரிமளகளப மொளிருபிறை வடமசைய முலையொளிர வருபது
மைபோல், தருவளாமராமுனிவர் மனமுருகியெதிர்பாவு தையல்தமயந்
திவந்தாள்.

தமயந்திவருகிற-தரு-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்.

அதிருபசிரோமணிவந்தாள்-தமயந்திதேவி
அதிருபசிரோமணிவந்தாள்
மதிகதிரொளிதரு மாலைத்தகதகென
அதிவிதரயகுண பதியெனப்புகழ்மிகத்
துதிரடனுயர்சபை தனிலுறவருஞ்சுக (அதிரூப)
செங்கைவளை துலங்கவே - மெய்யிலணிந்துச் - சிறந்தபணியிலங்கவே
கொங்கையிணை குலுங்கவே - வச்ரமணிமூக் - குத்தியொளிவிளங்கவே
செங்கைதனிற்பூச்செண்டு சிந்தைமகிழ்வுடன் கொண்டு
மங்கையர்சூழ வணங்கியேதாழவும
இங்கிதமாமயில் தங்கமெய்போலுயர் (அதிரூப)
காலிற்சதங்கைகொஞ்சவே - கூந்தலைக்கண்டு-கார்முகிலினமஞ்சவே
பாலினுமொழிகள்மிஞ்சவே-யன்னமுங்கண்டு - பயிலுநடைக்குக்கெஞ்
வாலமதிப்பிறைபோலேசிலநுதலதின்மேலே (சவே
மணமுயர்திலதமும் புனைகழல்விழியென
இணையொருவருமிக ரிலையெனமலர்முக (அதிரூப)
உபயசாமரைவீசவே-மாதர்கள்நின்று-வுகந்துநயங்கள் பேசவே
சுபப்பன்னீரொளிகூசவே சவ்வாதுபன்னீர்-சுகந்தமாதர்கள் பூசவே
சபையர்ப்புகத்தைநாடிச் சரிகைப்பட்டாடைசூடித்
தவமதுபெருகிய தருநளபதிவளர்
சபையினிலழகிய தமயந்தியனமெனும் (அதிரூப)

தமயந்திசொல் - விருத்தம்,

வங்கணத்தோழிமாதே வஞ்சியர்க்கரசியான
சிங்காரவல்லிநாமுந் தேன்மலர்க்காவிற்புக்கிப்
பங்கயமுல்லைவாகுதிப் பாரிசாதங்கள்கொய்து
இங்கிருபேருமாக ஏகுவோம்வருகுவாயே.

தமயந்தியும தோழியும் பந்துவிளையாடுகிற-தரு
இ-ம்-யமுனைகலியாணி-இரத்திதாளம்.

வாரும்வாருஞ்சகிமார்களே - விளையாடுவம்நீங்கள்
வாரும்வாருஞ்சகிமாரகளே
சீருடன்மல்லிகை முல்லையிருவாட்சி
சேர்ந்திடுங்கொன்றை யலரிச்சிவந்தியும்
பாரிலுயர்ந்த மருவுங்கொழுந்தும்
படர்ந்தவனத்திற் றடர்ந்துவிளையாட (வாரும்)
சித்திரப்பந்து மிருக்குதுகைபினிற்
றேன்மொழிப்பாகுடன் சீச்சருக்கரை

நத்திருகின்ற பக்ஷணமுங்கொண்டு
நங்கையரோநாமு மிங்கிதமாகவே (வாரும்)
கொண்டலுலாவிய தென்னைப்பனைகளும்
கொழிஞ்சிநாரத்தையுங் கொய்யாப்பிலாவுடன்
அணைடர்துதிக்கின்ற பாதிரிப்புன்னை
யாசும்புரசும் வரிசையதாகவே (வாரும்)
மாடப்புருக்கொண்ட ளாத்திக்கிளிகள்
மயில்கள்குயில்களும் வாழும்வனந்தனில்
ஓடத்தடாக மிருக்குதுபக்ஷிகள்
ஓடிவிளையாடி வேடிக்கைபார்க்கலாம் (வாரும்)

தமயந்திசொல்-வசனம்.

சதுர்த்தசபுவன சமஸ்தமான தேவரும் புகழ்ந்துகொண்டாடத் தக்கதாக எனதுபிராபல பிரதாபசக்ரேஸ்பரா சரணஞ்சரணம் அடியாளை இந்தராஜசபையி லழைப்பித்தகாரியம் இன்னதென்றருள் செய்ய வேணுமையாசுவாமி.

தமயந்திசொல்-தரு-இ-ம்-தோடி-திரிபுடைதாளம்.

என்னையுமிங்கேயழைத்ததேதையா-என்பிராணநாதா
என்னையுமிங்கே யழைத்ததேதையா
சொன்னமுடிமன்னர் தொண்டுசெய்தேதொழுந்
தன்னிகரில்லாச்சக் ராயுசபூபாலா (என்னை)
மூந்திவருங்காலமுங்கண்டுமந்திரிகேள்-லோகநீதியுங்கொண்டு
மூடிவணங்கிமொழியுஞ் சபைதனிலே-சாமி
கந்தகஸ்தூரி கமழும்புயாசல
செந்திருமேவிய தீரவெய்யானே (என்னை)
எண்ணேழுதேசத்திராஜகிரீட்டிகளும்உந்தன்பாதம்போற்றி
யிணைஞ்சுபாவித் தொழுஞ்சபைதனிலே-சாமி
புண்ணியனேநளா பூபதியேமன்னு
மெண்ணமில்லாமலே யென்தன்சகியுடன் (என்னை)
வித்வசனர்கண்டு மேவியமாதர்களும்-அபிநயமுமபாத
விந்தைபுரியுமுந் தன்சமூகந்தன்னில்
இத்தன்னாளு மிலாமலென்றன்-சாமி
சித்தமகிழ்ந்துத் தெரிவையர்களுடன் (என்னை)

இராஜன்-விருத்தம்.

கன்னலேமயிலேமானே கர்ப்பகக்கனியேதேனே
வுன்னையிங்கழைத்தசெய்தி யுண்மையாயுரைக்கக்கேளாய்
பன்னகமணிமாடத்தின் பாவுகண்ணாடிதன்னில்
அன்னப்பக்ஷியைக்கண்டின்றே லாவலாயழைத்தேன்பெண்ணே

வசனம்-அகோவாரும்பெண்ணே தமயந்திநம்முடையசபாமண்டபத்திலிருக்கிறநிலக்கண்ணாடியிலே அன்னப்பக்ஷியினிடநிழலானதுதெ

சியலந்தநாடு அதினாலேயுன்பேரில் அபேக்ஷையாக அழைத்தேனடி பெண்ணே.

பொது-விருத்தம்.

தங்கப்பிரகாசமான சந்திரமண்டபத்தி
லிங்கிதரதிதன்போ லேகாந்தமாயிருக்க
மங்கையர்த்தமயந்தியு மருவியமஞ்சமீதிற்
சங்கிதநளராஜேந்திரன் சயனமேசெய்கின்றாரே.

தரு-இ-ம்-சாவேரி-ஆதிதாளம்.

சயனமதுசெய்தாரோ-நளராஜேந்திரன்-சயனமதுசெய்தாரோ
கயல்விழித்தமயந்தி - கனகமடிதனிலே (சயன)
நிறைகதிரொளிசொர்ணச்-சுவரொடுபவழத்தூண்
கிளைகிளை யொருகோடி
மரகதமணிவச்ர-வயிரத்துலாமிழைத்த
மலர்ப்பணிப்பலகை சேர்த்து
எழிலிந்திரையொளிக்குட் செய்தமண்டபங்கோடி (சயன)
அரவமணிமிகுத்த-தீபக்கிளைகிளை
யலங்காரமாய்த் துலங்க
பாவியநவ தீபமனந்தங் கோடி
பத்திபத்தியா யிலங்க
கருமுகிற் குழல்நேசகன்னிகவரிவீச (சயன)
ஆயிரத்தெட்டுமாத்துத்-தங்கச்சங்கிலியுஞ்ச
லழகுபஞ்சணை யிட
தூயமலர்ப்பிச் சொகுசாய்த்தழுவணைமேற்
சுகந்தவாசனை மூட
நாயகிதமயந்திநளினமின்னுடன்சேர்ந்து (சயன)

பொது-விருத்தம்.

உத்தமிதமயந்திப்பெண் ணுடன்மகிழ்ந்துமுசத்தூளி
மெத்தையினித்திரைசெய்து வேந்தனுங்கனவுகண்டு
சித்தமாயனந்தல்நீங்கித் தேவிகள்முகத்தைப்பார்த்துக்
கொத்தவநளராஜேந்திரன் கூறுவான்கூறுவானே.

இராஜன்-கனவுகண்ட-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி.

திரிபுடைதாளம்.

கனவுநான்கண் டேனே-அடிபெண்ணே
கனவுநான்கண் டேனே
மனமகிழ்ந்தின்பசை யோகத்துடன்கூடி
மஞ்சதநித்திரை செய்யும்பொழுதனில் (கனவு)
ஊர்க்கவென்னேவல்செய் புஷ்கராஜன்வந்தென்னுடன்சூதாடவும்
பார்க்குளுயர்கிட்ட பதிசெல்வமாசையும்
பந்தியந்தனிற்றோர்க்கவும் அடிபெண்ணே

கார்குலாவும்விதர்ப்ப தேசந்தனிற்செல்லவென்
காதலன்றனை யுனதுதங்கைதமூன்
னேகிடும்படி யேநடத்திட (கனவு)

வனந்தனிலேநாமிருவருமாய்க்கூடிமனந்தளர்ந்தேகிடவும்
இளம்பிரிந்ததுபோலு மனந்தன்னைப்பிடித்திட
வெனந்துயில் போய்விடவும்
கனங்கொள்கதிர்மறைந்த இரவிலோர்மடத்தினிற்
கன்னியுனைப்பிரிந் துன்னியரவொடு
பின்னியனலது தன்னில்நடத்திட (கனவு)

கதிக்குமிரிதுபன்னன்பால் விதிக்கும்வேலைகள்செய்துகாலம்நாள்போ
மதிக்குமுயர்வதன மானேயுனக்குமறு (க்கவும்
மணமென்றுகேட்டிடவும்
பதிக்குள்ளுயர்விதர்ப்ப தேசந்தனிலெல்லோரும்
பருதிமணிமுடி கருத்தியணிந்திட
வுறுதிநிடதநன் னகரிலிருந்திட

இராஜன்-வசனம்.

அகோவாரும்பெண்ணே தமயந்தியேதோநான் புஷ்கராராஜாவினி டமாகச் சூதாடிநமமிட-ஆசும்பதியும்பிறந்து போனதும்,நாமிருவரும் வனத்துக்குப்போனதும்,ஒருவரையொருவர் பிரிந்ததும்,உன்னைப்பாம் புவந்து சுத்திக்கொண்டது,நானிதுடன்னராஜாவினிடமாக யேவல்ப ணிவிடைசெய்துக்கொண்டிருந்தும-மறுபடிநாமிருவரும்பட்டாபிஷே கஞ் சூட்டிக்கொண்டதும்,இப்படிக்கு விபரீதகாலங்களாய் சொற்பன ங்கண்டேண்டிபெண்ணே.

தமயந்தி-விருத்தம்.

ஞானநளேந்திரபூபா சொற்பனங்கண்டாலென்ன
நாரணன்கிருபையாலே நமக்கொன்றுமனுகாதையா
வீரனேஜினேவல்லாமல் வேறினியில்லையெந்த
ஞருயிர்ப்பிராணநாதா வையமுமகற்றிடீரே

வசனம்-அகோ சரணஞ்சரணமையாசுவாமிஎனதுபிராணநாயகா கன விலேபட்டகாயத்துக்குகாயங் கட்டுகிறவர்களுமுண்டோ ஆனதினு லேதேவரீரவர்கள் ஒன்றுக்கும்விசனப்பட வேண்டாமையாசுவாமி

பொது-விருத்தம்

துளிர்மதுசுகந்தமாது சொருகுகுந்தளவேற்கண்ணாள்
தளபதிநளனைக்கூடித் தரித்துவயிற்றிற்கர்ப்பம்
வெளிரிட்முகந்தனைக்கண் மிகக்கறுத்திடைபெருந்துங்
கிளிமொழிதமயந்திப்பெண் கெர்ப்பமாய்வருகின்றாள்.

தமயந்திகெர்ப்பமாய்வருகிற-தரு-இ-ம-கேதாரகௌளம்-ஆதிதாளம்

கெர்ப்பத்துடனே
கெர்ப்பத்துடனே
வந்தாளே-தமயந்திதேவி
வந்தாளே

அற்புதமடமாத ரனந்தம்பேர் குழலே
பொற்புள்ளமதன்ரதி பொன்பணி தாழவே
பொங்கமதாய்வெகு மங்கையர் நடமிட
விங்கிதலனமெனத் திங்களி லாந்துள (கெர்ப்ப)

திருகுசங்கிலிகுப்பிச் சொருகுங்குழல்கள்சோர
மருமலரணிந்துபொன் மதிமுகம்வேர்வைசாரப்
புருவங்களைவளைப்பப் புதியதாம்வெளுப்ப
பொங்குசெழுங்கனி யிருசொலதாகவே
அங்கமுடன்பெறு சங்கையில்லாமறு (கெர்ப்ப)

தோகைமயிலைப்போலுந் தேகம்பசுநரம்புந்
தோன்றும்விழியின்சுவை வேண்டிமனம்விரும்பும்
வாகனமோகினியென்ன லோகநாயகிமுன்னாள்
வஞ்சியின்மிஞ்சியே செஞ்சொல்தருங்குயில்
குஞரமும்பயி லுஞ்சரிநடையென (கெர்ப்ப)

புடைத்துப்பினைத்துவிம்மித் தடித்திருமாதுதங்கக்
குடத்திநமுலைதனி யடர்கருப்பெறுமணி
வடத்திலைவயிற்றுன்னிப்பிடித்துத்துடித்துக்கன்னி
மங்களகாமிகு செங்கதிரொளியென
வுந்தருபுதல்வனை யங்கருள்புரிந்திடும் (கெர்ப்ப)

பொது-விருத்தம்.

பருத்திருதனத்தாளான பைங்தொடிதமயந்திக்குத்
தரித்ததுவயிற்றிற்கர்ப்பந் தவத்தினுலெனமகிழ்ந்து
கருத்தினில்நளன்சீமந்தக் கலியாணஞ்செய்யவெண்ணிப்
பொருத்தமேபார்க்குநல்ல புரோகிதரழையென்றனே.

பொது-விருத்தம்,

அஞ்சர்மலருணகாலமாற்றினிற்றீர்த்தமாடி
நெஞ்சுடன்காயஸ்திரிகள் நேமமாய்முடித்துக்கொண்டு
ரஞ்சிதப்பழுப்புச்சோமனுற்மடிபூணூலிட்டுப்
பஞ்சாங்கம்சொல்லும்வேதப்பிராமணர்வருகின்றாரே.

பிராமணர்வரு-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

வாசகான்மறையோன்வந்தானே பஞ்சாங்கஞ்சொல்ல
வாசகான்மறையோன்வந்தானே
காசினியோர்புகழ் போஜதுரந்தரன்
ராஜநளேந்திரனுக்கு நேசமங்களஞ்சொல்ல (வாச)

கையினிற்பஞ்சாங்கம்பிடித்து - பிர்மமந்திரக்
கற்பனைவிடாமற்படித்து
செய்யகலையன்புதொடுத்து - வாரக்கிரகங்கள்
சித்திக்கும்ராசிகளெடுத்து

துய்யநாமந்தானணிந்து சுத்தமாய்ப்பூணூற்புனைந்து
பையப்பையவேநடந்து பத்மபாதாரமகிழ்ந்து (வாசா)

அக்ஷதையாவர்க்குந்தரித்து-ஆசீர்வதித்து
அனந்தசாத்திரமுங்குறித்து
மெச்சியேமகிழ்க்குதூரித்து துளபமாலை
மெய்யினிலணிந்துபாசித்து

கச்சரவினிற்றுயிலும் நாரணமுகுந்தநந்தா
அச்சுதகோவிந்தாவென்று அனந்ததோத்திரங்கொண்டு (வாசா)

ஓமலக்கியங்கள்செய்யவே-தர்ப்பைகள்கொண்டு
ஓதுமந்திரங்களுய்யவே
பூமலர்தேவர்கள்பெய்யவே துந்துமியார்ப்பப்
புண்யவசனங்கள்செய்யவே

சோமசூரியகுலமன்னன் தோகைதமயந்தியர்க்கு
மாமணஞ்செய்யநூலோத மகிழ்வுடன்சபையில்வேத (வாச)

(வ-ம்.) அகோசிரஞ்சீவி ஆசீர்வாதமையா நளச்சக்ரவர்த்திமகாநுபாவரே நம்மையழைப்பித்தகாரியம் இன்னதென்று சொல்லவேணும் மகாராஜனே.

இராஜன் வசனம்.

அகோசரணஞ் சரணமையாசுவாமி நம்முடைய பட்டஸ்தேவியாகிய தமயந்திக்கு ஐந்துமாதம்கெர்ப்பமாய்வருகிறபடியினாலேசீமந்தமுகூர்த்தஞ்செய்யவேணும் ஆனபடியினாலே நாள்முகூர்த்தம் பார்த்துச் சொல்லவேணுமையாசுவாமி.

பிராமணன் விருத்தம்.

நிபனேநளராஜேந்திர ஸ்ரீமந்தமுகூர்த்தஞ்செய்ய
[illegible]முஷிரகாசி வளர்திதிநட்சத்திரங்கள்
சீருளதேவியின்று செம்மையாயிருவருக்கும்
பூரணமானயோகம் பொருத்தமாயிருக்குதையா.

(வ-ம்) அகோவாருமையா நளமகாராஜாவே நாளதுமாதம் ஏழாந்தேதிசுக்கிரவாரம் அமரபக்ஷம் சப்தமிதிதி அஸ்தநக்ஷத்திரம் கூடியசுபதினத்தில் ஸ்ரீமந்தமுகூர்த்தஞ்செய்யலாமையா ராஜனே.

பொது-தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

சீமந்தக்கலியாணஞ்செய்தார் அந்தத்தேவர்கள்பூமழைபெய்தார். செக

வீமன்றனதுசொஸ்பாரித்தார்
வேந்தர்கள்தன்மனம்பூரித்தார்
மாமந்திரபீடிகை யாமந்தச்சூடிகை
வற்னமணிக்கொடி பன்பணித்துஞாட்டி

கூ

தாமந்தநீலமரகதக்கோமளச்
சம்பிரமமாடத்திற் பொன்மயில்கூடத்தில் (சீமந்த)

சித்திரச்சாலைகள் சோடித்தார் - மணி
முத்திரச்சாலை முடித்தார்
சுற்றிலுமணிமாலைத தூக்கினார் - புட்பஞ்
சுகந்தபரிமளங் தாக்கினார்
பத்திபத்தியாக வாலாத்தியேந்தியே
பங்கயமலர்விழி நங்கையர்நடமாட
உத்தரதேசாதி வர்த்தனர்மகிழவும்
ஓமங்கள்வேதியர் தூபங்கள்செய்யவே (சீமந்த)

மங்கைக்குவார்குழம் பின்னினார்-மணி
வாளரவச்சுட்டி யென்னினார்
கொங்கைக்குவாரமுத் திருக்கினார்-மணிக்
கோவைவடங்களை பெருக்கினார்
செங்கைக்குச்சூடப முன்கைக்குப்பொன்வளை
திங்கணுதலிற் றிலதமழுத்தியே
பங்கயபாதத்திற் றண்டைச்சிலம்பிட்டுப்
பச்சைநற்சுட்டிகைப் பாடகமுடுத்தியே (சீமந்த)

சொர்ன்னமணிமுடி சூட்டினார்-தங்கத்
துய்யசிஜாரங்கி மாட்டினார்
வர்ன்னப்பதக்கம் பூணந்தார்-கெந்த
வாடைசவ்வாது திமிர்ந்தார்
தன்னமைசுடர்வடி வாள்கையிலாடவே
சந்திரவட்டக்குடை தன்னிழலாடவே
மன்னர்க்குமன்ன ணரேந்திரன் றமயந்தி
மங்கைக்குஞ்சோபன மங்களம்பாடவே (சீமந்த)

பொது-விருத்தம்.

சீமந்தமானபின் தேசமன்னவருஞ்சென்றார்
வீமராஜேந்திரன்றானும் விதர்ப்பதேசத்திற்போனார்
தாமரைமலர்முகத்தாள் தையலீரைந்துமாதம்
நேமமாய்நிறைந்தபின்பு நேரிழைவருந்துவாளே.

தமயந்தி-பிரசவவேதனைபடுகிற-தரு-இ-ம்-தன்யாசி-ஆதிதாளம்.

என்னசெய்குவே னடிபாங்கி-யேதுநான்செய்வேன்.

அன்னமேயென்மனமுமஞ்சுதுயென்னமா வுய்வேன்
சிற்றிடைநோகுதே யடிமாதே செப்புவா யீதே
மெத்தநீர்ச்சுண்டி வலிக்கு தித்தனைப் போதே
அரையுளைக்குது துடைநடுக்குது அன்னமே பாங்கி
இரையளவுஞ்சகிக்கலாமோ யென்மனந் தாங்கி

அடிவயிற்றை மிகவலிக்குது அம்மம்ம தாயே
அடிக்குதேபிள்ளை யுள்வயிற்றிற் சுருசுருப் பாக
படபடவென்றுடல் நடுங்குதென்னடிபாங்கிசகி மாரே
சடலமெல்லாம் நோகுதென்னடி தாதிசகி மாரே
தன்னினைவுமறந்து தென்மனந்தாளா தின்னே ரம்
மன்னவரிடமாய்ச்சொல்லி வந்தாலுப காரம்

பொது-விருத்தம்.

சட்டமாய்த்தலைநரைத்துத் தாள்வாயுமூக்குநீண்டும்
வொட்டியவயிறுமார்பி லுத்தோல்மூலையுமாட
அட்டலட்சுமிக்கொப்பான வனிதமயந்திமுன்னே
கெட்டியாய்த்தடியுமூன்றிக் கிழவியுந்தோன்றினளே.

மருத்துவக்கிழவிவருகிற-தரு-இ-ம்-அடாணா-ஆதிதாளம்.

நரைத்தலைக்கிழ நாயகி வந்தாள்-மருத்துவம்பார்க்க
நரைத்தலைக்கிழ நாயகி வந்தாள்
உரைத்ததடியையூனி-வொட்டகம்போலேகூனி
யிரைப்புந்திகைப்புமாய்நின்று-யிருமிக்கொண்டு (நரைத்தலை)

திருத்தமுடனவர்க்கும் வருத்தமில்லாமல்பெறும்
பார்ப்பேன் பிறந்தபிள்ளை
உருத்தெரியாமல்மூடின் கறுத்தகிரகதியெல்லாம்
தீர்ப்பேன் பச்சிலைமூலிகை
மருந்துவகைகளெல்லாஞ் திறத்துடனேபிடுங்கிச்
சேர்ப்பேன் தரித்தபிள்ளை
வயிற்றில்மரித்திடினுங் தாக்ஷதியில்லாமற்பெறக்
காப்பேன் சேதமில்லாமல்
கன்னிமார்களுக்கொரு வின்னமில்லாமலருஞ்
சன்னிசயித்யமெல்லா முன்னித்தெரியுமென்று(நரைத்த)

நெற்றுச்சுரைக்கினையாயொற்றிடுந்தோற்பைமுலை
யாடத் தலைநடுங்கிக்
குற்றிருமலுடனே சற்றுங்குசப்பரிந்து
வோடச் சங்கையில்லாமல்
மெத்தவயதெனவே புத்திரர்பேரவிளை
யாடக் விளைவிளைபோல்
ஒத்தகண்களிற்பீளை மெத்தவடிந்துபாணி
யோடக் கீழுமேலுமாய்
பார்த்துத்தமயந்தியை வேர்த்துச்சடலமெங்கும்
மூத்தனைனலும்பஞ்சுக் கோர்த்துமிகவெளுத்து (நரைத்த)

மருத்துவக்கிழவிசொல்-விருத்தம்.

அன்புளதமயந்திப்பெண் ணன்னையேசொல்லக்கேளாய்
மூன்பெறுதலைச்சனுக்கு மிகுதியாயவலிகள்தோன்றும்
பின்பெறும்பிள்ளைக்கெல்லாம் பேதையேவலிதோணாது
தன்செயலாலேவுந்தன் சஞ்சலந்தவிர்த்திடாயே.

வசனம்-அகோவாருமம்மாதாயே தமயந்திதேவிமுன்னம்பிரசவகாலத்திலே அதிகவேதனையாயிருக்கும் ஆனதினால்தாங்கள் சஞ்சலம்படாமல்சுவாமியை நினைத்துக்கொண்டிருமம்மாதாயே.

சீசபத்தியம்.

தயங்குதேயென்மனசு தாளுமோவம்மணி
சடலமோவேதனை தாங்கவெளிதோ
மயங்குதேபுத்தியு மலர்விழிகளிருளுதே
மைந்தனும்நெஞ்சினி லேறுதம்மா
பயங்களுண்டாகுதே ப்ராவிநானென்னசெய்வேன்
பதருதேயுடலுநொந் துருகுதம்மா
நயங்களாய்ச்சொல்வதும நாட்டினிலெவர்களும்
நடுங்கவேசெய்கால விடங்களம்மா
தைரியமென்பதுசொல் தாயுமிலையே
குயின்மொழித்தாதிகள் குழந்தையெனது
வயிர்விடுதருன்னமும் வருகுதிலையே
செயல்துணைவருந்தாயுமான செல்வமே.

உ-வது-பிரசவேதனை-புலம்பல்-தரு-ராகம்-புன்னாகவராளி.

ஏகதாளம்.

ஐயையோநானென்னசெய்வே னடிவயிறுளைக்குது
ஆற்றமுடியுதில்லையே — சகிமாரே
செய்யாதுஞ்செய்யுதெந்தன் சித்தமுங்கலங்குவதுந்
தெய்வகற்பனைத்தானோடி — அம்மமாரே
உற்பனமாகியகெர்ப்ப மிப்படிவருத்துமென்று
விளவுநானறிகிலேனே — சகிமாரே
பொற்புளமடந்தையர்கள் புத்திரப்பிறசோபமன்றிப்
பூவுலகிலாருமுண்டோ — சகிமாரே
காலனென்பதாகுமிதைப் பாலகனென்றேமொழிந்தால்
காரணமேதென்னசொல்வீர் — சகிமாரே
மேலெல்லாம்வலிக்குதையோ விஷம்போலேறுதேயெங்கும்
வேதனைகடினமாகுதே — சகிமாரே
தேகமுநடுங்குவதுஞ் சித்தமுங்கலங்குவதுந்
தீமருந்தறிவீரோ — சகிமாரே
கோகிலமாமொழியேயென் குலதெய்வந்தனைவேண்டிக்
கொண்டுதிருநீறணிவீர். — சகிமாரே

### பொது-விருத்தம்,

அதிகமாய்ப்பிரலாபித்தே யருணவதன்கர்ப்பமூத்திக்
சகிர்வனொளிவைப்போலக் கறமித்தான்பிரமதேவன்
சதிர்பெறுந்தமயந்திப்பெண் சஞ்சலமிகவுந்தீர
மதிகுலம்விளங்கவேதான் மைந்தனும்பிறந்திட்டானே.

### தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

பாலகன்பிறந்தானே சுபதினத்தில்-பாலகன்பிறந்தானே
கோலநளன்மகிழக் குவலயமேபுகழச்
சீலன்குலம்விளங்கச் செயபேரிகைமுழங்க (பாலகன்)
தத்தைமொழியாள்இன்னக் குத்துமுலைப்பாலுண்ணச்
சித்தமகிழ்ந்துகூவி மெத்ததமயந்திதேவி (பாலகன்)
விராதானம்நளராஜன் மிகுதியாய்த்தானங்கொடுக்க
ஆசனுந்தழிகவே யிரவலர்பெருகவே (பாலகன்)
விந்தைமதிகுலத்தில் சிந்தைமகிழ்ந்துதித்த
கந்தனெனவேசொல்லும் சந்திரனெவேநல்ல (பாலகன்)

### விருத்தம்.

மைந்தனும்பிறந்தானென்று மன்னவனளராஜேந்திரன்
துந்துமியார்ப்பவெங்குஞ் சோடசதானமீந்தார்
மைந்தற்குந்தமயந்திக்கு மஞ்சணீராட்டச்செய்துப்
புந்தியுமகிழ்ந்துமாது புகழ்ந்துதாலாட்டினளே.

### தமயந்திதாலாட்டுதல்-தரு-இ-ம்-கொண்டா-ஆதிதாளம்.

ஆரா ராராரோ ஆரா ராரா ராராரோ
ஆரா ராராரோ ஆரா ராரா ராராரோ

தங்கமுடியணிந்து-எந்நாளும்-தழைக்கும்புவியனைத்தும்
செங்கோல்செலுத்திவரும்-நடேந்திரன்-செல்வமேகண்வளரீர் (ஆ)
இந்திரர்வானவரும்-புகழுநல்ல-இளமயில்போல்வளரும்
சந்திரகுலந்தழைக்க-வந்துதித்த-தங்கமேகண்வளரீர் (ஆ)
தெள்ளமுதேயினிக்கும்-மதுரம்-தெகட்டாதமுக்கனியே
வள்ளல்நளேந்திரனுர்-மகிழ்ந்திடும்-மைந்தனேகண்வளரீர் (ஆ)
மண்டலந்தோர்மதிக்கும்-நவரத்ந-மாகதமேதேனே
கொண்டல்மணிக்குயிலே-மயிலே-குழந்தையேகண்வளரீர் (ஆ)
ஆலைக்கரும்பமுதே-சங்கீத-அரும்பொருளேயெனது
மாலைமணிவிளக்கே மயிலேயென்ன-மைந்தனேகண்வளரீர் (ஆ)
ஏக்கம்பிடியாமல்-குழந்தையென்-றில்லையென்றெண்ணுமல்
பாக்கியமானதுபோல்-வந்துதித்த-பாலனேகண்வளரீர் (ஆ)
மெத்தவருந்தவேநான்-சலித்து-மெலிந்துயிர்வாடாமல்
அத்தனருளதனுல் வந்துதித்த-மையனேகண்வளரீர் (ஆ)
பாரிலுள்ளோர்புகழ்-ராஜாக்கள்-பணிந்திடக்கீர்த்திபெற்ற
வீரசேனன்றன்-பேரனெனவந்த-மெய்யனேகண்வளரீர் (ஆ)

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் நளச்சக்கிரவர்த்தி மகாராசாவுக்குப் புத்திரசந்தானமுண்டானபிறகு சகலதேசத்து ராஜாக்களும் மகிழ்வதாக நாமதேயமிட்டு வித்தியாப்பியாச முதலானதுகளுஞ் செய்விக்கச்செய்து மன்மகிழ்ச்சியா யிருக்கிறகாலையிலே புஷ்கரமாநகராளப்பட்ட புஷ்கராசா தன் கொலுவுக்கு வருகிறவிதம் எப்படியென்றால்.

பொது-விருத்தம்.

இக்குவின்மாரனென்ன விருதுபறக்கவர்வீச
மைக்குழலிரதியொத்த மாதர்கணடனஞ்செய்யச்
சொற்கவிராயர்பாடச் சூழ்ந்துமந்திரிகள்போற்றப்
புஷ்கராஜதீரன் புனிதன்போற்கொலுவந்தானே.

புஷ்கராஜன்-கொலுவுக்குவருகிற-தரு.

இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

இந்திரனுமிவனென்னவே எல்லோருமகிழவெகு
தந்திரன்புஷ்கராஜன் சபைதனில்வந்தனனே
சுந்தரஞ்சேர்முகமிலங்க விந்தைதரத்நமுடி துலங்கத்
துங்கரணசிங்கமென மெங்கும்புகழ்வைபோக
வச்சிரமணிப்பதக்கமின்ன வளைகள்வெயில்பரக்கக்-குழை
மகரமணிக்குண்டலங்க ளகிலமெங்குஞ்சிறக்க
கச்சைப்படைக்கலமுங் கையில்வடிவாளுறக்க-வுயர்
கானமயில்வீரனைப்போல் தேகவொளிசிறக்க
நற்சரவமணியிழைந்த பொற்சரிகைத்துயிலணிந்து
நளினமின்னார்நடனமாட நாவலர்களிசைபாட (இந்திர)

ஆனைரதகெஜதுரகஞ் சேனைபடைசூழ்ந்தினம்
அமைச்சர்மதிமந்திரிமா ரடியிணையினிற்றொழத்
தானதிகசயமிகுந்த சந்திரகுலத்திலகனென்னுந்
தத்துபரிமீதுலவுஞ் சித்திரவில்விசயமிகும்
செந்திருவாழ்மடமாது சிறந்துவிளையாடவிந்த
தேசமெங்குமிவன்புகழைத் தினந்தினங்கொண்டாட
மூந்தவருந்தசிபலத்தால் முயர்ச்சியெங்குங்கூடவெகு
மோக்கத்துடனெதிர்த்தமன்னர் முறிந்துமபயந்தேட
சுந்திரனளராஜனுடன் பந்தயச்சூதாடிவென்று
தொல்லுலகமுழுதாளும்வல்லவனரேந்திரபதி (இந்திர)

பொது-வசனம்.

அகோகேதப்படியென்றால் இந்தப்பிரகாரம் புஷ்கரமகாராஜாவானவர் கொலுவுக்குவந்த சமாச்சாரந்தெரிந்து சூரியபகவானுடையபிள்ளையான சனிசுபரபகவான புஷ்கராஜாவினிடமாக வருகிறவிதம் எப்படியென்றால்.

பொது-விருத்தம்

புனிதன்மாலயனீசர்க்கும் புகழ்தந்தைதக்கதிரோனுக்கும
சனிதிசையிந்திரனுக்குஞ் சகலசீவாத்மாவுக்கும
இனிரிஷிகெற்பத்துக்கு மேழலோகட்டானுனை
சனிபகவானும்வந்து சபைதனிற்றோன்றினனே

சனிபகவான்வருகிற-தரு-இ-ம-சௌராஷ்டிகம்-ஆதிதாளம்.

குவலயம்நடுங்கிடச் சனிபகவானிதோ கோபமாய்த்தான்வந்தார்
தவமுனிவர்களொடு ரிஷிகளிந்திரன்முதல்
தானவர்வானவர் மானவரொடுங்கிட (குவல)

நீலமந்திரக் கோலும்-பருத்தவுடல்
சாலவுந்தியும் காலும்
சூலமுந்தண்டு கோலும்-நெத்தியிலிட்ட
நாமமுங்கர நாலும்
ஞாலமுந்தியங்கிட நான்முகன்மயங்கிட
வேலனுமிரண்டிட விமலனுமருண்டிட (குவலய)

ஈசனுங்கலை விட்டே-சுடலையில்
வாசமுந்துயில விட்டேன்
பூசான்றலையைப் புட்டேன்-மலைப்பாம்பாக
வாசவன்றனையும் விட்டேன்
பாசமோடுமனைப் பாரில்விழுகவென்று
கோசிகனைப்புவியில் குன்றச்செய்குவனென்று (குவல)

மனக்கவலையுந் தீர்ப்பேன்-துதிப்பவர்
வாழ்வுபெற்றிருக்கவைத்தே காப்பேன்
நினைக்கவுமறி யாதபுல்லர்களை
நீசர்க்குடியையாக்கி பிரியாத
ஆனைந்துலகுநளனை யாளவைப்பேனோவென்று
வனத்தில்விடுவனென்று-வாசகம்பொய்யோவென்று (குவலய

புஷ்கராஜன்சொல்-விருத்தம்

கார்விறமாகயங்க கலைப்பகவானேபோற்றி
வாரிசூழ்புவியிற்றேவா மனிதனாய்ப்பொருட்டாயெண்ணிப்
பூர்ணமாஞ்சிதேவி புறப்பட்டகதையைப்போலச்
சீருடன்வந்ததென்ன திருவுளம்பதறுவீரோ

அகோ சரணஞ் சரணமையா சுவாமி சனீசுரபகவானே அடியே
னை ஒருபொட்டாயெண்ணி வந்தகாரியந் திருவுளம் பற்றவேணுமை
யா சுவாமி

சனிபகவான்சொல்-விருத்தம்

வானவர்புகழுண்டாகி வளரும்புஷ்கரனேகேளாய்
ஆனதுவொன்றுமல்ல வம்பகாரியமேயாகும்

நான்மெத்தவாசையாலே நற்றமயந்தியாளை
மாணிடனளனுஞ்செய்த வஞ்சகந்தனைக்கேட்டாயோ.

தரு-இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்.

நளச்சக்கிரவர்த்திசெய்த - அந்த - நியாயந்தனைநீகேட்கிலேயோ

விதமானபூலோகத்தில் - அந்த - விதர்ப்பதேசத்திலே யொருபெண்
தமயந்தியென்றவள்பேர் - பூரணச்சந்திரவனத்தைக் கண்டவர்கள்
இமையோர்மயங்கிடுவார் - அந்த - இந்திரன்கூடவேயிச்சைகொண்டான்
என்தன்விகாரமெல்லாம் - அவள் - எவ்வளமாகட்டுமென் றிருந்தேன்
அந்தப்பெண்ணைவிவாகம்நளன் - மணதாசையினாற்செய்ய லாமோகேள்
இருவோரும்வேறாகப் - பிரித் - தென்னவிதனப் படுத்திவைப்பேன்
தருவாகநீதான்போய் - நளன் - றன்னுடன்சூதாட வேண்டுமென்பாய்
பார்ப்பாயனோக்ஷணத்தில் - அவன் - பதியுமாசுனக்காக்கி வைப்பேன்

சனிபகவான் - வசனம்.

அகோவாரும்பிள்ளாய் புஷ்கராஜனே நான்அந்தத் தமயந்தியை க் கலியாணஞ்செய்யவேண்டுமென் றமிகவுஞ் சந்தோஷமாயிருந்தேன் நளராஜாவானவன் தமயந்தியைக் கலியாணஞ்செய்தபடியினாலேநீயிந்த க்ஷணமே அந்த நளன்கிட்டப்போய்ச் சூதாடினால் அவனைத்தோர்க்க வைத்து உன்னைக்கெலிக்கவைத்து அவன்பதியும அரசும்உனக்கேபட்டாபிஷேகம்பண்ணிவைக்கிறேன் நீர்போய்வாரும்பிள்ளாய் புஷ்கராஜனே.

புஷ்கராஜன் - விருத்தம்.

ஈசனையிரக்கவைத்த வென்கலிப்பகவனேகேள்
ராசர்க்குராசனான நளமகாராசனுக்குத்
தாசனுன்கப்பங்கட்டித தன்மையாய்நிற்பன்யானும்
பாசம்வைவதேவர்க்காகப் பயந்துநான்போறனையா.

(வ-ம) அகோ சரணஞ்சரணமையா சுவாமி திருமூர்த்திகளையும் நடு ங்கச்செய்துவைத்த சனிஸ்வரபகவானே அந்தநளமகாராஜனுக்கு நானக ப்பங்கட்டுகிறபடியால் எனக்குப்பயமாயிருக்குது தங்களிட பரிபூரண கடாக்ஷம் அடியேன்பேரிலிருந்தகுமட்டும் அடியேனுக்கொருகுறைவும் வாராது நான்போய்வருகிறேன் என்னைவைத்தாட்சிக்கவேண்டுமையா சுவாமி

பொது - விருத்தம்.

தந்தரமாகச்சொல்லிச் சனிபசவானுஞ்சென்றான்
சுந்தரநளேந்திரன்முன்னே சூதாடப்போகாவிட்டால்
இந்தவேழுலகாட்டாளு மெதிர்பகையாகாதென்று
அந்தமாய்கிடதேச மன்புடன்வருகின்றானே.

புஷ்கராஜா - நளராஜனிடத்தில் - சூதாடவருதல் - தரு
இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்.

நளபதிசமூகந்தேடி - நடந்தான்புஷ்கரராசன்

அழகானசமுகந்தேடி-மசைச்சருடனேகூடி (நளபதி)
கன்னியர்கடனமாட-கவிராஜர்இதம்பாட
மன்னவர்வணங்கிப்போற்ற-மகுடவர்த்தனர்கள்சூழ (நளபதி)
சூதால்நளனைவென்று-தோர்க்க-செயலாமென்று
வாதாடும்புஷ்காராஜன்-மனமகிழ்ந்தேவுல்லாச (நளபதி)
பருதிமகன்சநிசொல்லப்-பண்புடன்றுணிந்துசெல்ல
விருதெனரிஷபக்கொடி-வெற்றியுடன்கொண்டுகெடி (நளபதி)

புஷ்கராஜன்-விருத்தம்.

திருவடிசரணமையா ஜெயநளராஜகோவே
அருமையாய்ப்பந்தயங்க ளநேகங்களாகவைத்து
இருவருஞ்சொக்கட்டானை யெதிரியாய்விளையாடத்தான்
வருகவேவேணுமையா மனதுசந்தோஷமாக

வசனம்.

அகோசரணஞ் சரணமையாசுவாமி நளச்சக்கிரவர்த்தி மகாராஜானே சொக்கட்டானுடவேண்டுமென்றுமனதால்வந்தேன்தேவரீரும்அடியேனும் பந்தயங்களுக்குப் பதிலாக உம்முடைய சீமைபூமியையும்என்னிடசீமைபூமியையும்யீடாகவைத்தாடுவோம்எழுந்தருளவேணுமையா சுவாமி.

நளராஜன்-விருத்தம்.

சந்தோஷம்புட்கரா நீசமானமாய்த்தானுட்காரு
மூந்தநன் மனப்படிக்கே வுச்சிதமாகவெல்லாம்
பந்தயாபரணரொக்கம் பரிவாரமிருவருக்கும்
விந்தையாவைத்துக்கொண்டு விளையாட வருகுவீரே

(வசனம்) அகோவாரும்பிள்ளாய் புஷ்கராஜனே சொக்கட்டானுட வேணுமென்று மனதாகவந்தீரோ உம்மிடமனதின்படியேபந்தயங்களாகநம்மிட சீமைக்குபூமிக்கும் உம்மிட சீமைபூமிக்கும்பந்தயமாகவைத்து சொக்கட்டானுடுவோம் வாருமையாராஜனே.

சபை-விருத்தம்.

கைமாஞ்சேர்த்திலாத கட்டியவீட்டுக்குள்ளே
கெரய்மலான்றுகாய்த்த கூறுநற்காய்பரப்பிப்
பொய்யவதானமாகப் புரிந்திடுஞ்சொக்காட்டானை
மெய்யென்றுநளராசேந்திரன் விரும்பியேயாடினானோ

நளராஜன்சொல்-தரு-இ-ம-காம்போதி-ஏகதாளம்.

போடுகிறேன்பாரும்-புஷ்கரனேநான்-போடுகிறேன்பாரும்
போடுகிறேன்முன்னூட்டம் பிள்ளையார்தமக்கிது
ஆடுக்குங்குமம்பச்சை யந்தவீடுதோய்ந்துது (போடுகிறேன்)

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் புஷ்கராஜனே முதல்முதலாக எனக்

கு ரூணத்தொண் ணுவிழுந்தது இதுவும் தெய்வச்செயலல்லாமல் வே றல்லநான் துவைந்துக்கொண்டேன் நீர்போடும்பிள்ளாய் ராசனே

புஷ்கரன்சொல்-தரு

நான்போடுகிறேன்பாரும் நளமகிபா-நான்போடுகிறேன்பாருமீ
நான்போடுகிறேனிதோ நலமாவிநாயகர்க்குத்
தான்போடுகிறேன்வீடு தானே துவைந்திந்தா (நான்)

(வ-ம்) அகோவாருமையா நளமகாராசாவே நமக்குமுதல் முதலாகப் பந்தயம் பனிரெண்டு எட்டு இருக்கால் விழுந்தது நான் துவைந்துக்கொ ண்டேன் நீர்போடும்பிள்ளாய் ராசனே

நளராசன்சொல்-தரு.

எட்டேன்பனிரெண்டு மேவிழவேணும்
என்காய்சோடு கட்டவேணும்
பட்டேனேகறுப்பும் பழுமேபழுக்கவேணும்
பாரிலாறெண்ணேழு பகடையும் விழுந்தது (எட்டேன்)

(வ-ம்.) அகோவாரும்பிள்ளாய் புஷ்கராசனே நமக்குப்பந்தயம் இ ரண்டுபகடை ஆறெண்ணேழுவிழுந்தது இதுவும் அரியின் செயலல்லா மல்வேறல்ல நீர்போடும்பிள்ளாய் ராசனே.

புஷ்கரன்சொல்-தரு.

இருக்காலும்பகடை யிதோ-எந்தனுக்கிப்போ
ஒருக்கால்விழுகுமதோ
பெருக்காயிரண்டுமெட்டுமே-குங்குமம்பச்சை
பிராளமற்சோடுகட்டுமே
சுருக்காகப்பனிரெண்டுசொல் லுமுன்போடுகிறேன்
பிரிக்காமல்நெருக்கியே பேர்ந்துயிலோடுகிறேன் (இருக்கா)

(வ-ம்) அகோவாருமையா நளமகாராசாவே இருக்கால்பனிரெண்டு எட்டுஇரண்டுபத்து விழுந்தது நான் சோடுகட்டிப்பேர்ந்து உயிலோடி னேன் நீர்போடும்பிள்ளாய்ராசனே

நளராசன்-வசனம்

அகோவாரும்பிள்ளாய்புஷ்கராசனே நமக்குவிழுகிறபந்தயமெல் லாம் மூணத்தொண் ணு நாலத்தோனாந்து ஆறெண்ணேழுவிழுகிறதே யல்லாமல் பந்தயம்விழவேயில்லே இதுவும்சிவன்செயலேயொழியவேற ல்ல நீர்தானே போடும்பிள்ளாய் ராசனே

புஷ்கரன்சொல்-தரு.

பனிரெண்டும்பனிரெண்டுமே-விழுகுதிந்தா
கனியாகத்துடிகொண்டுமே
கனியெடுத்தேன்விளையாட இனியுன்சம்மதங்கூறும்
மனிதர்வலுவோதெய்வவலுவேனக்கிருக்கையில்
சதிநிசைபலமாகத்தானுண்டவர்செயலில் (பனிரெ)

(வ-ம்) அகோவாருமையா நளராசாவே, நமக்குவிபரீதபந்தயம்விழுந்ததினாலே நான்சோமுகெட்டிப்போந்துபழம்பழுதது விட்டபடியால்உம்முடைய ஆட்டம்தோர்த்துவிட்டதையா ராஜமின.

பொது-விருத்தம்

மத்திபமானசூதை மன்னவனும்போது
சித்தம்பேதளித்துமந்திரி தீராதகவலையாகி
மெய்த்தவம்புரிந்தமாது மின்னினழகமயந்திப்பெண்
பத்தினிசமுகந்தேடிப் பதறியேவருகின்றாரோ

(வ-ம்) இந்தப்பிரகாரம் நளராசாவானவர் புஷ்கரராசாவுடனே சூதாடித் தோர்க்கின்ற சமயத்தில் மந்திரிகண்டு விதனமடைந்து தமயந்திதேவியின் அண்டையில்வந்து சொல்லுகிறவித மெப்படியென்றால்.

மந்திரிசொல்-விருத்தம்.

பைங்கிளிமொழியேயம்மா பாவிபுஷ்கரனைக்கண்டு
சங்கையில்லாமல்ராசன் சமதையாயிருக்கவைத்தார்
வங்கணமாகச்சூதை மகிழ்ந்துபந்தயங்கள்வைத்து
இங்கிருவோருமாட விடார்வருஞ்சொன்னேனம்மா

(வ-ம்) அகோவாருமம்மாதாயே நம்மிடராசாவானவர் புஷ்கரராசாவைச் சரிசமானமாய் உட்காரவைத்துக்கொண்டு பந்தயங்கள்வைத்து சொக்கட்டானுடுகிறபடியால் ஏதோ அனர்த்தகாலமாகத் தோன்றுதம்மாதாயே.

தமயந்திசொல்-விருத்தம்.

மந்திரிராசாவுக்கு வந்துதோவிபரீதங்கள்
இந்தமர்மொழியைக்கேட்டு விருசெவிகுளிர்ந்துதையோ
அந்தமாஞ்சபையிற்சென்று வரசருக்குகந்தவார்த்தை
தந்திரமாகச்சொல்லித் தடுத்துநீவருகுவாயே

(வ-ம) அகோவாரும்பிள்ளாய் மந்திரியே நம்முடைய ராசாவினிடமாகப்போய்ப் உபாயதந்திரமாகச்சொல்லி சூதாடவொட்டாமல்நிறுத்திவைத்து மறுசமாச்சாரம வந்துசொல்லும்பிள்ளாய்மந்திரியே.

மந்திரிசொல்-விருத்தம்.

பார்தனிலநேகமன்னர் பந்தயம்வைத்துக்கூடி
சூரியகுலத்துராசர் சூதினால்மோசம்போனார்
தாரணிமன்னர்க்கன்று தாசியர்க்கடுத்தவித்தை
வீரனேயிந்தசூதை விளையாடவொண்ணாதையா

வசனம். அகோ சரணஞ்சரணமையாசுவாமி நளச்சக்கிரவர்த்தி மகாஞுபாவனே இந்தப் பூலோகத்திலேசூரியகுலத்துராசாக்களில்வெகுபேர்

சூதாடிசகலமுமிழந்தார்கள் இந்தச்சூதாடுகிறதொழில் தேவதாசிகளு கருபயோகமான தல்லாமல் ராசாக்கள் சூதாடக்கூடாதையா சுவாமி

நளராசனுக்கும் மந்திரிக்கும் தர்க்கதரு.
இராகம்-ஆனந்தபாவி-ரூபகதாளம்.

ஏதடாமந்திரி இவ்வார்த்தைகளென்னுடன்சொன்னாய்
ஏதடாமந்திரிநீ இவ்வுலகந்தனில்
சூதினையாடிய தொல்வேந்தரில்லையோ (ஏதடா)

வசனம்-அகோவாரும்பிள்ளாய் மந்திரியே நம்மைச்சூதாட வேண்டாமென்று சொல்லவந்தாயே அதினாலே வருகிற காரணத்தைச் சொல்லும் மந்திரியே

மந்திரிசொல்-தரு.

நிறுத்துமையாவிந்தச்சூதைநிறுத்துமையா
முன்னிந்திரன் சூதினால்பொருத்தனபதியுருத்திழந்தனன்

(வ-ம்) அகோசரணஞ் சரணமையாசுவாமி முன்னாளையிலே தேவேந்திரனானவன் இந்திராணியுடனே சூதாடிதன்னாசும்பதியுமிழந்துபோனானையாசுவாமி.

இராசன்சொல்-தரு.

இழந்தனனென்று எனக்குமுன்னின்று
வளந்தன்னைநீயுரைத்தால்-முன்
தளந்தவர்செய்பொன் அழித்திடுமென்று
தயங்கிமயங்கிப்பயங்காமாதலால்
உளந்தனிலொன்றுங்குறையாமலிப்போது
உன்மொழிகொண்டோநான் பொன்னாசாள்வது (ஏதடா)

(வ-ம்) அகோவாரும்பிள்ளாம் மந்திரியே நம்மைச் சூதாடவேண்டாமென்று கொஞ்சமாகிலும அடக்கம் ஒடுக்கம்பயமில்லாமலென்னெதிரில்வந்துசூதைநிறுத்துமென்றுசொல்லவந்தாயேநாமென்னகொஞ்சமனிதர் கைப்பொருளிழந்துபோமென்று மதிமயங்கிப்பயந்து சொல்வார்கள் உள்ளத்திலொன்றுங் குறையாதுஉன்சொல்லைக்கேட்டோநான் அரசாளுகிறது சீ அப்பால்போம்பிள்ளாய்மந்திரியே.

மந்திரிசொல்-தரு

ஆளுகைதென்று அடிமைமுன்னின்றுநீர்
நீளமொழிகூறலுற்றீர் - அந்த
வேளையறிந்து அரசர்க்கமைச்சன்
விளம்புவதென்று தனும்பாமலேபுவி
தாழ்மையில்லாமலே வாய்மைபொருந்தன்ம
சாஸ்திரத்தின்படி தோற்றியேசொல்கிறேன் (நிறுத்து)

வசனம் - சரணஞ்சரணமையாசுவாமி ராசாக்களுக்குத் தோற்றுமல்

துன்பம்வருங்காலத்திலே மந்திரியானவன் தடுத்துச்சொல்லவேணு மென்று தருமசாஸ்திரத்தின்படியே சொன்னேனையா சுவாமி.

இராஜன்சொல்-தரு.

சொன்னதினுலென்ன அன்னீதமோ இந்தச்
சூதைநீ றுத்துமென்றாய்
பன்னுமறைகளை யென்னெனநினைத்தோநீ
படிக்கிறதென்ன வொடுக்கமில்லாமலே
கன்னியாக்கன் வலைதனிலகப்படும்
காமுகர்போறென்ன லாமோவருந்துறாய் (ஏதடா)

(வ-ம்) அகோவாரும் பிள்ளாய் மதியூகிமந்திரியே இந்தச்சூதினுலே மோசமாகுமென்றுவந்து நீதிமார்க்கங்களைச சொல்லவந்தாயே நாமென்ன ஸ்திரீமயக்கத்தினுல் அகப்பட்டகாமுகர்போலெண்ணிவருத்தப் படுகிறாய் இனிமேல் என்முன்னே நிற்காதேவாளாலே வெட்டிஎறிந்து போடுவேன அப்பாலேபோம் பிள்ளாய்மந்திரியே.

மந்திரிசொல்-தரு.

வருத்தமில்லாமலிருந்தமூடனிந்த
வையகமாண்டிருந்தோமநீர்
பொருத்தமுடிய மரசுங்கனமும்
பொருந்துமபதியுமிருந்துமில்லாமலே
வெறுத்துமதியுங்கருத்துடனெங்களை
விட்டகலச்சதிதொட்டதுகாணிது. (நீறுத்)

(வ-ம்) அகோசரணஞ் சரணமையாசுவாமி இந்தஐம்பத்தாறுதேசமும் ஆக்கினை சக்கரத்தினுலாண்டு தாக்ஷிணியமில்லாமல் செங்கோல்செலுத்திவந்தும் இப்போதுசனியீசுரன் மாய்கையினுலே எங்களைவருத்தப்படும்படியாக விடுகிறதாய்த் தோணுதையா சுவாமி.

மந்திரிசொல்-விருத்தம்.

செந்திரிமாதுபோன்ற தேன்மொழியணையேநானும்
உந்தனல்லுரைப்படிக்கு வேடியேவேந்தனுர்க்கு
விந்தையாவுலகநீதி விளம்பவும்கேட்டிடாமல்
எந்தன்மாமுனையேதாழ்ந்து விங்குநான்வந்தேனம்மா.

மந்திரிதமயந்தியிடம்வந்து புலம்பல்-தரு

இ-ம்-காம்போதி-திரிபுடை-தாளம்.

தாயேதமயந்தி ஞாயமினியென்ன சொல்வேன் - நளச்
சக்கிரவர்த்திசெய்த அக்ரமத்துக் கென்னவுய்வேன்
மாயச்சூதாடவேண் டாம்மதிப மென்றேன் - அந்த
மன்னவனொந்தனைக்கோபிக்கவணங்கி நின்றேன்
தாசன்மொழிதள்ளமோசம்வருமென்று சொன்னேன் - மன்னன்
தாளாமலேதன்கைவாளையுருவினுற் கொல்ல
காசினியாண்டிடும் ராசர்க்குமேதாகதென்றேன் - யானும்

கற்றிடும்வித்தையனைத்தையுங்காட்டிநாகின்றேன்
 கண்டுவணங்கிநான் தெண்டனிட்டேயிக்குவந்தேன் — தெய்வ
கற்பனையால்வருந்துற்பமென்றுளம் — நொந்தேன்
 பொல்லாதபுஷ்கரன் தன்னுடனேமிகச் — சூது — : — அவர்
பிரியமாகவேதேடிக்கொண்டாரையோ — வாது
 சல்லாபமாகிய தன்னரசும்விண் — டாரே — ‥ — சீமை
சகலமும்புஷ்கரராஜனைவொப்புக்கொண் — டாரே

(வ-ம்) அகோவாருமம்மா தாயேநம்முடைய ராஜாவானவர் எவளவு நீதி சாஸ்திரமெல்லாஞ் சொல்லியும் அவர்கேளாமல் அந்தப்புஷ்கராஜனிடமாகச்சூதாடி நம்மிடசீமைபூமியானைரத கெசதுரகபதாதிகளெல்லாந் தோர்த்துவிட்டார் இதுசனீசுரபகவான் மாயையாயிருக்குதம்மாதாயே.

பொது-விருத்தம்.

 மந்திரிசொல்லக்கேட்ட மாத்திரந்தமயந்திப்பெண்
 சுந்தரவதனஞ்சோர்ந்து அடித்துமேமண்ணில்வீழ்ந்து
 சிந்தையுங்கலங்குமபோது சேடியருபசரிக்க
 எந்தநற்பிராணநாதா வென்றுமேபுலம்புவாளே.

தமயந்திபுலம்பல்தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

 ஐயோயிதற்கென்னசெய்வேன்-என்மந்திரியே
ஆருடன்சொல்லி வுய்வேன்
வையத்தரசர்கள் கைதொழுகதும்போக
வைதுநகைக்கலாச்சேவாழ்வுமாசும்போச்சே (ஐயோ)
 பாராளும்வேந்தனிடம் புஷ்கரன்பாவி
நேரச்செய்தானே யடம்
ஆரணசூதைநடத்தோராமல்ராஜனிட
நீராப்பகைமுடித்தான் வாராச்சனிபிடித்தான் (ஐயோ)
 சிங்காரமுடிசூட்டி யோராச்சியபாரஞ்
செய்தெங்கும்புகழ்நாட்டியெ
பொங்கமுடனேவளர்ந்து பொல்லாச்சூதினுற்றளர்ந்து
பங்கப்படுத்தவேதன் படைத்தானேலோகநாதன் (ஐயோ)
 நாடுநகருமிழந்தோம் பஞ்சைகள்போலே
நாமும்மனது தளர்ந்தோம்
பாடுபடவுஞ்சொந்தப் பாலருடனேயிங்கக்
காடேகும்படியந்தக் கலிராஜன்செய்தவிந்தை (ஐயோ)

பொது-விருத்தம்.

 சிந்தையுமெலிந்துவாடித் தேன்மொழிபுலம்பியேதான்
 தந்தைதன்னூருக்கேகத் தனையனையனுப்பவேண்டி
 அந்தமாஞ்சபையிற்சொல்ல வழைத்தநல்லுரையைக்கேட்டு
 இந்திரசேனன்றானு மெழுந்துமேவருகின்றானே.

விருத்தம்.

சென்னிதனில்மகுடமின்னப்பணிகள்பூண்டு
திகழ்குழையில்ரத்நகுண்டலங்களிட்டு
கன்னல்மதனநேகஇணையிவனென்றெண்ண
கவரிகுடைவாத்தியமெக்காளமூதக்
நன்னயமாய்க்கையினில்வில்லம்புகொண்டு
நாரியார்கள்நடனமிடக்களிகள்கூர்ந்து
மன்னர்மன்னர் துதிக்குநளன்சபையைநாடி
மைந்தனிந்திரனிதோவருகின்றானே.

இந்திரசேனன்வருகிற-தரு-இ-ம-கமாசு-ஆதிதாளம்.

வந்தனனிந்திரசேனன்-ஒயிலாகவே
வந்தனனிந்திரசேனன்

| | |
|---|---|
| செந்திருமலர்முகச் | சந்திரோதயந்தயங்கத் |
| தெய்வரம்பையர்கண்டு | சிந்தைமிகமயங்க(வந்தன) |
| சென்னிதனில்மகுட | மின்னிதமாயிலங்கத் |
| திகழுநுதலிற்றிரு | நாமமயமிலங்கக் |
| கன்னக்குழையில்ரத்நக் | கடுக்கன்தகதகென்னக் |
| கழுத்தில்மோகனமாலைக் | கண்டசரங்கள்துன்ன(வந்தன) |
| சரிகையிடைமிகுத்த | சாதருவங்கிதமான |
| தரித்திடையினிற்சற்வ | பூஷணமுமணிந்து |
| யிருசரணத்திற்றண்டைக் | கொலுசுவெண்டயமிட்டு |
| யிகந்தனிலேமார | னிணையாச்சவாரிவிட்டு(வந்தன) |
| வெற்றிக்குடையிலங்க | வெண்சாமரைகுலங்க |
| சுற்றிலுமாதராடச் | சூழ்ந்துகட்டியம்பாட |
| மத்தளமேளதாளம் | வையமெக்குமதிர |
| சுத்தமிகுமாலாத்தி | தோகையரேந்திவர(வந்தன) |

இந்திரசேனன்-விருத்தம்.

ஆவலாயென்னையின்றீவன்னையேசரணஞ்சேனும்
பூவினில்விசனங்கொண்டு பொன்முகம்வேறுபட்டுக்
கேவலமாகவுள்ளங் கிலேசமதடைகுவானேன்
ஜீவரட்சகியேயம்மா திருவடிசரணந்தானே.

(வ-ம்) அகோசரணஞ்சரணமம்மாதாயே தாங்களித்தனை துயரத்துடனே அடியேனையழைப்பித்த காரியம் இன்னதென்று திருவுளம்பற்ற வேணுமம்மாதாயே.

தமயந்தி-விருத்தம்.

கருதியேவுனதுதந்தை காசினியரசையெல்லாம்
பொருதியசூதினாலே புஷ்கரனெப்புககொண்டான்

உருகுதேசிந்தைவாடி யுங்களைப்பிரிந்துநானும்
வரும்விதியறியேனின்னம் மைந்தனேயென்னசெய்வேன்.

தமயந்தி-தரு-இ-ம-சங்கராபரணம்-ஆதிதாளம்.

மைந்தனே நானென்னசெய்குவேன் பட்டமுங்கட்டி
வைத்துநான்கண்டாலோ வுய்குவேன்
இந்தநளனிதமாக வுந்தனைப்பிரிந்துபோக (மைந்தனே)
மிக்கதேர்குதிரையானையும்-ரதங்களுடனே
மிகுதிரளாகிய சேனையும்
பொக்கிஷமாளிகைமனையுஞ்-சூதால்பறித்துப்
புஷ்கரன்செய்தவஞ்சனையும்
மக்கள்மனைவிகளோடு மருவுமுயர்புகழ்நீடு
தக்கவுன்பாட்டனார் வீடுதன்னிதேநீசென்றுகூடு (மைந்தனே)
தாயுடன்தந்தையைப்பிரிந்து-போகிறேனென்று
தயங்கிடவேமனமுழுந்து
காயமோடிருந்தாற்பரிந்து-பொன்முசூட்டிக்
காசினியாளலாமிருந்து
நேசமாய்மொழி தள்ளாதே நெஞ்சினிற்றுயர்வையாதே
வாயினாலென்றும்விள்ளாதே வஞ்சனையிதென்றுன்னாதே (மைந்த)
மன்னவருன்றந்தைமதியே யிந்தச்சூதா-
வந்துமென்றலை விதியே.
இன்னமும்வருமோசதியே-அப்பாமகனே
யேகுவீரொன்று பதியே
பொன்னிரதத்திலேறிப் போய்வாரும்மனதுதேறித்
தன்னிலேவிதனமாறிச் சங்கராபாணங்கூறி (மைந்தனே)

இந்திரசேனன்-விருத்தம்.

அன்புடனென்னைப்பெற்ற வன்னையேசொல்லக்கேளாய்
துன்பமேவந்தால்பெற்ற சுதனையும்பிரிவாருண்டோ
தென்புடன்பாட்டனார்க்குச் செல்லெனச்சொன்னீர்நீங்கள்
முன்புசெய்வினையோவம்மா மொழிந்ததுமறந்திடீரோ.

இந்திரசேனனுக்கும்-தமயந்திக்கும்-தர்க்க-தரு
இராகம்-மத்தியமாவதி-ஏகதாளம்.

தாயேயென்னம்மா பிரிந்துபோகத்
தகுமோநான்சும்மா
ஓயாமலுனைத் தேடிவுள்ளம்பதறிவாடிப்
போயென்பாட்டனைக்கூடிப்பிரிந்திருப்பதென்னடி (தாயே)

தமயந்தி-தரு.

பாலாகண்மணியே வுங்கள்மனதுபதறுமற்றணியே
ஆலமனையுகந்த வண்ணல்கற்பனை இந்தக்
காலமதனைவெல்லுங் காரணமோசொல்லும் (பாலா)

### இந்திரசேனன்-தரு.

காரணமேதுஎனதுடனே கருத்தாகவோது
தாரணிஇழைந்துதோ தயையென்னமறந்துதோ
ஆரணமொழிந்துதோ வரசென்னவொழிந்துதோ (தாயே)
அரசனைக்கண்டான்புஷ்கரன் சூதாலவனிகைக்கொண்டான்
பரதேசியாகவே பதியைவிட்டேகவே
தருவனமெய்திடச் சண்டாளன்செய்திடப் (பாண)
அவன்றலைகொய்வோமகலிகள் துன்பமனுகாமற்செய்வோம்
கவலைப்படுவதுண்டோ காரியமெதுகொண்டோ
புவனமுழுதுங்கூறும்பூவையேவிடைதாரும் (தாயே)

### இந்திரசேனன்-விருத்தம்.

எந்தனைப்பெற்றாய்நீயே யேந்திழைக்கரசேதாயே
விந்தனைப்பிரிந்துநாங்க ளொருபோதுமிருக்கமாட்டோம்
விந்தையாவனவாசங்கள் மேவுவோமுங்கள்பின்னால்
மைந்தனைக்கூடக்கூட்டி வனந்தனிலேகுவீரோ.

(வ-ம்) அகோசரணஞ் சரணமம்மாதாயே எங்களையெவ்வளவோதவமிருந்துபெற்றெடுத்து எங்களைவிட்டுநீங்கள் வனவாசமபோய் வருகிறேனென்றால் நாங்களுங்கூட வருவமம்மாதாயே.

### தமயந்தி-விருத்தம்.

சிறுபிள்ளைபுத்தியாகச் செப்பினைவிந்திரசேனா
உறுதியாவுங்களைய ருலகொருகுடையின்கீழே
அருமையேயாகபெறறா ராக்கினைசக்கரத்தார்
பெருமையேயதிகமென்று புத்திரனுக்குரைசெய்தாளே.

### தர்க்கம்-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

செந்தாமரைவதனதாதை-திருமனைக்கேசெல்வாய்
சென்றிருந்தால்நாங்கள் வந்துசேர்வோஞ்சேருபிள்ளாய்

### இந்திரன்-சேனன்-தரு.

பெண்ணைபெண்ணூர்நாடிஞ்சூதால் பின்னொருவர்க்கீய்ந்து
வுள்ளதெல்லாந்தோர்த்திர்நாங்கள் பிள்ளையென்னசெய்வோம்

### தமயந்திசொல்-தரு.

என்னசெய்விரப்பாவுங்கட்கிடராய்ச்சனியிருந்தான்
பொன்னேநவமணியேநாங்கள் போறோம்வனவாசம்

### இந்திரசேனன்-தரு.

போதீர்வனவாசந்தாயே வுங்கள்பின்னால்வந்தாலென்ன
காரணத்தைநினைந்துயெம்மைக் கடந்துசெல்லத்துணிந்தீர்

### தமயந்தி-தரு.

சொன்னேனினங்குழந்தையென்று தோஷமில்லைசுதனே
அன்னாக்கறிசாதங்காட்டி லகப்படுமோவப்பா

இந்திரசேனன்-தரு.

அகப்படுமோவென்றுசொன்ன வம்மாவுன்னைப்பார்க்க
அன்னங்கறிசாதமெங்கட் கபூருபமோவம்மா

தமயந்தி-தரு.

அபூருபசித்திரமோநா னன்னைசொல்லும்வார்த்தை
தவறாமலேபாட்டானிடந் தான்போயிருப்பீரோ

இந்திரசேனன்-தரு.

போய்வருவந்தாயேவுன் புத்திமொழிதட்டாமல்
ஆயன்செயலுள்ளபடி யாகுமெந்தமம்மா

தமயந்தி-தர்க்கம்-தரு.

இராகம்-பந்துவாரளி-ஏகதாளம்.

உந்தனைபிறந்திருக்கவு மனதுண்டோகண்மணியே - நீங்கள்
சிந்தைவாடியிருக்காமலே செல்லும்நீசுதனே

இந்திரசேனன்-தரு.

செல்லுமென்றுசொல்லி வந்தசேதியொவ்வாதே
சொல்வதுசரியில்லாவிது தோதகவிந்தை

தமயந்தி-தரு.

விந்தையாவிதர்ப்பபுரி மேவிநீயிருந்தால்
எந்தவிதமானாலுமே வந்துசேருவோம்

இந்திரசேனன்-தரு.

சேருவோமென்றுவாதுகூறிச் சேயேநீயுரைத்தா-லிது
போராதகாலமோநாங்கள் பின்னேவருவோம்

தமயந்தி-தரு.

பின்னேவருங்காரியத்தை யெண்ணிப்பாராம-லெந்தன்
மன்னவன்குதாடித்தோர்த்ததற் கென்னசெய்குவோம்

இந்திரசேனன்-தரு.

என்னசெய்வமென்று சொல்லியேகவேவுரைத்தால்
சின்னபாலர்தம்மைவிட்டுச் சேருவதுண்டோ

தமயந்தி-தரு.

விட்டுப்பிரிந்திருக்கவேசகி விதித்தானேபாவி-யெங்கள்
கஷ்டகாலந்தீர்ந்தவுடன் பட்டணம்வருவோம்

இந்திரசேனன்-தரு.

பட்டணத்திற்செல்வோம்நாங்கள் பார்புகழ்வீமன்
இஷ்டமுடனேகவிடை மட்டீந்தருவாய்

(வசனம்) அகோசரணஞ் சரணமம்மா தாயே மாதாபிதாக்கள்சொல்லுகி
ற வார்த்தையைத் தட்டலாகாதென்று தருமசாஸ்திரத்திற் சொல்லியி
ருப்பதினால் நாங்கள்விதர்ப்பதேசம் போயவருகிறோம நீங்களொன்றுக்
குஞ் சஞ்சலப்படாமல் போய்வாருங்களம்மா தாயே.

பொது-விருத்தம்.

வீரியரதத்திலேதான் விளங்கவேபரிகள்பூட்டிச்
சீருடனலங்கரித்துச் செயவெற்றிகொடிகள்கட்டிக்
கார்குழற்றமயந்திப்பெண் கருதினபடிக்குத்தானே
சாரதிதேர்நடைத்தத் தனையருமேகினூரே.

தரு-இராகம்-சௌராஷ்டகம்-ஏகதாளம்.

செயமிகுநளராஜ தீரனருளுமிந்திர சேனன்றேரேறினனே
வயிரவமணி மதிகதிர்போன்றிட
வந்துபவுஷணனும் வாமபரிதான்றிட (செ)
அன்னையேவுந்தனை விட்டுப்பிரிந்திட
லாச்சுதோ வென்றழுது
வின்னமில்லாமலே போய்வாருமென்று
விடை தருகத் தொழுது
பொன்னொளிமேவுந் தமயந்திவல்லி
புத்திரசிகாமணி சித்தமகிழ்ச்சொல்லி (செ)
மழைமுகங்காணாப் பயிரதுபோலவே
வாடிமுகஞ் சோர்ந்து
பழுதுமந்திரி மார்கள்துரைமன்னர்
பலரினங் கூர்ந்து
நிழல்பெருகுக்குளிர்ச் சோலைமதும்மலர்
நிறைந்துவாழுநன் னிடதபுஜபெல (செ)
தாயுமைதட்டாமலு பாட்டனார்தேசஞ்
சலுதியிற்செல்ல வென்று
நேயமாய்ச்சாரதி தேரைநடத்தும்
நிமிஷமெனப் புகன்று
வாயுவேகங்கொண் டெழும்பிப்பாயும்
வாரிபோலதிரவே மண்டலமுங்கெலியும் (செ)

சூதாடு தரு.

இந்தாட்டமுந்தோத்தாயே - எனதுகையும்
பிந்தாமற் பார்த்தாயே
வந்தாட்டந் தன்னாலே - தோர்த்தபந்தயம்
வழங்குமென் கைமேலே
சிந்தாகுலமுமென்னை செயிப்பமென்பதைவிட்டுச்
சந்தோஷமாகப் பந்தயத்தைமுன்னேகொட்டு-நான்போடு

புஷ்கராஜன்-விருத்தம்.

நித்தனேநளேந்திரரூபா நீயிண்டாட்டந்தோர்த்தாய்
மத்தியபந்தயங்கள் வாவிலேயென்தன்கையில்
பத்தியாயானைசேனை பரிவாரமந்திரியோடு
முத்திரைப்பொக்கிஷங்கள் முன்னுகவொப்பிப்பாயே.

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் நளராஜனே நீர்தோர்த்த யிரண்டாட்டத்திற்குப் பந்தயங்களை ஒப்பித்துப்போட்டு அப்பாலேபோம் பிள்ளாய்ராஜனே

நளராசன்-விருத்தம்,

எந்தன்ராயசக்காரா நீ யியலுடனுனக்கக்கேளாய்
அந்தமாகிடதேசம் மானைகள்சேனையோடும்
தந்தரப்பொக்கிஷங்கள் சமஸ்தானமுதலதாக
இந்தபுஷ்கரனிடத்தி லிக்ஷணமொப்பிப்பாயே.

(வ-ம) அகோவாரும் பிள்ளாய் ராயசக்காரா நம்மிட சீமை பூமி யானை ரதகெஜதுரகபதாதிகளெல்லாம் இந்தபுஷ்கராராஜாவினிடத்தில் ஒப்பித்துப் போடும்பிள்ளாய் ராயசககா.

பொது-விருத்தம்,

நளராஜன்சீமையெல்லாம் நலமுடனிழந்தபின்பு
வளர்பதிவிடதர்கோனும் வனவாசந்தனிற்செல்லத்
தளவிலாச்சனிபகவான் றன்னிடசெயலினாலே
நளராஜன்போலபுஷ்கர ராஜனுமிருக்கின்றானே.

(வ-ம்) இந்தப்பிரகாரம் நளராஜாவானவர் புஷ்கராராஜாவுடனே சனிபகவான் மாயையினாலே சூதாடிராச்சியங்கள் சமஸ்தானரொக்கம் இதுமுதலானதுக ளெல்லாந் தோர்த்தபிறகு புஷ்கராராஜாவானவர் அந்தராச்சிய முதலானதுளெல்லாம் கைக்கொண்டு செங்கோல்செலுத்த பிறகு நளராஜாவானவர் தன்னுடையராச்சியமுதலான துகளெல்லாம் புஷ்கராராஜாவினிடத்தில் ஒப்பித்துப்போட்டு விசனப்படுகிற விதங்காண்க.

பொது-விருத்தம்.

பதியுடனைகசேனை பரிவாரமானயாவும்
மதிதப்பிசூதாற்றோர்த்து மன்னவன்றலைகுனிந்து
விதியினாற்சனியன்செய்த விதமென்றுமனதிலெண்ணிச்
சதிமோசமானபின்பு தமயந்தியிடம்வந்தாரே.

இராஜா-முதல்புலம்பல்கண்ணிகள்.

இராகம்-நவரோஸ்-ஏகதாளம்.

இருபத்தொருவம்சமதா யிருந்தோம்நிஷதாபதியில்
கருமவசத்தாற்செல்லவுங் காட்டிற்றலைவிதியே
சித்திரமேவியமாடமுங்கன சேர்கள்தோறும்நவ
ரத்தினமாமணிபீடமும் அதில் நிறைந்தமந்திரிமாரும்
நேயமாகியபெரியோர்வந்து நீசூதாலென்னைத்தடுத்தார்
நியாயமாகவேகேளாமல் நான் நகைதயுந்தொடுத்தேன்
சோதிமோகனமாலையுந்திகழ் சொர்ன்னமாமணியிழந்தேன்
அந்தச்சூதுவேதனைசெய்யுமென்பதை நான் தோணாமலேதொடுத்தேன்

ஆசாரமுமதில்வாசலும் அகிழ் வீதிகள்கடந்தோம்
ஒன்றும்பேசாமலேவனமேகுவே ம் பெண்ணே வழிநடப்போம்

இராஜன்-கலித்துறை

கண்டோர்க்கிருவுட லாவியென் றுனவென் கண்மணியே
விண்டானவர்க்கு மலரயன்செய்கின்ற விதியதனு
லுண்டானசூதிட பந்தயத்தாலென் னுளமயங்கச
சண்டாளன்புஷ்கரன் செய்துவிட்டா டி ண்தயலரோ

நளராஜன்-சொல்-தரு.

இராகம்-பைரவி-நவரோஸ்-ரூபகதாளம்.

அதிரூபசித்திரமேதலை விதியால்மதிமயங்கிநா
னுலுமபுவியனைத்தும்பழித் தாளும்படியானேன்.

தமயந்தி-சொல்-தரு.

என்பிராணநாதனேயேனீ ரிந்ததுயர்மனதில்
முன்பாசசெய்யுந்தவப்பலனிதோ மூண்டுதோபுவியாண்ட துரையே

இராஜன்-சொல்-தரு.

துரையானசெங்கோலுங்கனை நிறையானகைவேலும்எல்லாஞ்
சூதால்பறிகொடுத்தேன்எந்தன் மாதேபதிவிடுதேதேன் (அதிரூப)

தமயந்திசொல-தரு.

விடுத்தாலென்னுகொடுத்தா சகிவினைக்கஞ்சிடலாமோ
அடுத்தோர்நம்மைக்கெடுக்குநினைவு ஆனிருக்கிறுர்வரும்விதிக்கெல்
லக

இராஜன்-சொல்-தரு.

விதியேஇனிசதியாகவே அதியாசைகொண்டதீ னல்சூதை
விரும்பும்படி வரும்புஷ்கரன் விருதாயவெற்றிகொண்டான் (அதிரூப)

தமயந்தி-சொல்-தரு.

விருதாவிந்திரன் கெருவத்தாலிந்தவிதஞ்செய்தானேகண்டிதஞ்செய்
பெருதாய்க்குப்பின்மறு தாயைக்கண்ண
பிள்ளைகள்போலக்கலி கொள்ளலாமோசுவாமி (என்)

இராஜன்சொல்-தரு.

கொள்ளுங்கலியுள்ளந்தனி லெள்ளளவுமில்லையேயுன்னைக்
கூட்டிநடந்தேகியெந்தக் காட்டில்தரித்திடுவேன் (அதிரூப)

தமயந்திசொல்-தரு.

காடேகுவதேனோதந்தை நாடேகிநாமிருக்கலாம்சுவாமி
பீடாப்பைரவிநவரோஸ்சோடாய் மொழிந்திருந்துவாழலாம (என்)

தமயந்தி-கலித்துறை

பூதேவிசூழ்ந்த பஞ்சாயகோடிப் புவனமன்னர்
நீதேவவொன்று வந்தேதொழுதார் நீங்காதிருந்தால்
சீதேவிவாசத்தி னுலுலகாண்டு திருமபியெந்தன்
நாதாவரும்விதி யார்செயலோசொல்லும் நாயகனே
(வ ம்) அகோவாருங்களையா சுவாமிசெல்காலம் கிகழ்காலம் தவழ்கா

லம் இந்தமூன்றுகாலமுமறிந்திருந்தும் தேவரீரிப்படிகிலேசப்பட்டலாமோ ஏதுகாரியம் எப்படியிருந்தபோதிலும்தைரியலட்சுமியைக் கைவிடாமலிருக்கவேணுமையாசுவாமி.

இராஜன்-விருத்தம்.

சட்டமாயழகுபோன்ற தமயந்திமயிலேகேளாய்
விட்டரசிழந்தபோதேவிதர்ப்பதேசத்தைநோக்கித்
திட்டமாய்ப்பாலரோ[illegible]டுஞ் செல்லுவாய்சீக்கிரத்தில்
கஷ்டகாலங்கள்தீரக் கடுகியேவனஞ்செல்வேனே.

இராஜனுக்கும்-தமயந்திக்கும்-தர்க்கம்-கண்ணிகள்.

இராகம்-காம்போதி-ஆ[illegible]தாளம்

கன்னியேநான்வனம்போகிறேன் கஷ்டகாலந்தீர்ந்திடவும்
உன்னிடதாய்மனைக்கேகும் வுறுதியாய்ப்பெண்ணே

தமயந்திசொல்-தரு.

உறுதியாயின்றளவுநான் உம்முடன்கலந்திருக்கப்
பிரியமனங்கூடுமோதான் பிராணநாயகா

இராஜன்சொல்-தரு.

நாயகித்தமயந்தியெந்தன் நல்லரசிழந்தபோதே
தாயகமேகுவாயெந்தன் தையலாசே

தமயந்திசொல்-தரு

அரசிழந்தபோனதினாலேயனேவுமைப்பிரியச்
சரசமோசொல்வீரெந்தன் சுவாமிநாதனே

இராஜன்சொல்-தரு.

நாதனாருளால்வந்த காதலருடன்வனத்தில்
வேதனைகளாகத்திரிய வேணுமோபெண்ணே

தமயந்திசொல்-தரு.

பெண்ணையுங்குழந்தையுமே பெற்றதாய்மனைக்கனுப்பி
திண்ணமாயும்முடன்வனஞ் செல்லுவேன்மன்னா

இராஜன்சொல்-தரு.

செல்லுவாயுன்றந்தையிடத் தேன்மொழிமாதேநமக்கு
நல்லகாலம்வந்தவுடனே நாமுங்கூடுவோம்

தமயந்திசொல்-தரு.

கூடநீர்வந்தென்றகப்பன் நாடுராச்சியங்களெல்லாம்
ஈடில்லாதரசையாண்டு யிருக்கலாமையா

தமயந்திசொல்விருத்தம்.

போவனோவுன்னைவிட்டுப் பிரிந்துநானிருக்கமாட்டேன்
ஆவலாய்ப்பாலர்தம்மை யனுப்பினேன்றந்தையூரிற்
பூவுலகாளுமன்னா பிராணநாயகரோபாலுஞ்
சீவன்முன்பாதத்திற் செலுத்துவேனுள்ளமட்டும்

இராஜனுக்கும்-தமயந்திக்கும்-தர்க்கம்

இராகம்-பைரவி-ஏகதாளம்

துரையேயும்மைப்பிரிந்து துணிவனோ-இந்ததுரைத்தனம்விட்டுத்
தரைமீதினிற் றயங்கிமயங்கியே

இராஜன்சொல்-தரு.

மயக்கியேநான் தியங்கித் திரியவோ இந்தமாநிலந்தனில்
செயமாய்த்தந்தைப்பதிநீ செல்லலாம்

தமயந்திசொல்-தரு.

செல்லவோநான்பிள்ளைகளையும்விட்டு செகம்பதியிழந்துநான்
கல்லோமனதிரக்கமில்லையோ

இராஜன்சொல்-தரு.

இரக்கமில்லையென்றுநீசொல்லுவதும் என்னை
மறக்கேனொருநாளுமுந்தனை

தமயந்திசொல்-தரு.

நாளுமுந்தன்பாதங்கெதியென்றேசுவாமீவும்மையல்லாமலே
சாலஞ்செயதாற்சநியனும் பாவி

இராஜன்சொல்-தரு.

சநியன்செய்தாலவ்விதிக்கென்னசெய்வேன் புஷ்கரன்செய்தான்பாவி
அநியாயமதாயடுத்துக் கெடுத்து

இராஜன்சொல்-கந்தார்த்தம்

விதியின்பயன்களெனையுந்தொடர்ந்து விகடம்புரிந்தகலியால்
மதியுங்கலங்கமணியுஞ்சிறந்த மகுடம்புனைந்தவரசும்
பதியுந்தெருண்டமதிமந்திரிசேனை பலவும்பிரிந்துதனியே
புதுமன்றல்செய்தவுன் தந்தையூரிற்
போனால்பெருங்மதருமோ
இந்தவேஷமுமானாற் கணிசம்வருமோ
மானமில்லாமலே நாணுமுன்னேறெதிர்
கோனெழில்வீமனுந்தானரசாளையில் (போனால்)

தமயந்திசொல்-கந்தார்த்தம்.

சல்லாபமானமுடிமன்னர்வந்து சரணம்பணிந்துமகிழ்
வுல்லாசமாகமணியாசனத்தி லுலகோர்குடைக்குளாள
எல்லாமிருக்கவருகேனெனச்சொல் லியல்போலெவர்க்குமிலையோ
மல்லார்புயத்தி னாசேவிதர்ப்ப
மாநகர்தன்னில்சென்றதால் நம்மையொருவ
ரீனஞ்சொல்லார்களுண்டோதான்
மானரிவாள்புலிக் கானகமேகுவோம்
தேனெனதாருயிரானவரோயினி (மாநகர்)

இராஜன்சொல்-சந்தார்த்தம்

ஒயிலேமிகுத்தநடையென்னவஞ்சி யுடலேயிளைத்தவர்களும்
அயலார்மனைக்குள்மிகவாடியேகி லழகோநமக்குமுறையோ
மயிலேசிறக்கவனமேநடக்க மகிழ்வாயெனக்குவிடைதா
கயலேபழிக்கும் விழியால்மதர்த்த
கண்ணேயென்றுய்மனைசேரும் யென்றமயந்திப்
பெண்ணேவிடையினித் தாரும்
கண்ணேமணியேயிது வுண்மையதாமென
வொண்ணுதலேமன தெண்ணிருமெண்ணிரும் (கண்ணே)

தமயந்திசொல்-கூந்தார்த்தம்.

இடியோசைகொண்ட அரவாமலிந்த விருதாள்பணிந்துயெழிலாய்
மடமானேயென்சொல்தமயந்தியன்பு மறவாமலெந்தனாசே
விடைதாருமென்றுயெனையேமொழிந்த விதமேதுமொன்றுமறியேன்
அடியேபிரிந்துபடிமீதிருந்து
அணாநாழிகையுமுய்வேனோ வுமைப்பிரிந்து
தரைமீதிலென்னசெய்வேனோ
அரசுமிழந்திட மருவியிருந்திட
இருவர்பிரிந்திட வுனாகள்பகர்ந்திட (அணாநாழிகை)

இராஜன்-விருத்தம்.

அன்னீதச்சூதையாடி யான்வனம்போறேனென்றால்
என்னுடன்வருவேனென்று யேதுகாரணங்கள்தானோ
அன்னமீதேறும்பிம்ம னமைத்ததுவீண்போகாது
கன்னியநகரம்விட்டுக் கானகமேகுவோமே.

இராஜனும்-தமயந்தியும்-வனம்-போகுதல்-தரு.

இ-ம்-பாசு-ஏகதாளம்.

வன்னமயிலேயன்னமேயினிவருகுவீர்வனமேகுவோம்
இந்நகர்தனிலென்னரசையு மிழந்துநானினியிருக்கவே-மன
தோக்கவேபயந் தீர்க்கவேநம்மைக்
காக்கவேதுணைப் பார்க்குளேயுண்டோ (வன்ன)
வாசமாகியமாளிகைவிட்டு வேஷமாறியேவந்ததும்-இங்கு
நேயமானவரொருவரும்வந்து பேசிடாமலேயிருந்ததும்
நீடவேமுகம்வாடவே எந்தன்கூடவே துய
ரோடவே பெண்ணே (வன்ன)
காட்டுக்கிழங்குமிலைகளுண்டெமைவாட்டும்பசியைத்தீர்க்கலாம்
இந்நாட்டிற்காணுதவதிசயங்களும் பேட்டியாகவேபார்க்கலாம்
அடிநங்கையேசிவங்கையே யென்னசங்கையேதீர
மங்கையே இப்போ (வன்ன)
கோட்டைவாசலுநகருங்கடந்து பாட்டையில்வந்துகூடியே
நாட்டமுடனேபாசுராகமுஞ் சூட்டும்பதங்கள்பாடியேநம்மை

நாடியேசகிதேடியேமிக வோடியே — மோடியேசெய்து வந்தான் (வண்ண)

## இராஜன்-விருத்தம்.

ஓட்டியேசகியன்றுனு மூச்சாகமாயிருந்தார்
கோட்டைவாசலைக்கடந்து கொற்றவனுடனேமாது
பாட்டையில்வருகும்போது பலவகைக்குணதோஷம
பேட்டியாய்க்கண்டுராஜன் பெண்மயிலோடுசொல்வாரே.

## இராஜன்-சகுனங்காணுதல்-கண்ணிகள்.

### இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

பதியைவிட்டுவனத்தில்வருகையிலேஅடி — பெண்ணே
பாரப்பாரெதிரோவாரான்பாரும் — பெண்ணே
சதிர்குலைந்துவனத்தில்வருகையிலே — குயவன்
தட்டானெனும்நாவிதனும் — வாறான்
வெறுங்குடத்தைக்கொண்டுமுன்வாறுளொரு — மங்கை
விதவைத்தலைகுலைந்து வாறு — ளையோ
சிறுமையாகவனத்தில்வருகையிலே — யெதிரோ
தீம்பாகவேவிறகுத்தலையன் — வாறான்
இல்விடந்தனைவிட்டுவருகையிலே — பெண்ணே
எண்ணெய்க்குடவெதிரோ வருகு — தையோ
வல்லமையானகெருடப்பக்ஷி — யிதோ
மாறிவலமாகப்போகு — தையோ
கோட்டானெடாங்கைதக்காகமெல்லாமடி — பெண்ணே
குறுக்காகவேகுத்தி மறிக்கு — தையோ
காட்டிலில்லாவகை சகுனமெல்லாம் — பெண்ணே
கனாயன்போத்துமிடமாகு — தையோ

## பொது-விருத்தம்.

இப்பொழுதுநமக்கெதிரோ சகுனங்கண்ட
விட்டோதுசொல்லுமென தமயந்திப்பெண்
தப்பிதமொன்றிலையிதற்கென் செய்வமென்று
தைரியமுடன்றுணிந்திருவர் தாம்போசித்து
எப்பொழுதுங்காக்கநமக் கீசன்பாத
மெனவிரண்டு யோசனை தூரங்கடந்து
அற்புதமாய்க்கானகமு மலைகள்தேச
வதிசயமுந்தேவியருக் கருள்செய்வாரே.

## இராசன்-சொல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஏகதாளம்.

பெண்ணேவனங்களதன்னைப்பாராய் பெரியோர்கள்தரிசனம்
பெற்றிடலாங்கனி சத்திடம்வாராய்
தண்ணீர்த்தடங்குளமநேகமங்கேபசி தாகந்தெளிந்திடச்

சாப்பிடலாங்கனி தோப்பினிலிங்கே
மானுங்கலைகளும்விளையாடும பஞ்சவன்னக்கிளிகள்தன்
வார்த்தையினல்துயர் தீர்த்திடக்கூடும்
ஏனம்புலியாளிசிங்கம்யானைகாட் டெருமைக்கடம்பைக
ளெங்கெங்கும்வாழுமலை மங்கையிதுதானே
அந்தமலைமேலமர்முனிவோர்கள் நிதமன்புடனேயிருந்
தாகாசவாசிகள் யோகஞ்செய்வார்கள்
இந்தவழியுமயோத்திக்கேகும் விதர்ப்பாபுரிவீம
னிருக்கும்பதிக்குச் சுருக்குடன்போகும்
முன்னேதெரியுதேயொருசோலை அதில்வேதவியாசரும்
முக்கியமுடன்செய்யு மெக்கியசாலை
பின்னே தொடர்ந்தேவழிகூடி நடந்தேமுகாரியைப்
பேண்தயரோநீயும் காதலாய்ப்பாடி (பெண்ணே)

பொது-விருத்தம்.

மன்னவருடனேமாது மலைவளந்தான்கண்டேக
விண்ணமுமென்னமாச்சு தெனச்சரிப்பகவான்றனும்
தன்னிகரில்லாரூபித் தமயந்திகண்ணின்முன்னே
அன்னத்தைப்போலரூப மாகியேவருகின்றாரோ.

அன்னப்பக்ஷிவருகிற-தரு.

இராகம்-சௌராட்டகம்-ஏகதாளம்.

அன்னப்பட்சியும்வந்துதே-சகியேசா
அன்னப்பட்சியுமவந்துதே
மன்னன்நளனுமிந்த    தன்னகர்விடச்சொந்தக்
கன்னியர்மனங்கந்த    வன்னிதஞ்செய்யவந்த(அன்ன)
நீடும்புகழ்கொடியும்    சூடும்மணிமுடியும்
தேடும்பொருள்கொடுத்தே    காடுதனில்விடுத்த(அன்ன)
முன்னமேநளன்சொல்லைப் பெண்ணாள்சகித்ததொல்லை
எண்ணிப்பகைவிளைய    வண்ணந்துகில்களைய(அன்ன)
சுந்தரத்தமயந்தி    சிந்தைமகிழவுந்திக்
குந்திச்சிறகடிக்க    வந்துநளன்பிடிக்க(அன்ன)

தமயந்திசொல்-கொச்சகம்.

நீருமெனக்குமொரு நிற்ணயமாய்த்தூதனுப்பி
சோரவைத்துமேயவரைச் செப்புமொழிதப்பாமல்
பாருமடநடையன்னப் பட்சிதன்னைப்பிடித்துத்
தாரும்விளையாடவென்று தமயந்தித்தானுரைத்தாள்.

(வ-ம்) அகோவாருங்களையா சுவாமி எனது பிராணநாயகா இந்தஅகோரமானகாட்டில் இத்தனையழகு சௌந்தரியமாயிருக்கிற அன்னப்பட்சியின்பேரிலே ஆசையாயிருக்குது இதை அடியாளுக்குப் பிடித்துத்தரவேணுமையா சுவாமி.

இராஜன்சொல்-விருத்தம்.

கன்னிகைதமயந்திப்பெண் கருதினபடிக்குத்தானே
அன்னப்பட்சியைப்பிடித்து அகத்தியந்தருவனென்று
வன்னமாஞ்சீதைக்காக மாயுவன்பிடித்தாப்போல
மன்னவனளேந்திரபூபன் வந்தன்னமபிடிக்கின்றானே.

தரு-இராகம்-காம்போதி-ஆதிதாளம்.

வந்தன்னப்பிடிக்கநள-மன்னனும்வந்தானிதோ

கந்தமலர்குழல்மோக
காட்சியதாயநினைந்து
சூட்சிசெய்திட வந்த
கடுகியேபிடியுமென்று
கள்ளவன்னப்பட்சியிதோ
மூடிகியதாவிளையடி
மூர்க்கத்துடனேபெத்த
வேர்க்கத்திரோகமுத்த
திக்குகள்தோறுந்தொடர்ந்துத்
தெட்டியெழும்பத்தனது
அக்கணமோடியேகுந்தத்
ஆச்சரியங்கள்கொண்டு
பாச்சலுடனேசென்று
அலைந்துமேதிரிந்திருக்கா
அருகினில்வந்ததுபோல
கலையதையுரிந்துபோட
ககனமதிலெழுந்து
திகழுங்கலையிழந்து

மூந்தவேசெய்தசினேக
தாட்சியில்லாமலின்று
கோட்சநியையுகந்த (வந்)
காதலிசொல்லமுழுக்
கருதியேமெலல
அடியின்பிறக்கயோடி
பார்க்கப்பயந்துமெத்த
மார்க்கந்தனிலேயெத்த (வந்)
திரும்பியேநின்றுஅன்னத்
சிறகடிகொண்டு
தக்கநளேந்திரன்மிகுந்த
மாச்சரியந்தன்னைவென்று
ஏச்சுந்தன்மைவெகுண்டு (வந்)
லயர்ந்துமயங்கக்கிட்டி
வழுசந்தயங்க
வலையெனவிழுந்துமூட
மிகவும்மனமகிழ்ந்து
மகிபன்றுகிலிழந்து (வந்)

அன்னப்பட்சிசொல்-விருத்தம்.

பொன்மணிமகுடம்பூண்ட புரவலநளனேகேளாய்
என்னைநீபிடிக்கவந்தா யெதிர்த்துந்தன்வஸ்திரத்தை
சின்னமாய்ப்பறித்துக்கொண்டேன் தெய்வநாட்டன்னமும்பார்
தன்னிலேயென்னைவேண்டாஞ் சநிபகவானும்நானே.

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் நளராஜனே எங்களைப் பிடிக்கவேணுமென்று எண்ணங்கொண்டு எங்கள்மேலேபோட்ட வஸ்திரத்தை எடுத்துக்கொண்டோம் நாங்கள் அன்னப்பட்சிகளென்று எண்ணவேண்டாம் நாங்கள்சநிபகவான் மாயையினாலேவந்த அன்னப்பட்சிகளாக்கும் இன்னமும் அநேக துன்பப்பட ப் போகிறாய் நாங்கள் போய்வருகிறோம் பிள்ளாய்ராஜனே.

இராஜன்-கலித்துறை.

நிலையாயிருந்த வரசுபதிகளுநிட்சயமோ
டலமாதனைத்தையுஞ் சூதாலொழித்தனன்பட்சியைப்போல்

கலியைப்பழிக்கவுங் காட்டில்வந்தென்னைக் கடுசெய்யச்
சலமேனுமக்குச் சரியேயெனவுந் தயங்கினனே.

இராஜன்-கண்ணிகள்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பகவானேஎன்னையுமிக வேதனைகள்செய்ய
பழியேநான்செய்ததென்ன பாவமோ
பதியுஞ்செல்வமுமருசெங்கோல்சதிருஞ் சேனையுஞ்செம்பொற்
பாரமணிமுடியும் பறிதீரோ-நல்ல
மதிமந்திரியுடன்பெற்ற சுதனையுநான்பிரிந்து
மங்கையுடன்வனத்தில் வந்தேனே-முன்பு
விதிவசத்திலேலேந்தன் மதிமோசமாகச்சூதை
விளையாடினேனேசன்ம வினையாலேசுவாமி
சத்தியவாசகந்தப்பி வித்தியாசமாகவிந்தத்
தரணிதனையாண்டேனே தமியேனே-அன்னை
பெற்றபிதாக்குருக்களுந் தெய்வங்களையுநான்
பிழையுந்தனைசெய்தேனோபெருமானே-எந்தன்
கனிமொழித்தமயந்தி வனிதைபிடிக்கச்சொன்ன
காதலன்னப்பட்சியுங் கபடமாகவேவந்து
சனியென்னவாயிலுடுத் தினியபச்சைவடமுந்
தான்பறித்துக்கொண்டென்னைச் சதித்தாரோசுவாமி.

இராசன்-விருத்தம்.

செப்பியேசக்ரவர்த்தி சிதகப்பேதளித்துநின்று
ஒப்பிலாத்தமயந்திப்பெண் ணுடுத்தின துகில்கள்தன்னில்
தப்பினப்புடவையொன்றைத தாமிருவருமுடுத்தி
இப்படிமுடிந்துதென்று விராசனும்புலம்புவாரோ.

இராசன்சொல்-கண்ணிகள்-இ-ம்-பிலாரி-ஏகதாளம்.

உடுத்தும்புடவைக்கெந்தனுடனேசனியன்வந்தான் தெய்வமே-முன்பு
கொடுத்தசெல்வந்தன்னைச் குறையாக்கொடுத்தேனோ தெய்வமே
உபகாரஞ்செய்தவன் அபகாரமாச்சுதே தெய்வமே-இப்போ
அபகாரஞ்செய்தோரை யார்கேட்கப்போறார்கள் தெய்வமே
சூதாடிராச்சியஞ்சூதாலேதோர்த்தோனே தெய்வமே-இது
போதாமல்காட்டினில் பெண்ணைக்கூட்டிவந்தேனே தெய்வமே
அன்னப்பட்சிகளாலே அரையில்வஸ்திரம்போச்சே தெய்வமே-இப்ப
முன்னஞ்செய்தவினை மூண்டுதோயிவ்வனத்தில் தெய்வமே
ஆரானுடைமைக்குப் பேராசைகொண்டேனோ தெய்வமே-நானு
மோகங்களால் விபகாரங்கள்செய்தேனோ தெய்வமே
தஞ்சமென்றோரைநான் வஞ்சகஞ்செய்தேனோ தெய்வமே-பெற்ற
தாயைமனக்குன்ன வாயினாற்சொன்னேனோ தெய்வமே
பஞ்சமாபாதகமென்னசெய்தேனையோ தெய்வமே-அந்தப்
பாதகர்தானிந்த வேதனைசெய்துதோ தெய்வமே

காலைவரும்விதிநானறியேனையோ தெய்வமே-தொட்ட.
ஏழைநாட்டாளு மின்னமென்னசெய்வானோ தெய்வமே

சபையார்-விருத்தம.

அருளையுமாசனுந்தான் மகேக்துரங்கள்சென்று
பெருகியதடாகமவாவிப் பேருள்குளத்தைக்கண்டு
பொருகுழலாள்சலத்தைப் போசனமாகச்செய்து
இருவருமகுளிர்ந்தநீழ லிடத்தின்கீழ்வீற்றிருந்தார்

இதுவுமது

புக்ககம்பின்னைவிட்டுப் பிறந்தகமுன்னைவிட்டு
அக்கனாயானேனென்று அடிக்கடிதுயரமாகித்
துக்கமுமனங்கொள்ளாமல் துயருடனோர்நிலத்தில்
சக்ரவர்த்திமடியின்மேல் தமயந்திநித்திரைசெய்தாள்

சபையார்-தரு-இ-ம-கேதாரகௌளம்-ஏகதாளம்

மடியில்நித்திரைசெய்தாளே-நளராசன்-மடியில்நித்திரைசெய்தாளே

| | |
|---|---|
| மடியில்நித்திரைசெய்தாள் | வடிவானதமயந்தி |
| கெடியானபகவானை | யடியாள்மனதிலெண்ணி(மடியில்) |
| எட்டரண்மனையானைப் | பட்டணந்தனைவிட்டுப் |
| பொட்டநிலந்தனிற் | கட்டியுறுதுதவே(மடியில்) |
| பாங்கியர்முதலான | தூங்குமஞ்சமும்விட்டு |
| மாங்குயில்வரமெத்த | ஆங்காரமாகவே(மடியில்) |
| இனியிருவோரையும் | தனியாயப்பிரிந்துவிட்ச |
| சகிபகவான்மனது | சந்தோஷமாகவே(மடியில்) |

இராஜன்சொல்-விருத்தம்.

கலையையொண்டாய்க்கிழித்துக் காரிகைவிழித்திடாமற்
றலைதனைத்தூக்கிப்பூமி தன்னிலேமெல்லவைத்துச்
சிலைமதன்ரதிபோலொத்த தேவியுமுறங்குமபோது
நலமுடனளராசேந்திர நடந்துமேபுலம்வானே

இராஜன்-தமயந்தியைவிட்டுப்-பிரிந்துபோகுதல்.

கண்ணிகள்-இராகம்-முகாரி-ஆதிதாளம்

நம்பிவந்தநாயகியை நல்லிருள்வனத்தில்விட்டு
கொம்பிழந்தகனிபோலே கொற்றவநடக்கலுற்றார்
நாடுவிட்டுக்காடுநாடி ராசனும்மதிமயங்கி
பேடுவிட்டவன்னம்போலே பிரிந்துநடக்கலுற்றார்
சதமெனத்தமயந்தியைத் தனித்துவிட்டுப்போகையிலே
இதமல்லவென்றுசொல்லி யெண்ணினளராசேந்திரன்
வேற்றொருவரங்கில்லாமல் விட்டுவந்தநாயகியை
பார்த்துவரவேணுமென்று பண்புடன்திரும்பினரே

இராஜன்சொல்-விருத்தம்,

பேகாமனளன்றிரும்பிப் பெண்ணரசைக்கொண்டுவந்து

ஏகாந்தமாயிருக்க வெறுப்பினான் மயிலாள் தன்னை
ஆகாதசகியனாலே யதிகவிதிக்கிளையுங்கொண்டாள்
வாகாகவேவிடாமல் வந்து...ன்றுருகுவாளோ.

இராஜன்புலம்பல்-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

தெய்வமேயென்னசெய்வேன்-பெண்ணே-இவ்வனத்திற்பிரியேன்
தையல்தமயந்தி-மெய்மறந்தேகித்திரை
செய்கின்றவேளையிலையையோநான் பாவி (தெய்வ)

கன்னல்மதன்குயிலே-மன-தென்னமாயான் றுணிவேன்
சின்னவயதினி லன்னமுடன்சில
சொன்னவுறுதிகள் தன்னைமறந்திடத் (தெய்வ)

இந்திரர்வானவரும்.முன்னே-வந்துமணம்புணா-வெகு
தந்திரமுஞ்சூதும் விந்தையாயச்செய்யச்
சிந்தைகலங்காம லென்தன்னைமணங்கொண்டாள் (தெய்வ)

கூடிக்குலாவியேதான்-நாமும்-வேடிக்கையாயிருந்தோம்இப்போ
நாடுங்களொடு கோடித்தனங்களும்
ஆடினேன்சூதினால் வாடிவந்தேனிங்கே (தெய்வ)

சூதலமேபுகழும்-எந்தன்-மாதரசைத்தனியே
ஆதரவில்லாமல் பேதையேநான்வன
வீதினிலேவிடச் சோதனைசெய்திட (தெய்வ)

வட்டமதிமுகமும்-நீலப்-பொட்டுந்திருநுதலும்
திட்டமதாகவே இட்ட மிகுந்திடுங்
கட்டழகியுன்னை விட்டுவிட்டேகவும் (தெய்வ)

வர்லவயதுதனில்-பெற்றப்-பாலகரைப்பிரிந்து
ஆலமொணக்கொடு காலனெனச்சதி
கோலஞ்செய்தானப்போ சாலவேயெந்த (தெய்வ)

இன்றுபிரிந்திடுநான்-வந்த-என்றைக்குக்காண்பனேயோ
அன்றிலும்பேடென நின்றிருவோருயிர்
ஒன்றென்றிருந்தவுன் நன்றியைக்கொன்றேனான் (தெய்வ)

இராஜன்சொல்-கவித்துறை

வாரணிகொங்கையுஞ் சிற்றிடைகாட்டு மதன்கலவி
யாரம்பஞ்செய்யுந் தமயந்தியைவிட் டகலவென்றால்
ஓடியானதை முன்னைத்தூக்கி யுடனேவைக்க
ஈடியின்ன மிழுக்குதேன்னவியு மேந்திழையே.

இராஜன்-புலம்பல்-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்-கண்ணிகள்.

மாதேயுந்தன்னை விட்டுப்போதேபிரியமனம்
வருகுதையோ-சிந்தை-யுருகுதையோ
பாதகச்சகிநம்மை யேநோபிரிக்கமாயம்
பண்ணினானே-சூதை-எண்ணினானே
கல்லுமுள்ளூர்ந்தைத்திடவெல்லடிகள்வருந்தக்

காட்டில்வந்தே-னுன்னைக்-கூட்டிவந்தேன்
அல்லும்பகலுமுந்தன் சொல்லுங்காதினிற்கேட்டு
ஆறுதிருந்தேன்-துயர்-தீர்ந்திருந்தேன்
உன்னைத்தனியேவிட்டு என்னுடலினிற்சீவ
னுலர்ந்திடுமோ-ஆசை-மறந்திடுமோ
சின்னஞ்சிறுவனையும் பொன்னணில்முடியரசும்விட்டுத்
தேறுவனோ-மனம்-ஆறுவனோ
செந்தாமரைமுகமுமுன் பல்லொளியையும்விட்டுத்
தேடுவனோ-யிங்கு-வாடுவனோபெண்ணே
விந்தைபுன்னகைவராளி யிந்தவனத்திற்சொல்ல
மெய்மறந்தேநித்ரைசெய்கிறாயோ அடிபெண்ணே

இராசன்சொல்-விருத்தம்

அருந்துயராலேமாது அதிகநித்திரையுங்கொண்டாள்
பெருந்துயர்கொண்டுமன்னன் பிரியநிட்சயமேசெய்து
வருந்தியின்றழுதுவிம்மி வனதன்மதேவதைக்குத்
திருந்தினதமயந்திப்பெண் ணைமடைக்கலமென்றாரோ

இராஜன்-தரு-இ-ம்-பூரிகல்யாணி-ரூபகதாளம்

வனதன்மதேவதைகா-ளெந்தன்-மாதைரட்சிப்பீரோ
மனதுருகியே காதலினால்வந்த
மங்கையிவட்கொரு பங்கமில்லாமலே (வனதன்ம)
மதயானைவெம்புலிகொல்லாமலே விதமாயிடைஞ்சில்லாமலே
விதமாயொருவினையில்லாமலே சதமேதிலியுமையல்லாமலே
உதவியாரிந்தக் காட்டினிலெங்களை
இதமுங்காத்திட நம்பினேனுங்களை (வனதன்ம)
தொடுத்தான்மதி யிடக்காய்ச்சனி நடுக்காங்கமதிலேதனி
உடற்கோவுயிரானபெண்களி அடுக்காதென விடுத்தேனினி
அடுக்காகிய ராட்சதப்பூதங்கள்
தடுக்காமலே துணைசெய்வீரெங்கள் (வனதன்ம)
மதியும்புனலுந்தரித்தவேணியே கதிதருகும்பாசாங்குசபாணியே
அதிபெருகிய ஆகாயவாணியே விதியமர்கோனுடனிந்திராணியே
சதிருடன்வீமனகரிற்சேரவும்
பதிபுசம்பூரி கல்யாணிகூறவும் (வனதன்ம)

இராஜனசொல்-கலித்துறை

கற்றுமதிகிரியல் வாற்குயிலன்னங் காண்மயிற்காள்
கொற்றமலரணி வஞ்சியைக்கான்விட்ட கொடியனெனச்
சற்றுமெனது முகம்பார்க்கநாணிச் சலித்துங்களை
நற்றுமெனவுந் தமரோடெழுந்து நடந்தனமோ

இராஜன்-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

காவினில்வாழுங்குயிலே கூவாமற்றவமயிலே

பாவிஎந்தனேயுங்கண்டு போவதுமென்னகுறையோ (காவி)

வாலமதன் பூங்கிளியே காலேமலர்த்தேனளியே
சோலேயைவிட்டேவெளியே சாலேவினிற்கப்புழியே
பாலின்மொழியாளேவிட்டே நீலனென்பதைத்தொட்ட (காவி)

ஒண்டியதாகப்பிரிந்து கொண்டபெண்தனேயிழந்து
சண்டாளனென்றேயறிந்து கண்டவுடனேயொளிந்தீர்
நண்டுகள்வளேபுகுந்துக் கண்டதுமறிகிலேனே (காவி)

சூதைவிட்டுநான் தனியே மாதைவிட்டிடச்சகியே
தீதைநினைந்தால்தனியே வேதையுமானேனினியே
நாதநாமக்கிரியைநானே வேதகீரோடவுமானே (காவினில்)

பொது-விருத்தம்.

தாங்கலாய்ப்பெண்ணேவிட்டுத் தனித்துமேமனதுவேறு
யேங்கியேவருதும்போது விருள்மிகுவனத்திலேதான்
பாங்குடனிருக்குமந்த பாதையினெருப்புப்பத்தி
மூங்கள்மேலிருந்தசர்ப்ப மொழிந்திடுமாசனுக்கே.

(வ-ம) இக்தப்பிரகாரம் நளச்சக்ரவர்த்தி மகாராஜாவானவர் தமை யந்தியை விட்டுப்பிரிந்து விசனத்தோடு வருகிறவழியில் மூங்கல்நெருப்பு பத்தியெரிய அதிலே ஒருசர்ப்ப மகப்பட்டுக்கொண்டு அவதிபடச்சே அந்தசர்ப்பம இராஜாவைப்பார்த்து ஓய் ராசனே இந்த அக்கினியில் அவதிபடுகிற வென்னேஎடுத்து அப்பாலேவிட்டுவிடாமல்உமக்குச் சுகிர்தமுண்டென்று சொல்ல ராசாவானவர் தருமமேசெயமென்று அந்தசர்ப்பத்தை எடுத்து அப்பாலேவிடஉடனேசர்ப்பம் ராசாவைத்தீண்ட ராசாவுக்கு உடனேதேகமாதியங்கழும்கறுத்துசியும் புண்களுமாகராசாவானவர் மகாதுயரத்துடனே புலம்புகிறவிதம் எப்படியென்றால்

இராசன்சொல்-தேவாரவிருத்தம்.

வையமோரடியளந்த மாதவஸ்ரீவைகுந்தா
பையரவணேத்துயின்ற பரமனேசதியென்செய்தேன்
தையலாள்சாபகாறு சர்ப்பமூர்த்தீண்டியெந்தன்
மெய்யெலாங்கறுத்துநோகும் வேதனேக்கென்னசெய்வேன்

இராசன்சொல்-தரு-இ-ம்-வராளி-ஆதிதாளம்.

மாதவாமதுகுசுதனேதிரு மங்கைமேவியமார்பனே
ஆதிநாட்செயதபாவமோஎந்த னங்கமிப்படியாகுமோ
மன்மதன்றன்னிலெண்மடங்கதி வடிவாமெழில்கெடுமோ
தின்மையாகவேபாம்பினலுடல் சீயும்புண்களுஞ்சிந்துதே
வர்க்கமுஞ்சுகந்தாதிகள்பூசி வாசமுந்தருதேசுதா
தூர்க்கந்தங்களுமாகவேயின்னு சோதனேசெய்ததேநாள்
சாதருலங்கிச்சாலுவைராங்க சரிகையாடைகளணிந்தேனே

பாதியாடையுமுட்டுன்மெய்யில் பத்துமோவெந்தன்கர்த்தனே
பேயமாகியநாயகிதன்னை நித்திரையில்விடுத்தனே
தாபகந்தன்னிற்சேர்வளோவெந்தன் [illegible]தயலாள்தேடிவாருளோ

பொது-விருத்தம்.

அரும்பிடையொப்பிலாத தோகையையழைத்துவந்து
அரும்பழிசெய்திராஜ னருவையைத்தனியேவிட்டு
விரும்பியேபிரலாபித்து மெத்தவுந்துயரத்தோடு
திரும்பியேபார்த்துப்பார்த்து சென்றனன்யோத்திதானே.

(வ-ம்.) அகோகேளும் இந்தப்பிரகாரம் நளராஜாவானவர் தன்பெண்சாதியைக் காட்டிலே தூங்கவைத்துவிட்டு அவளுக்குத்தெரியாமல் அவள்கட்டியிருந்த புடவையில் பாதிகிழித்துக் கட்டிக்கொண்டு திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு காடுகள்மலைகள் வனங்கள் இதுமுதலான்துந்தாண்டி அயோத்தியாபுரியில் ரிதுபர்ண மகாராஜாவினிடம்வர அப்போது ரிதுபர்ணமகாராஜா கொலுவுக்கு வருகிறவிதம எப்படியென்றால்,

பொது-விரு[illegible]ம்.

தங்கம்மாமகுடமின்னச் சாப்புளிபதக்கமூத்துத்
துங்கமாமணியிழைத்த தோள்வளைத்தகதகென்ன
மங்கையர்நடனமாட மதிமந்திரிமார்கள்சூழப்
பங்கயமுகவேள்ரிது பர்ணனுஞ்சபைவந்தானே.

ரிதுபர்ணராஜன்-தன்கொலுவுக்குவருகிற-தரு. இ-ம்-சஹானைஏகதாளம்

பர்ணன்சபைவாற வுன்னதம்பார்த்தியல்
பாகவிலாச வுலாசமதாய்
கன்னல்வில்மன்மத னென்னமகிழ்ந்தெழில்
பொன்னகர்மேவிய மன்னவன்போரில்ரிது (பர்ணன்)

துலங்குமதிவதன மிலங்கிடவோத்நச்
சுடர்மணிமகுடமும் விளங்கிடவேசொம்பொன்
இலங்குங்குண்டலமு செவிதயங்கிடவேயண்ட
ரொவருமபயந்துமனந் தியங்கிடவேநல்ல
பிலன்கொளும்சதுரங்கப் பெலன்களும்நெருங்கவே
களங்கமில்லாமல்மதிக் கவிகைபிடிக்கரிது (பர்ணன்)

அரசர்மந்திரிமார்கள் சூழ்ந்திடவேகண்ட
அருவையர்மயல்கொண்டு வீழ்ந்திடவேசெங்கோல்
தரணிமுழுதுமெங்கும் வாழ்ந்திடவேவந்த
சகலஜெனமுமடி தாழ்ந்திடவேநல்ல
அருமறைபவாசி தருகவேகடலோசை
விருதுஜபபேரிகை முரசுமதிரரிது (பர்ணன்)
எ

சபை-விருத்தம்.

மருவளர்சோலைசூழு மாநகரயோத்திவீதித்
தெருவினிற்பலர்சொற்கேட்டு தியங்கியேநளராஜேந்திர
னுருவமுமனதும்வேறு யுருகியேகலங்கிநெஞ்ச
மருவியவிதனத்தோடு மன்னவன்றனைக்கண்டானே.

ரிதுபர்ணராஜன்சொல்-விருத்தம்.

மங்களசமூகந்தன்னில் வந்தவனீதானரு
எங்கிருந்திங்குவந்தா யிதற்குமுன்பழக்கமுண்டோ
தங்கியேயின்னெதென்ன தனித்துயோசனையுமேது
இங்கிதவுன்பேரென்ன விருந்திடும்பதிசொல்வாயே.

(வ-ம்.) அகோவாரும்பிள்ளாய் நீயார் எந்தவூர் எந்ததேசம் எங்கிருந்திங்குவந்தாய் உன்னிடவூரும்பேரும் தெரியசசொல்லும் பிள்ளாய்.

நளராசன்சொல்-விருத்தம்.

காவலாகிடததேசக் கருத்துளநளராஜற்கு
ஏவலாயிருந்தேன்யானு மேழனாநாட்டானலே
மேவியேவனத்திற்போனார் விட்டுமுன்சமூகந்தன்னிற்
கேவலமாகவந்தேன் கிருதியுண்டெனைக்காப்பாயே.

(வ-ம்.) அகோ சரணஞ்சரணமையாசுவாமி மகாராசனேநான்நிஷதாபுரியாளப்பட்ட நளச்சக்கிரவர்த்தி மகாராஜாவுக்குச் சுயம்பாகம் சாரத்யஞ்செய்துக்கொண்டிருந்தேன் அவர் சநிபகவான் மாயையினாலே சூதாடி ராச்சியம்விட்டு அவாள் வனத்துக்குப்போனார்கள் தங்களுடைய சமூகத்துக்குவந்தேன் என்பெயர் பாகவனென்று சொல்வார்கள் என்னைவைத்து ரட்சித்திட வேணுமையாசுவாமி.

ரிதுபர்ணராசன்சொல்-விருத்தம்.

விசயமோவென்பால்வந்த நலமுளபாகவாநீ
தாயகமாகவேதான் சாரதியிருவர்கூட
நேயமாயிருந்தையாகி னித்தமுந்தாழ்விலாமல்
ஆயிரம்பொன்கொடுப்பே னகமகிழ்ந்திருந்திடாயே.

(வ-ம்.) அகோவாரும்பிள்ளாய் பாகவா நான் உனக்கு மாதமொன்றுக்காயிரம்பொன் தருகிறேன் நீ நம்மிட சாரதிகளுடனே கூடி சவுக்கியமாகச் சாப்பிட்டுக்கொண்டு சுகமாயிருபிள்ளாய்-பாகவா.

நளராசன்சொல்-விருத்தம்.

திக்குகளெட்டும்வென்று திசையளந்தரசர்போற்றச்
சக்கிரவர்த்தியென்று சகலதேவருங்கொண்டாட
இக்குவின்மதவேளென்ன விதமனுபவித்தேனெந்தன்
அக்ரமத்தாலேயானு மடிமையர்க்காளானேனே.

நளமகாராஜன்-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்.

மன்னர்புகழ்ந்திட நன்னகர்தன்னிலே வாழ்ந்தேன் • இப்ப
சொன்னபடியேரிது பர்ணர்க்கேவல்செயத் தாழ்ந்தேன்

பொன்னரியாசனந் தன்னிலிருந்தல
கன்னியைப்பிரிந் தின்னகர்தன்னிலே
தாரணிராசர்க்குச் சிறுடனே விடை
சாதிவாவென்று கூறவேநானுமபே
பாரிலெவர்க்கும்பொன் வாரிக்கையா தினங்
சோறுசமைத்திட நேரிட்டதால்மன
தங்கச்சரிகையி னங்கிமுத்தாரங்க
மங்கைத்துயில்பாதியுங் கொயதுபோற்றிடத்
குங்குமங்கஸ்தூரி தங்குஞ்சரீரத்திற
பொங்குமவிஷத்திற லெங்குங்கறுத்திட
வஞ்சித்தமயந்தி அஞ்சியென்னைத்தேடு
வாழும்புன்னுக வாளிசொல்லக்கூடு

காண்டேன்-எந்தன்
மீண்டேன்
கொடுத்தேன்-என்னைக்
கொடுத்தேன்
தந்தேன்-இப்ப
நொந்தேன்
அணிந்தேன்-இப்ப
துணிந்தேன்
ருனே-யாம்பு
லானேன்
வானோ-நந்தை
வானோ

நளராஜன் காலத்தைவெறுத்தல்-விருத்தம்.

சீருலவுகிடதநகராண்டசூர
சேனைநருள்பாலனெனுஞ்செழிக்குங்காலம்
பாருலவுமுழுதுமொருகுடையிலாண்டு
பைம்பொன்முடிவேந்தரொன்னைப்பணிந்தகாலம்
தாருலகிலன்னமது தூதுக்கேகித
தையல்தமயந்தி மணம்புணர்ந்தகாலம்
காருலவுசோதியெழிலானமேனிக்
கலிராஜனென்னைத்தொடரக் கருதுங்காலம்
கோலமதாய்வாழ்கிடந்த நாடிழந்து
கொடுங்கானில்வாழசகிகுனித்தகாலம்
பாலவனந்தன்னில்வந்து நித்திரைபோன
பாவையினைவிட்டுவரும் பாவிகாலம்
ஆலவிடநாகமது தீண்டவென்னை
யங்கமெலாநொந்துபுண்களானகாலம்
சீலமுளரிதுபர்ணன் சொன்னவேலை
செய்யவிதிகொண்டுவந்துசேர்த்தகாலம்.

பொது-விருத்தம்.

துரிதமாகிடதமாண்டு சுகத்துடனிருந்தமன்னன்
சரிசனிபகவனென்போன் றன்னிடசெயலினாலே
கருதுரிதுபர்ணராசன் காட்டிடயேவல்செய்துத்
திருவிளையாடல்போலச் செய்தவனிருக்கின்றானே.

(வ-ம்) இந்தப்பிரகாரம் நளராசாவானவர் தமயந்தியை நித்திரையில் காட்டிலேவிட்டுவிட்டு அயோத்தியாபுரியில் ரிதுபர்ணராசனிடத்தில் ஏவற்பணிவிடை செய்துக்கொண்டிருக்க இவரிப்படியிருக்க காட்டிலே நித்திரையில்விட்டுவந்த தமயந்திதேவி நித்திரைதெளிந்து தன்னண்டையிலிருந்த ராசனைக்காணாமல் திடுக்கென்றெழுந்து நாலுபக்கமு மோடிப்பார்த்து ராசனைக்காணாமல்புலம்புகிறவிதமெப்படியென்றால்.

பொது-விருத்தம்.

திடுக்கெனவிழித்துமாது திசைத்துநாசனைக்காணுமல்
நடுக்கியேபதரியுள்ளம் நாவரண்டழுதுவிம்மி
வடித்திருகண்ணீர்வெள்ள வாரிபோலோடவெங்குஞ்
சடுக்கெனவோடிப்பார்த்து தமயந்திபுலம்புவாளே.

தமயந்தி-புலம்பல்-தரு-இராகம்-சுத்தசாவேரி-ஏகதாளம்.

அருகிலிருந்தவரசனைக்காணேனே தெய்வமே - எந்தன்
ஆவிதுடிக்குதே பாவிநானென்செய்வேன் தெய்வமே
இருகண்ணிமித்திரை யேனின்றுவந்துதோ தெய்வமே-இப்போ
என்பிராணநாதனுமெங்கேபோய்ச்சென்றாரோ தெய்வமே
உருவினகத்தியை யோங்கிவெட்டாமலே தெய்வமே-என்னை
ஒண்டியாய்விட்டு வொளித்திடதர்மமோ தெய்வமே
பரியாசமபோலென்னைப் பார்த்திடலாகுமோ தெய்வமே-இந்தப்
பாரவனந்தனிற் பயங்கரமாகுதே தெய்வமே
கட்டியிருந்தகலையுமொண்டாச்சுதே தெய்வமே-மன்னன்
கையால்கிழித்திடச் செய்திடுமோசதி தெய்வமே
விட்டுப்பிரிந்திட வேளைவந்துற்றதோ தெய்வமே-நிமிஷ
வேளைதனில்மண வாளன்பிரிந்தாரோ தெய்வமே
நித்திரைதன்னில்நினைவுமறந்தாரோ தெய்வமே-உயர்
நிருபனைக்காணுமல் நின்றுமயங்கிறேன் தெய்வமே
சத்தியஞ்சொன்னதைத் தானுமறந்தாரோ தெய்வமே-சுத்த
சாவேரிபாடினன் பூவைபுலம்பவுந் தெய்வமே

தமயந்திசொல்-விருத்தம்.

துணைவனார்மடியிலேநான் சோர்ந்துநித்திரையுஞ்செய்து
மணலிலேதலையைமெள்ள வைத்தேதேனேயொண்டியாகத்
தணவிடுமெழுதுபோலத் தன்னிலேபுலம்பிவாடிக்
கணவனார்பிரிந்துபோன கபடமேதறிகிலேனே.

தமயந்திசொல்-உ-வது-புலம்பல்-தரு-இ-ம்-தன்யாசி-ஆதிதாளம்.

ஐயோநானென்செய்வே னரண்யந்தனிலேதான்
அழைத்துவந்துவிட்டீரோ பிராணநாதா-சுவாமி
நிமிஷமானாலுமெந்தன் நித்திரையிலுமுந்தன்
நினைவுமறந்தறியேன் பிராணநாதா-சுவாமி
இமிசைப்படுத்தவென்னை யிவ்வனத்திற்பிரிந்தால்
என்னுயிர்பிழைப்பேனோ பிராணநாதா-சுவாமி
பண்டுபரியாசமபோற் பக்கத்தினிலொளிந்தால்
பாவிநான்சகிப்பேனோ பிராணநாதா-சுவாமி
மண்டலத்திலுமுந்தன் மடிமேற்றலைவைத்து

மயங்கித்திகைசெயதேன் பிராணநாதா-சுவாமி
உற்றமனிதரில்லை யொருவர் துணையுங்காணேன்
உருகுதேயென் மனது பிராணநாதா-சுவாமி
இத்தலந்தன் னிலேநா னெனக்குகா ணுவேனும்மை
இரங்கிவந்தருளுவீர் பிராணநாதா-சுவாமி

தமயந்திசொல்-விருத்தம்.

நருவியமாலையிட்ட நளபதிதனைக்காணமல்
அரைநொடிபிரிந்ததில்லை யவருமேநானுமின்று
பருதிகண்டிடுபெசிப்போற் பகவானுமெங்களைத்தான்
அருவனந்தன் னிலேயோ வலையவேயமைத்திட்டாரோ.

ரு-வது-தமயந்திபுலம்பல்-தரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

என்செய்வேனென்தன்மனா மஞ்சுதேயிவ்வனத்தில்
பஞ்சமாபாவிபாகினேன் யென்சுவாமிநாதா
முன்செய்ததீவினையோ வஞ்சகமேசெய்தேனோ
தஞ்சம்வேறுருங்காணேனே யென்சுவாமிநாதா
மானுங்கலையது போல் தேனுஞ்சுவையெனவும்
நானுங்கலந்திருந்தேனே யென்சுவாமிநாதா
கானகந்தன்னிலேதான் மானமில்லாமல்விட்டு
போனதடமுங்காணேனே யென்சுவாமிநாதா
சின்னஞ்சிறுவயதி லென்னைமணம்புணர்ந்த
மன்னவாயென்றுகாண்பேனோ யென்சுவாமிநாதா
அன்னமுடனேமுன்னாள் சொன்னவுறுதியெல்லாம்
என்னமாய்த்தான்மறந்தீரோ யென்சுவாமிநாதா

பொது-விருத்தம்.

உறுதியாய்மாலையிட்ட வுத்தமச்சக்கிரவர்த்தி
மறுவியென்நாளுமின்று வனந்தனிலெந்தனைவிட்டேக
இருவிழிநீர்களோட வேங்கியேபாதவித்துத்
தருவனந்தன்னில்வீழ்ந்துத் தமயந்திபுலம்புவாளே.

சு-வது-தமயந்தி-புலம்பல்-தரு-இ-ம்-காப்பி-ஆதிதாளம்.

சபிபகவானே தயவுசெய் வோனே
இனியென்னைக்காவாயா ஏழைமுகம் பாராயா (சபி)
சின்னஞ்சிறுபோதினிற் செங்கைதொட்ட நாதனே
அன்னீதமாகவேதொட்டவர் ஆசிழந்தலைய விட்டவர் (சபி)
பாலகரும்பிரிந்தானே பத்தாமோசம் புரிந்தானே
காலம்பொல்லாதாகக் காட்டில்விட்டுப் போக (சபி)
சென்றவழிகாணேன் தேடியும்வீணா னேன்
என்றுவருவாரோகூவி என்கண்ணால்காண்பனோ பாவி (சபி)
காட்டில்விடலாச்சே கங்குல்மிஞ்சிப் போச்சே
நாட்டைவிட்டுலங்குண்ணி நாயகன்செய்ததை யெண்ணி (சபி)

மானுங்கலைபோலே மருவிப்பிரிந் — தாலே
யாவென்னசெய்குவனையோ ஆதியிற்சொன்னசொல்பொய்யோ

தமயந்திசொல்-விருத்தம்.

இந்திராணியரம்பைப்போற் வெழிலுடனிருந்தவென்னைச்
சிந்தைவஞ்சகமாய்க்காட்டி தியங்கவேவிட்டுப்போன
சந்திரகுலவேளந்திரன் றனக்குமேபாரியாகத்
தந்திடவென்றேவையா தவமிருந்தெனைப்பெற்றாயே.

ரு-வது-தமயந்திபுலம்பல்-தரு-இ-ம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்.

ஐயாவென்னசெய்வேனிந்த ஆரண்யந்தன்னிலேதான்
செய்யாததவம்புரிந்து தேவாலயந் — திரிந்து
மையலுடனேபயின்றே வனத்தில்விட் — டீன்றே (ஐயா)
சந்திரகுலபோஜன் சக்கரவர்த்தி — யிராஜன்
வந்தென்னைக்கைதொட்டார் வனத்தினிலே — விட்டார் (ஐயா)
பாதசசாமெட்டும் பாதந்தனி — விட்டீர்
ஆதலத்தென்காலிற் புழுதிபடிய — விட்டீர் (ஐயா)
காட்டில்விட்டுப்போன கணவன்வரக் — காணேன்
கூட்டிமுடிப்பாயோ குமாரவெதிர் — தோண (ஐயா)
பஞ்சணைதன்னிலே பயிலவைத் — தாயே
அஞ்சியவனத்தில் அலையப்பெற் — றாயே (ஐயா)
கண்களிருளாகுதே காதடைத்துப் — போகுதே
பெண்களுள்ளேநான் பொல்லாப்பெரும்பாவியாநீர்சொல்லாய் (ஐ)
தாங்கியேமார்பிற் றழுவியே — வளத்தீர்
வாங்கியென்னுயிரை வனத்திலே — விட்டீர் (ஐயா)

தமயந்திசொல்-விருத்தம்.

பஞ்சணைமீதிலெந்தன் பதம்பட்டாலுறுத்துமென்றே
அஞ்சலிசெய்துமார்போ டணைத்துமுத்தாடிக்கொஞ்சக்
குஞ்சரமேருவெந்தன் கொற்றவனெனைப்பிரிந்து
சஞ்சலந்தீரவெந்தன் றந்தையேயென்செய்வேனே.

கூ-வது-தமயந்திபுலம்பல்-தரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

எத்திசையும்புகழ் மெய்த்தவம்புரிந் — தென்னை
யீன்றெடுத்தீரோ வெந்தன் — ஐயாவே
சித்தமகிழ்ந்துநீயும் பெற்றபெண்ணை — வனத்தில்
திகைத்தலைந்திடக்கண்டு சகிப்பாயோமனங் — கொண்டு (எத்தி)

காவலனளனையா னவனுடனே — யன்று
கைப்பிடித்த குறையோ — ஐயா-வென்னை
இப்புனத்திலேவிடவும் மெய் — யாவே
மேவினானுன்வயிற்றிற் பாவிவந்தே — யுதித்த
வெனையோ வறிதிலே — னையாவே (எத்தி)

நாட்டையிழந்துநடுக் காட்டிலெந்தனைப்      பிராண
நாதன்பிரிந்துபோக மதி      தானோ-சதி
பாதகன்செய்யுமிந்தச் சதி      தானோ
விட்டிவிருக்தேனென்று கேட்டசெவியா      லிந்த
வேஷமானேனென்றிடப் போறும்      பாயோ (எத்தி)

இருளவனந்தனிற்றுஷ்ட மிருகங்களைக்கண்டு      நான்
ஏங்குவனோவீமராஜேந்      திரனே-பயந்
தாங்குவனோயிந்த வனுக      திரமே
உருகுதேமனமெதைப்பெருகுது      சாவேரியை
உகந்துசொல்லிவளர்த்த      ஐயாவே-எத்தி

தமயந்திசொல்-விருத்தம்.

முன்னேவிதியிதென்ற முடித்திடும்பிர்ம்மதேவர்
சொன்னசொற்றவறிலாத சுந்தரனைக்காணேம்
தன்னிலேபுலம்பிவாடித் தயங்கவேதிரியவிட்ட
என்னுயிர்ப்பிராணநாத னின்னமும்வரக்காணேனே.

௭-வது-தமயந்தி-புலம்பல்-தரு-இ-ம-௭ யதுகுலகாம்போதி-ஆம்.

இன்னம்வரக்காணேனையா என்பிராணநாதன்
இன்னமவரக்காணேனையா
மன்னுயிருந்தன்னுயிர்போ      லுன்னியநளராசேந்திரன்
மருவியதேசன்றிருவுளா      வா[illegible]ன்
பிரியமாபாசந்தருநள      ராஜன் (இன்ன)

இந்திரன்விருந்துதாகச் சிந்தையுமகிழ்ச்சி      யாக
வந்தவர்மனதுநோக முந்தநான்சொன்னதா      லேக.
அங்கநான்வறமங்களுண்டோ அடவியில்வந்ததுகண்டோ
அதிகருணைளன் மகிகுல      சீலன்
பதியனுகூலன் துதிமகி      பாலன் (இன்ன)
வேதனையாகவேதேடிச் சூதையுநான்விளை      யாடி
நீதிமந்திரியைவாதாடிப் பேதைபோல்வனத்தை      நாடி.
காதலைமறந்தயிந்தக் காரணஞ்செய்வாரோ      அந்தக்
கலைமகள்வேதனை சடைமதி      நாதன்
கலைவிதியோவென் நலமிகு      நாதன் (இன்ன)
ராசனுக்கென்றேமனது ஆசையைவிட்      டேகினது
தேசமதிலேதனது நேசமுமுண்டோ      மனது
ராகினியிலெதுகுலக் காம்போதிராகம்      பாடிந
காவினில்வருகப் பாவிநா      னுருகச்
சிலனும்பெருக ஆவலுந்      தருக (இன்ன)

தமயந்திசொல்-விருத்தம்

எங்கியேயழுதுவாடி யிருகணீர்ச்சொரியவோடி
ஓங்கிருள்வனத்திற்றுனு றுயர்மலைவனங்கள்புகுந்து

பாங்கினில்வருமிருகங்கள் பார்த்துளக்கலக்கங்கூவு
மாங்குயிலெனவேசொல்லி வார்த்தையாலுலாக்கின்றாளே.

அ-வது-தமயந்தி-புலம்பல்-தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

மயில்காள்புறாவினங்கா-ளெல்லோருமிங்கே
வாழுமலையேவனங்காள்
குயில்காளெனைக்கூ டி-வந்தமன்னவன்செய்த
கொடுமையைக்கண்டதுண்டோ-முந்த
நான்-தான்பிழைகள்செய்தேனோ-புருஷர்மனம்
நையும்படிக்குவைதேனோ
உண்டோவுலகத்தி-லிதுநித்தினைதன்னில்
ஒளித்துவிட்டோடிப்போவதும்
கரிசனம்போலே-யிருந்துகாட்டில்விடவுங்
கருத்துவந்தென்னைமறந்து
கிளிகாளிரக்கமில்லையோ-நளன்-செய்தியைக்
கேட்கவென்னுடன்சொல்லையோ
அளிகாள்வரவுங்காணீரோ-சொல்லாதிருந்தால்
அருள்பர்தங்கள் பூணீரோ
புருஷனைத்தெய்வமென்பதும்-நான்குவேதமும்
பொய்யோமுன்னோர்கள்சொல்வதும்
அழகானபெண்ணைக்கண்டாரோ-அவள்கொடுத்த
ஆசைக்குசிக்கிக்கொண்டாரோ
தாயுந்தந்தையும்விடுத்தேன்-கணவனையெத்
தேசமெனவேயடுத்தேன்
சேயுஞ்செல்வமுமிழந்தேன்-எனைக்கொண்ட
சீமான்றன்னையும்விடுத்தேன்
பழகாதபேனையாளும்-நம்பிவந்தோரைப்
பழிசெய்யாப்பழிகள்போலும
காட்டினில்வாழுமன்னவங்காள்-காம்போதியாடிக்
களித்துணாநீரோமுன்னமே

பொது-விருத்தம்.

கூடியேவனத்தில்வந்து கொற்றவன்றனைப்பிரிந்து
தேடியேயரத்விக்குஞ் சேயிழைபாம்பைக்கண்டு
ஆடியேபடம்விரித்து அரவமுஞ்சந்திரனென்ன
மூடியோராகுபோல மொய்குழலழுகின்றாளே.

கூ-வது-தமயந்திபுலம்பல்-தரு-இ-ம்-காப்பி-ஏகதாளம்.

தெய்வமேயிதற்கென்ன செய்குவே-னெந்தனைதிரோ
தீம்புசெய்கிடப்பாம்பு வருகுதே
உய்வதற்கொருவழியுங் காணேனே-நெருங்கிவருகு
துடல்நடுங்கவுயிரு மாகினேன்

காலவிஷம்போலாகி சேஷனும் - வுலகமூடிக்
கனல்வாவாந்துஅனேகா தானிது
ஓடிபேயபடம்விரித்துச் சீறியே - அரவமெந்தனை
உற்றுநிற்கவும்மனது தேறியே
நீடும்புலிகண்டு நடுங்கச் சீறுதே - காணவெந்தனை
நெஞ்சமிகவும் கலங்க லாச்சுதே
மன்னவாமன திரக்க மல்லையே - ஆரவந்தன்னையோ
வதைத்ததென்னுயிரைக்காக்கவில்லையோ

முறையிடுதல்.

திங்களணிவேணியனே முறையோ முறையோ
தேவராயன் முனிவர்களே முறையோ முறையோ
அங்கமெல்லா மரவனுசுற்றி முறிக்குதையோ
ஆகாயம்பூமியிரு ளாகுதையோ
துங்கநெடுமாலறியே முறையோ முறையோ
தோகையுங்க ளடைக்கலங்காண் முறையோ முறையோ
கங்கைதன்னைவனத்தில்விட்டாய் முறையோ முறையோ
நளேந்திரனே வுந்தனுக்கு முறையென்றுளே

௰-வது-தமயந்திபுலம்பல்-தரு-இ-ம்-காம்போதி-ரூபகதாளம்.

அரிநாரணவாசுதேவனே,
ஐயோவிதற்கென்ன செய்வனே சுவாமி
கருநாகமு மலைபோலென்னைக்
கண்டடனே சீறிக்கொண்டுவருகுதே (அரிநாரண)

இருகண்ணிலுமெரியுதே தண
லீசானூர்விழிதனக்கொப்பாகவே
திருமாதுபங் காளாவென்ன
செய்குவேனிதற்கெப்படிகுப்குவேன் (அரிநாரண)

மாலையிட்டுவனத்தில்விட்ட
சீலன்றன்னைத்தேடிவந்த
சோலைதன்னிற்பாம்பைக்கண்டல்
துடிக்குதேகைகால் நடுக்குதேஜயா (அரிநாரண)

காலனென வேலமுடன்
சாலவருமாவைக்கண்டு
வேலைத்தரும் பாகச்சட்டலம்
வெலியுதேமனக் கிலியுமீறுதே (அரிநாரண)

பூண்டான்மையல் வேண்டாமென்று
புகன்றேனென்று புகிதன்ஊவந்த
காண்டாவனந் தன்னில்மேவிய
கருநாகமோ மறுநாகமே (அரிநாரண)

அ

நீண்டாமல்முன் றியங்கச்சதி
வேண்டாவெறுப்பா வேஷமாய்த்
தாண்டிக்கொல்ல வேண்டிவந்த
சதியோதலை விதியோசுவாமி (அரிநாரணா)
பரதேசிபோற் றிரியவிட்ட
அரவுக்கிரை யளித்திட இவன்னைப்
புரியுந்துயில் தன்னிற்பிறந்த
புண்ணியனையுமென் கண்ணிற்காணேனே (அரிநாரணா)
பரதேவனே குருநாதனே
ஒருதுணையுநீவாக்காணேனோ
கிருபைவைத்துவரவேணுமென்
சரணம் காக்கச்சரணஞ்சரணம் (அரிநாரணா)

பொது-விருத்தம்.

ஐயையோசிவனேயென்று அலறியேயழுதசத்தம்
வெய்யதோர்வனத்தில்வாழும் வேடனுமகாதில்கேட்டுப்
பையவேசென்றுநாமும் பார்த்துமேவருவமென்று
மெய்யிருள்வனத்தில்வேட விபுதனும்வருகின்றானே.

இதுவுமது.

வல்லியம்வெடிதுப்பாக்கி மருந்துகுண்டம்புறுத்தூணி
மெல்லவேதடியுங்கொண்டு வேட்டைநாய்களைபிற்பிடித்துச்
செல்வியாள்தமயந்திப்பெண் தியங்கியவேளைதன்னில்
வில்லம்புகையிற்கொண்டு வேடனும்வருகின்றானே.

இதுவுமது.

முடிக்கிலங்கப்பொற்சரிகைச் சந்திரகாவி
மோகவுருமால்கவிக்கி முறையாய்ப்பூண்டு
வெடிக்குமருந்துடனே துப்பாக்கிக்குண்டு
வில்லுமெறியீட்டியம்புறுத் தூணிபூட்டித்
துடிக்கவரிப்புலிகொடிநாய் வலையுங்கன்னித்
தோளிவிட்டசல்லடமுங் கச்சைகட்டி
மடிக்கமலைப்புபங்கமுற விபுதவேடன்
மாதுதமயந்திமுன்னே வருகின்றானே.

வேடன்வருகிற-தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

வந்தான்விபுதகெம்பீரன்-காட்டில்-வாழும்வேடர்க்கதிசூரன்
வந்தான்விபுதகெம்பீரத்துட னென்னை
வாய்விட்டலறி மயங்குவதா ரொன்ன
முந்தியவேகத் துடன்மனங் கூடியே
மூதண்டநீடிய காடெங்குந் தேடியே (வந்தா)
வெற்றிவில்லம்புடன் பற்றிக்கையில் தண்டு
வேலுஞ்சக்கராயுதச் சூலப்படை கொண்டு

கொற்றவர்மாமலர் சிரத்தினிலே சூட்டிக்
கொம்பனேவெம்பிய துன்பமதா லெட்டி (வந்தா)

வெம்புலிபன்றிகள் தும்பிகள் வாடியே
வீரிட்டொதுங்கி மிரண்டெதி ரோடியே
அம்பாமும்புலி யும்பார்க்கு கிட
ஆர்ப்பரிக்கும்படி யேர்ப்படுத்துங் கெடி (வந்தா)

ஆவென்றலறிய பாவையின்வாய் மொழி
யாமெனவேமன வேகத்துடன் வழி
காவிலுயருழை மாவுங்கடுங் கிட
கன்னியுனாச்சுழும பன்னகமொடிக் கிட (வந்தா)

வேடன்சொல்-விருத்தம்.

ஆரம்மா யிவ்வனந்தி லாதிலட்சுமியோநீதான்
பார்பதிதானோபிரமன் பாரியோரதியோநியார்
நேர்மையாயக்காககத்தில் நித்யவாசகைகள்தானோ
ஊநடனுன் தன்பேரு முண்மையாயுரைசெய்வாயே.

(வ-ம்) அகோவாருங்களம்மாதாயே நீயார் லட்சுமிதேவியோ சரஸ்பதியோ இந்திராணியோ ரதிதேவியோ அல்லவென்று இந்தவனக்காக்கப்பட்டவனதேவதையோ உன்னுடைய ஊநம்பேருஞ் சொல்லவேண்டுமம்மாதாயே.

தமயந்திசொல்-விருத்தம்.

புவனத்தில்விதர்ப்பதேசம் புகழ்பெறுவீமராஜன்
தவத்தினால்வந்தபுத்ரித் தமயந்தியெனு நாமம
நவகண்டநளராஜருக்கு நான்பாரியானபின்பு
கவனமாய்வனத்தில்வந்து கணவனைப்பிரிந்தேனண்ணே.

(வ-ம்) அகோவாருமண்ணா வேடனே நான் விதர்ப்பதேச மாளப்பட்ட வீமராஜன்புத்திரியாக்கும் என்பேர் தமயந்தியென்று சொல்வார்கள் நான் நவகண்டமு மாளப்பட்ட நளச்சக்ரவர்த்தி மஹாராஜாவுக்கு நான்பாரியானபின்பு சனியீசுவரபகவான் இடுக்கததினாலே நளமாராஜனும் வனத்துக்குவந்தோம் வந்தவிடத்தில் அவர் என்னை விட்டுப்பிரிந்து போனார் அவரைத்தேடிக்கொண்டு வருகிறவழியில் இந்தசலைப்பாம்பு என்னைச்சுற்றிக்கொண்டு ஆகடியஞ்செய்யுதண்ணா வேடனே.

வேடன்சொல்-விருத்தம்.

அங்கிரமானகாட்டி லருகவையேயுன்னைக்கொல்ல
வந்திடும்பாம்புதன்னை வனத்தினை துயினைககாப்பேன்
சிந்தனைசெய்யவேண்டாந் தேன்மொழிமாதேயிப்போ
எந்தன்கைவாளினாலே விருதுண்டஞ்செய்குவேனே.

(வ-ம்) அகோவாருங்களம்மாதாயே நீங்களொன்றுக்குப் விசனப்பட்

வேண்டாம் என்கையிலிருக்கிற பாணத்தினலே இந்தமலைப்பாம்பையி ருதுண்டாகச் செய்துப்போடுகிறேன் அம்மாதாயே

தமயந்திசொல்-விருத்தம்.

சுத்தியேபாம்பைவேடன் துணிந்திட்டபாணத்தாலே
வெற்றிசேர்தமயந்திக்கு விம்மோசனம்வேடனலே
சுத்தமாயிடுக்கண்நீக்குந் தோகையுமகிழ்வாகிப்
பெற்றிடத்தந்தையண்ணே பிராணநாதனைக்கண்டீரோ

(வ-ம்) அகோ வாருமண்ணுவேடனே எனக்கு மலைபோலவந்தஆப த்தைதீர்த்தமட்டுமன்னைபெற்றுவள்ர்க்காததகப்பனுகவந்தாய்நீவரு கிறவழியில் என்பிராணநாயகிரான நளமகாராஜனைக் கண்டிருந்தால் சொல்லவேணும் அண்ணேவேடா.

வேடன்சொல்-விருத்தம்.

துணையொருவருமில்லாமற் துயரமாவனத்திலேதான்
கணவனைப்பிரிந்துநீயுங் கலங்கினின் றழுகின்றதேனே
புணரியிலநுக்கன்றனும் போய்விழுந்திடுமுன்னேநந்தன்
மணமிகுங்குடிசிற்செல்ல மங்கையேவருகுவாயே.

(வ-ம்) அகோ வாரும்பெண்ணே தமயந்தி இந்த அடர்ந்தமான காட்டிலே அரசனைத் தேடிக்காணுமல் கெதிகலங்கி நிற்கிறாய் சூரியன் அஸ்தமானமாகுமுன்பாக என்குடிசைக்குப் போவோம் வாரும்பெண் ணே தமயந்தி.

தமயந்திக்கும்-வேடனுக்கும்-முதல்தர்க்கம்-தரு-இ-ம
முகாரி-ஆதிதாளம்.

வாருமென்றெனைக் குடிசிற் கூறும்வேடனே-அடா
பாவிபதியுனக்குவந்தசென்ன சதியோடா-அண்ணே
சதிசெய்தமன்னனைத்தேடிக் கெதிகலங்கியே-அடிபெண்ணே
தயக்குறுமென்றன்மனது மயங்கினேன்பெண்ணே
மயங்கிநீவேண்டாயிருந்த பயங்கரமானபாம்பை
வதைத்துநீசெய்யுந்தர்மத்தைச் சிதைக்குறாய்வேடா
தர்மமுந்தனுக்கென்மீதில்வரும்பந்தசெய்யாமல்-அடிபெண்ணே
சந்தோஷமாகவென்பின்னே-வந்திடாய்கண்ணே
பின்வருங்காரியந்தன்னை யெண்ணிடாமலே-அடாபாவி
பேதையாலிறந்தனர்காண் காதலால்-வேடா
காதலாயெந்தனுக்கென்று ஆதரவாகவேநீயும்
கானகத்தில்வீற்றிருப்போந் தானிதம்பெண்ணே
நீதமெனக்குகந்தமன்னன் சதமல்லால்வேடா-பாவி
நேயமனைவத்திழுக்குமுந்தன் நாயடாபோடா
நேயமாயழைத்துலந்து மாயமாவிட்டுப்போன
நிருபனுக்கேவுன்மனது வருகிறாய்பெண்ணே

வேடன்சொல்-பத்தியம்.

சித்ரமேயொளிரேவுரதநமேதிசம்பூர்ண
திங்களேயபாஞ்சி தங்கம்மதாபா
சுத்தநவரசவிளிய புத்ரமுதயேசெகந்
துதிசவுந்தரமதன் துணையிரதியே
நித்யவாரணமாசுபெற்றவிந்திராணியே
நிகரிலாவமுதமே நின்றவண்ணமே
சித்தமுன்னிருபதத் தினுபரிச்சனே
செய்துபலகாலமுங் கொண்டாடினேனோ
இக்தலந்தன்னில்வருசுதந்தைதமொழியே
கொத்துவழிபெற்றதொரு மெய்த்தவமோதான்
சித்திபெறுமுத்தியருள் சத்திமிவளே
உத்தமியைவிட்டுமுக வுய்யவசமோ.

[வேடனுக்கும்-தமயந்திக்கும்-உ-லது-தர்க்கம்-தரு
இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்.

அன்னமேநான்மோக மாகினேனெமதத
ஆவலுடனேகூடமேவியிருந்திட
வன்னபயிலே றுயிலே திரு
வாசையதிபோலுநுதல் வேலின்விழிபாலின்மொழி (அன்னமே)

தமயந்தி.

என்னடாலாயமதஞ் சொன்னாய்வேடா-வுந்தன்
இச்சையினுல்மன தச்சமில்லாமலே
முன்னமேமட மாதர்களால்வெகு
மோகமதனுலேகெடு லோகமதியென்னுமலே. (என்னடா)

வேடன்.

வங்கணமாகியதா யிருவருமனைக்குள்ளேகியேநாம்
இங்கிதவேள்ரதி போலத்தினமு மிருந்திடலாமினிமேல்
மங்கையென்மாதே வருவாயிப்போதே
சங்கையென்னுதே தகித்துணையாதே
சம்பிரமதாயென்னை யடிமைப்படுத்திடும்
அம்புயனேர்விழி நீர்கள்துடைத்திடும
தங்கமேயுந்த னெல்லக்கமதைத்தொடத்
தாளுநில்லேமனல் தேனுமினிநல்ல (அன்னமே)

தமயந்தி.

பஞ்சையென்றேகுறித்தாய் வரும்விதிபாராமலேயுரைத்தாய்
கெஞ்சுவதேதுக்கடா உனதுசொல்கேட்பதுமேதுக்கடா
அஞ்சுவதேது அகல்வாயிப்போது
கொஞ்சத்தினத்தைக் குறியாமனத்தை
கோபமுண்டாமென்னை திடேகில்லாலே
பாபஞ்செய்யாதேபழுதுசொல்லாதே

இபக்கரியென்ன ஆவனுட னுன்னை
திட்டிதனிற்கண்ட விட்டிலெலவண்டா (என்னடா)

வேடன்.

மண்டுமிருள்வனத்தில் திரிவது மார்க்கமோ தான்புனத்தில்
கொண்டவன்றன் மதால்சற்றேனிங்குறியாமலெதந்தினத்தில்
ஒண்டியாவிட்டு வுடலசவிதகிட்டு
விண்டுனைப்போக விடாமலென் மோக
மிகுந்தத்தவஞ்செய்து காணவேயுந்தனை
மீறிடமாரன் கணைதொடவெந்தனை
உகந்துநின்சித்தத்தை மகிழ்ந்தொருமுத்தம்
உதவிசெய்பெண்ணே யிதழமுதின்னவும் (அன்னமே)

தமயந்தி.

பாரிற்றவமுடைய ரிஷிகளும் பத்தினியாருடைய
நேர்மையளிக்கவென்று சிவனுமே நிட்சயமாகவென்று
மீறியேவந்து வெட்கமிழந்து
பேருலகத்துப் பிச்சையெடுத்து
பின்னுகன்போனது தானறியாயோ
விங்ஙனம்வந்து இடர்சொல்லுவாயோ
பேதகமுண்டே குறைநீயுண்டே
பித்தாவுனதுடன் வித்தையில்லாதடா (என்னடா)

தமயந்திசொல்-கலித்துறை.

தனிவழிபோவந்த மாதென்னைவேட னுந் தப்பிதமாய்
அனியாயமாயிப் படிசொல்வனே ஐயையோசிவனே
இனியார்வனத்தில் மறுகதியில்லை யெனக்கினிமேற்
சனியேகதியன்றி வேறில்லைகாண்சிவ சங்கரனே

தமயந்தி-தனியேபுலம்பல்-தரு-இ-ம-காம்போதி-ஆதிதாளம்.

சிவசிவா யிந்தவேடன் சிந்தைமதமாயென்னைச்
சிவனே-ஐயோ-சிவனே
அவமானஞ்செய்யவென்னை யாச்சுதேகேட்கவுநான்
சிவனே-பரம-சிவனே
குவலயத்தசாதன் கோதைமார்களில்மெத்த
சிவனே-ஐயோ-சிவனே
பாவஞ்செய்துபிறந்தேனோ பாவிகண்ணிற்காணவும்
சிவனே-பரம-சிவனே
கானகவேடனென்மேல் காதல்கொண்டேனென்றானே
சிவனே-ஐயோ-சிவனே
மானமழியவுயிர் வைத்திருந்தென்னபலன்
சிவனே-பரம-சிவனே

தானேவந்தென்னைச்சுற்றுஞ் சர்பங்கொல்லாமற்போச்சே
சிவனே-ஐயோ-சிவனே
ஈனம்வராமலென்னை யின்றுரட்சிக்கவேணும்
சிவனே-மாம-சிவனே

வேடன்சொல்-கொச்சகம்

மானேபிரிந்துமனம் வாடியலேபாம்லேக்கும்
நானேவுனைதினமும் நன்மையுடன்சேர்ந்திருப்பேன்
தேனேதமயந்தித் தேவியுனக்கானதெல்லாம்
தானேகொடுத்திடுவேன் தயவகாதேவாயிலே.

(வ-ம) அகோவாரும்பெண்ணே தமயந்தி இந்தக்கானகத்தில் ஒண்டியாயழுதுபுலம்பிக்கொண்டு திரிவானேன் எனக்குத்தேவையானமதுமாமிசங்கள் கம்சங்கள் முதலானவைகளுங் கொண்டுவந்துதருகிறேன்சந்தோஷமாக நாமிருவரும் சேர்ந்தணைவோம் வாரும் பெண்ணே,

வேடனுக்கும்-தமயந்திக்கும்-௩-வது-தர்க்கம்-தரு.

இ-ம்-முகாரி-ஏகதாளம்

அதிருபவனிதையே-யனமேபெண்ணமுதேநீ
மதிமுகமலர்தென்னை மருகநீவருவாய்

தமயந்தி.

வருவதேதுன்குல வஞ்சியரோசொல்லும்
பருவமதறியாமற் பதருருய்வீணே]

வேடன்.

வீணாய்மன்மதவிடு விணாமலர்க்கணையாலே
வாணாலேவாங்குவதுன் மனதிற்குவசமோ.|

தமயந்தி.

பாராளும்முடிவேந்தன் பாரியென்றெண்ணுமல்
ஆருன்னைப்போலிந்த அநியாயஞ்செய்வார்

வேடன்.

சொன்னேனென்றென்றனுயிர் துலைத்திடப்பொறுக்குமோ
பின்னேயெந்தன் விரகவேதனைதீராய்

தமயந்தி.

தீர்க்கவேணுமென்று நின்றுமுண்டேசுறாய்
மார்க்கமாகவுந்தன் வாழ்மனைகேகாய்

வேடன்.

ஏகபோகமாக விருவருமாக்கூடித்
தாகமோகத்திரத் தையலேசெல்வாய்

தமயந்தி.

செல்லும்நல்லகதி சிந்தியாமலேநீயும்
புல்லர்வாய்மதம்பேசப் பொருந்தாதேவேடா

வேடன்-கந்தார்த்தம்

வேதன்புரிந்தவிதியின்பயன்கள் விரகம்பொருந்தமதனன்
போதின்சாங்கனௌணையும்பொழிந்து பொருதென்றலோடுபனியின்
பீடென்சிறந்தகுயிலுந்தெளிந்த வெண்டிங்களும்பகைசெயச்
சூகின்றனங்கள் வடிவேல்மிகுந்த

தோகாயெந்தனைக் காரடி-வதைசெய்யாமல்
மோகாந்தகாரந் தீரடி
தோகையரேமனை வேகமதாகவே
சோகமில்லாமல் பாகவேவந்திடும் (தோகா)

தமயந்தி-கந்தார்த்தம்

வண்டாயிடும்புவசனங்கள்கூறி யிடாதேயனந்துவெருவாய்
மான்பேடினங்களறியாமலுந்தன் மதிபுங்கலங்கிமருகத்
தூண்டாதிலங்குமணிபோல்விழுந்த சுடர்மேல்விழுந்தபுழுவாய்ப்
போன்றுமனுந்த னுயிர்தப்பியேசடிப்

போடாவென் றுன்னோ டில்லாதே-புத்தியில்லாத
வேடாவாதுகள் சொல்லாதே
போடுனதாசையை யிடறிவாயென்னைக்
கூடுவமென் றுநீ வாடுகிறாய்ப்பாவி (போடா)

வேடன்.கந்தார்த்தம்.

போவென்றுசொன்னமயிலேபிரிந்து புவியாண்டமன்னனுனையே
ஆவென்றிரங்கியேயின்றொழிந்த அலனைனறென்றதேயென்னையும்
சீவன்பிரிந்துவிடினும்பிராண சிநேகந்தவிர்ந்துவிடனான்
காவென்றுமுன்னமே வந்தனாகக்

காணுகிறந்தது முன்னே-பாராயேபெண்ணே
வாணுலழிந்தது வுன்னை
காணுமுன் மீதினி னானுசலாகவே
பூணுதுமாலையல் நாணமில்லாமலே (காணு)

தமயந்திசொல்-கந்தார்த்தம்.

முன்னுவிறந்த வரவால்நினைந்து மொழிகின்றபாவியுனையும்
உன்னுமலிந்த வனியாயமெய்த னுடனே கலந்தபுலையா
என்னுவிறந்து பழிநூணவேத னெழுதும்பயன்கள்விடுமோ
சொன்னல்மிகுந்த கயடேபுரிந்து

சூதால்புலம்பினை யடா-வீணிலேசொல்லும்
வாதால்கலக்குவே ணடா
சூதுநினைந்ததி லேதுவரு பல
நீதிகுலைந்திடும் பாதகாநிந்தை செய் (சூதால்

வேடன்சொல்-வெண்பா.

போமோமதராசன் றூசிலேயென்னைவிட
லாமோமணதிரங்கி யானவர்மாமோரக்

சுந்தரமேனுக்குயிலே தோகைமயிலேசரசத்
தந்தரமேயுன்காதல் தான்.

தமயந்திக்கும்-வேடனுக்கும்-சவாத-தர்க்கம்-தரு.

இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

சித்தமகிழ்தணைத்தொரு-முத்தந்தாராயோ-அடிபெண்ணே
மெத்தமையலாகுதெந்தன் விரகஞ்சகியேனேயுந்தன் (சித்த)

தமயந்தி.

பித்தா மதிபேயாயென்னை யெத்தாதேபோடா-அடபாவி
பத்துந்தனலா மென்றனைச் சிந்தந்தனிலேயெண்ணாதே (பித்)

வேடன்.

எண்ணமதில் வேறொன்றில்லை யின்பமுடன் கூடிஉந்தன்
கிண்ணமுலை தொட்டணையக் கிலேசமதொன்றில்லாமல் (சித்த)

தமயந்தி.

அல்லடாபாவிநீசும்மா யாவினையவீணில் விடாதே
நில்லாதேபோடாயெண்ணசை நெஞ்சந்தனிலேவையாதே (பித்)

வேடன்.

நெஞ்சந்தனிலே யென் மீதில் நேயமில்லாமற்பேசாதே
பஞ்சமலர்மாரனம்பு பாயுதுகாணென்னசெய்வேன் (சித்த)

தமயந்தி.

பாயுதுமாரனம்பென்று பரியாசமாகவென்னை
வாயிடும்பாகவேசொல்லி மடிகிறாயுன்மதத்தாலே (பித்)

வேடன்.

மடிந்தாலுமுன்னாசையெந்தன் மனதைவிட்டுப்போமோ பெண்ணே
பிடிவாதம்பண்ணாதேயினி யேதையோநான் மணந்தாளேன் (சித்த)

தமயந்தி.

தாளாமலென்னடாபாவி சங்காபரணங்கூவிக்
கேளடாசெருவததாலே கிட்டவாராதேநான்கோபி (பித்)

வேடன்சொல்கவிதறை.

நாயுண்டோராயிர நரியுண்டுதோலுண்டு நற்றுணைக்குப்
பேயுண்டெந்தன் கிட்ட மந்திரமோவெகு பெரிதுமுண்டு
காயுண்டுகொட்டிக் கிழங்குண்டுதேனுண்டு கம்பளியுண்
டேயிந்தசம்பத் தெவர்க்குபாரடி யேந்திழையே.

வசனம்.

அகோவாரும்பெண்ணே தமயந்தி எனக்குண்டான சம்பத்துகள் எவர்களுக்குண்டு நாயிலேஆயிரம்-நரியிலேநூறு பூதப்பிரேதம்பசாசுக ளிலே நூறு-இன்னம்இன்னப்பட்ட வஸ்துகள் காய கனிகிழங்குதே ன் கட்டவஸ்திரமும் கம்பளிகளு மநேகமுண்டு இந்தசம்பத்துக ளெல்லாம் அனேகமுண்டாயிருக்குது என்னைச்சேர்ந்து அனுபவிப் பாயடிபெண்ணே தமயந்தி.

வேடன்கட்டளைக்கலிப்பா.

பாவியென்றமொழியுந் தமயந்திப்பாவையேயென் பரிதாபம்பார்டி, கூவுமாக்குயிற்றென்றலுந் திங்களுங் கொடுமைசெய்யக்கொடியமதனுமென், ஆவிசோரவடிக்கணைதாக்கவுமார்ப்பரித்துவில்லுங்கையிலேந்தியே, காவிமாமலரம்பு தொடுக்குமுன்காதல் தீரடிகாமசஞ்சீவியே.

வேடனுக்கும்-தமயந்திக்கும்-ரு-வது-தர்க்கம்.

தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

லாவணி.

கயல்விழியழகுந் திகழ்மதிமுகமும்
கண்ணிலகண்டபோதே-நான்-காதல்கொண்டேன்மாதே.-என்த
கருத்தையுமயக்கியுருக்குதுமாரன் (ன்
கணைகள்பாயுதென் கண்மணியே

தமயந்தி.

பாயுதென்றேபகர்ந் தாய்நயம்பாடியே
வாயிடும்போவனை வாயெனவாடியே
பேயெனநீபிழை யாக்கணைதேடியே

வேடன்.

பிழைக்கலாமோகணையது தாவப்பெண்ணே
வந்திடுவாயொரு முத்தந்தந்திடுவாய்
பிரியாவிடையா ரதிமாரன்போலப்
பிரியமாய்வாழலாம் பெண்மயிலே

தமயந்தி.

பெண்ணேயென்வசை பேசுகிறாய்பாவிநீ
கண்ணின்முன்னேநில் லாதேநான்கோபி
பண்ணுநம்மேல் பாழாச்சுதேதாவி

வேடன்.

தாவித்தென்றலுமென் னாவியூட்டவல்ல
சாடுதேமடமானே-யினி-சகிப்பதில்லை-நானே-நானும்
தாமசஞ்செய்திடாமலே என்னையுந்
தானணைவாயடி-தார்குழலே

தமயந்தி.

அடியேயென்றுசொல்ல லாகுமோவேடா
படியிலுன்னைநீ றாக்குவன்போடா
குவியிற்பெண்ணைக்கூட லாகுமோமூடா

வேடன்.

மூடாவென்றுமனங் கூடாமலேமிகவும்
மோடிசெய்யலாமோ என்மோகந்தவிர்க்கப்போமோ

மூட்டியேயென்னையும் காட்டியேஆசை
மோசஞ்செய்திடத்தகுமோ.

தமயந்தி.

தகுமோவுந்தனைத் தலையையறுத்திடவே
சகமீதெந்தன்மையல் தான்வெ க்கிடவே
அகமோவெந்தன் ஆசைப்பிரிந்திடவே

வேடன்சொல்-வெண்பா.

பெண்ணரசேகாமனம்பு பேதிக்குதேமனது
ளெண்ணமெல்லாநெஞ்சமிளைக்குதே-கிண்ணமுலைப்
பந்தாசண்டென்னெனக்கருகப்பைந்தாமரையிதழைத்
தந்திவியின்பந்தருவாய்தான்.

வேடன் சால்-கலித்துறை.

காட்டினிற்றனித்ததமயந் யே யெந்தன்கண்மணியே
வீட்டினில்வாடியிருவருங் டியேவீற்றிருப்போம
கேட்டதுதாரோன் தடுத்து யாதேகிளிமொழியே
மாட்டமென்றால்விட மாட்டுவ னேவினிவஞ்சியரே.

வசனம்.

அகோவாரும்பெண்ணே தமயந்தி இந்தக்காடிபுலி மிருகஜாதிகளிருக்கப்பட்ட கானகத்தில் நீ ஒண்டியாயழுதுபலம்பித் திரிவானேன் என்னுடையகுடிசைக்குப்போனல் என்பெண்சாதியை உனக்கு ஏவல் பணிவிடை செய்யச்சொல்லுகிறேன் நீயுமநானும்மன்மதனும் ரதியும் போலிருக்கலாம நீ என்னகேட்டபோதிலும் கொண்டுவந்துதருகிறேன் என்வார்த்தையைத்தட்டாதே நீ தட்டினலும் நான் விடப்போகிறதில்லையடிபெண்ணே.

தமயந்திசொல்-கலித்துறை.

மூடாவுனக்கென்ன கேடாசண்டாளா மூழுமூடா
வேடாவறிவில்லையோ வெந்தனாசையைவிட்டுவிடு
தாடாளாபோற்று நளராஜன்சக்கரந் தலைப்பிளக்கும்
போடாபிழைபொறுத்தேன் செய்தநன்மையும்போய்விட்டதே.

வசனம்.

அடாவாடா துரோகி உனக்குக் கெடுதிகாலம் கிட்ட நேரிட்டதே மூடர்களுக்கெல்லா மெறிந்துபோட்டமூட்டாளே என்னைஇப்படிக்கெல்லாம் வீணானபேச்சுகளைப்பேசினய இதுபகவானுக்கடுக்குமோ நீ செய்தநன்மையினலே இதுவரையிலும் பொறுத்தேன் இந்தச்செய்தி என்பிராண ாயகராகிய நளமகாராஜ யில்லாதபடியால் இப்படிக்கு வீணானபே சுகளெல்லாம் பேசினப் அவர்இவடம் இல்லாமற்போனலும் அவர் சக்கரமாவது வந்துஉன்தலையையறுத்துப்போடும் இனிமேலாவது எ பேச்சும்பேசாமல் தப்பிப்பிழைத்துவந்தவழியைப்பார்த்து ஓடிப்பே ாசண்டாளவேடா.

வேடன்சொல்-பின்முடுகுவெண்பா.

பொங்குமதிகாயவனப் பூங்குயிலுங்கூவவென்மேற்
சிந்தையில்லாமாரனம்பு தைத்துருக-மங்கையரே

ஆவியேயமேபொல்லாத அட்டிசொல்விடாயில்லாது
பாவையேயிணங்கவேளைபார்.

தமயந்திவேடனுக்கும்-௬ வது-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-சஹானபிலாரி-ஆதிதாளம்.

இணங்கவாவென்றுசொல்லி யிளமதியாய்ப்பேசாதே
சுணங்கனைப்போலநீயுந் துள்ளிவிழுந்தேசாதே
ஏசுவார்த்தையினு லிகட்சியாய்ப்பேதாதே
ஆசைதீரவந்து அணையத்தருணம்பெண்ணே
பெண்ணேயென் றசும்மாநீ பிதத்துகிறாயடாபாவி
கண்ணின்முன் னேநில்லாதே காதல்வையாதேநான்கோவி
கோபஞ்செய்தாலுமுன்னைக் கடியணையாமலே
சோபந்தீரவேதென்பாய்ச் சொல்லொருமொழிநீயன்பாய்
ஆண்பிறவிராவணனு மழிந்தான்சீதைதன்னாலே
தெண்டையிட்டுமோளாதே தெரிவையென்சாபத்தாலே
தெரிவையரோநீயென்பால் சித்தசன்விடுமம்பால்
உருகுதுந்தனைச்சேர வுன்மனதுவந்துசேர
மனதுவைத்திடப்பெண்ணால் மாண்டான் துரியன்றன்னால்
இனமுமெல்லுடன்வாது செய்தால்வருமடாதீது.

வேடன்-விருத்தம்.

கலங்கனென் றுலர்த்தாயிந்தக் கானகமலைகள்தேசம்
தலந்தனில்வேடனென்னைச் சமர்த்தனென் றிகொஞ்சுவார்கள்
பிலங்கொளுமிருகமெல்லாம் பிடித்தொருநொடியிற்கொல்வேன்
அலங்கிர்தமயிலேயுந்த னாசையால்வணங்கினேனே.

வசனம்.

அகோவாருமபெண்ணே தமயந்தி இந்தக்காட்டில் வாசம்பண்ணப்பட்ட வேடர்களெல்லாம் என்பேர்சொன்னால் நடுநடுங்கி ஓடிப்போவார்கள ஆருக்குமடங்காத மிருகசாதிகளையெல்லாம் ஒருக்ஷணப்பொழுதில்பிடித்துக்கொல்வேன் அப்பேர்ப்பட்டநான் உன்னைக்கண்டபோதே என்னை மன்மதபாணம் வந்துதுளைக்குது நானெப்படிசகிக்கப்போகிறேன் உன்காலையாவது கும்பிடுகிறேன் நீசொன்னவேலைகளெல்லாஞ்செய்கிறேன் என்பேரில்கோபஞ்செய்யாமல் சேர்ந்தணைந்தால் நானெத்தேசகாலமுமறப்பதில்லை அடிபெண்ணே தமயந்தி.

வேடனுக்கும் தமயந்திக்கும்-எ-வது-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-பூபாளம்-ஏகதாளம். (மேமனம்

பொறுக்கவொண்ணுதென் றுபோவென்றுசொல்லவந்தாய் அன்ன
வெறுக்கலாமோவிதுவேளையல்லவோபெண்ணே அன்னமே
வேளையல்லடாபாவிமிருகம்போலெண்ணியேவேடனே-என்னை
யாளநினைத்துவந்தாலடுக்குமோவுனக்கிது வேடனே

அடிக்காதோவுனைக்கொல்ல ஆவலதைத் துணிந்தேனே அன்னமே
காம-இடுக்கந்தவிரக்கூடியிருந்தாற்பாமென்னடி. அன்னமே
இருந்திடவென்மனமிசைறநானுன்னைவிட்டுவேடனே அடா
பொருந்துமோவுனக்கிது புத்திபோகாதடாவேடனே
புத்திசொல்வதென்னடி பூவையேயினிகேளும் அன்னமே உன்னைப்
பத்தியிழுத்துமானபங்கஞ்செய்வேனடி அன்னமே
பங்கஞ்செய்திடச்சனிபகவானுமபொறுப்பனோ வேடனே உந்தன்
அங்கம்பிளக்கவென்றாலனுகாமலோடிப்போவேடனே

வேடன்-விருத்தம்.

இடிநீபோடாவென்றே யுரைத்தமாயயிலேயானும்
தேடியபொருளுக்கேற்ற சித்திரப்பதுமைபெண்ணே
நாடினேனுந்தனாசை நபவளிதனழக்கோதி
கூடினேனுனையக்கண்டார் கும்பிட்டேன் கும்பிட்டேனே.

வேடன் தனிச்சொல்-கண்ணிகள்-இ-ம-பூபாளம்-ஆதிதாளம்.

பாதம்பணிந்துநான் பணிவிடை செய்கிறனடி பெண்ணே உந்தன்
பக்ஷம்வைத்தெனதன்னைக் காத்தருளடியென் கண்ணே
சீதமலர்வதனமாதே அடிமைகொள்ளும் பெண்ணே அடி
சிந்தைமகிழ்ந்தென்னை வந்துசேரடியெந்தன் கண்ணே
காமன் கணையாலெந்த னாவிதுடிக்குதடி பெண்ணே என்னைக்
கட்டியணைந்துமுத்தமிட்டருள்வாயடி கண்ணே
சோமனுந்தணலாகத தேகந்தனில்வீசுதே பெண்ணே மெத்தச்
சோபமாகுதேயென்மேல்கோபமேதடிசும்மாகண்ணே
பாவிமாங்குயில்கூடக் கூவிச்சதிசெய்குதே பெண்ணே இப்போ
பாராமலெனதாசை தீராமல்விடுவீரோ கண்ணே
ஆவிபதைக்கவிட்டாற்பூவைநான் சகியேனே பெண்ணே தேகம்
அழியாமற்புவியெங்கும் பழியாமற்காரடி கண்ணே

தமயந்தி விருத்தம்.

பழிசெயுங்கொடியவேடா பாதகாவுனக்குநல்ல
வழிபெறவோநீயிந்த வார்த்தைகள்சொன்னாயென்னை
எளிதெனவெண்ணவேண்டா மிருதயந்தாளேனிப்போ
அழிந்திடுமாசைவிட்டு அகலவேயகன்றிடாயே.

வசனம்.

அடாவாடா பாவிவேடா நீயிப்போர்க்கொத்த அகாத்யமானவார்த்தைகளைச்சொன்னாயே உனக்கு சுவாமி துணைசெய்வார் நீயும் நல்ல கதியிற்போய்ச்சேரமாட்டாய் இனிமேல்மனது தாளமாட்டாது இப்பவாவது எங்கேயாகிலுமோடிப்போடா வேடா,

வேடன் கலித்துறை.

நானேகரும்படி நீயேயதின்ரசம்நாயகியே
தேனேயுன்வாயிதழ் தந்தென்னைமெல்லவுஞ் சேர்ந்தணைந்தால்

தானேபுணர்ந்திட மனதினைகாதென்னைத்தள்ளுவையோ
மானேவிடேனுன்னை நீபேசுமதெங்குசொல் மாமயிலே.

வேடனுக்கும்-தமயந்திக்கும்-அ॰வது

தர்க்கம்-கன்னிகள்-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பூசைசெய்கிறேனுன்னை ஒருபுத்திசொல்லடியென் கண்ணே
நாசகாலமடாவேடா நீ நாகத்துக்கானாவாய்போடா
பாதம்பிடிக்கிறண்டிமானே என்மேல்பக்ஷம்வைத்தாளடி தேனே
வாதுசொல்லாதடாவேடா கெடு வருமுன்சொன்னேனடாபோடா
மறக்கனடிபக்ஷமானே எந்தன் மானமயல்தீரடி தேனே
பிறர்தாரமிச்சித்தநாயே முன்னால் போனதறியாயடாநீயே
கும்பிடுகிறேனடிபெண்ணே மனக்கோட்டிகொள்ளுதடி கண்ணே
வம்புப்பயலேஅடாவேடாமெத்தவாய்மிஞ்சாதேயடாபோடா
சகிக்கமாட்டேனடிபெண்ணே கைச்சரசமுன்செய்வேனடி யுன்னை
நகைத்துப்புரமெரித்தார்வேடாஉன்னை நாசஞ்செய்வாரடாபோடா
எட்டிஎட்டிபிடிப்பேனடிபெண்ணே நானினிமேற்கேளாடிகண்ணே
கிட்டவாராதடாவேடாபாவி நான்கிட்டடிலுனக்குவசனுவி
மருங்குபாரேனடிபெண்ணேஉன்னைவலுச்செய்வேனடி கண்ணே
நெருங்கிவாராதேகிட்டமோகிஉன்னைநெருப்பாயெரிப்பனடாதுரோகி

பொதுகலித்துறை.

முக்கண்சிவனுமனக்கெரிய முப்புரமெரியப்
பக்கலநுமானிலங்கையெரித்த பழமையைப்போல்
மைக்குழலாள்தமயந்திநளனிடம்வைத்தகற்பு
அக்கினியாலுமவ்வேடனெரிந்த வதிசயமே.

தமயந்தி விருத்தம்.

கோபத்தாலெரிந்தவேடன் கோளதயானடக்குவந்த
ஆபத்தைத்தீர்த்தானென்றே யடிக்கடிதுயரமாகி
சபத்தங்கெட்டசாதியில்வனவேடன்முன்பு
சாபத்தாலெரிந்தானென்று தமயந்திபுலம்புவாளே.

வேடனெரிந்தபின் தமயந்திபுலம்பல்-கன்னிகள்

இ-ம்-நவரோஸ்-ஆதிதாளம்.

மனிதரில்லாப்பாவியுலகுதனிலுயிரை
வைத்திருக்கலாமோவிந்தபட்டும்
தனிவழியேவந்த மங்கையர்கள்கணவன்
தன்னைவிட்டுக்காட்டில்வாலானேன்
கொண்டகொருமனக் கணவனில்லையென்று
கொடியபாவிவேடன்கொட்டிக்கொண்டான்
ஆலங்கள்சத்ரச் சாலைகள்தன்னைநான்
அழித்துநஞ்சைச்சோற்றிற்கலந்தனோதான்
காளினிலேபசுவை யுதைத்தனோதான்பசும்

கன்றைக்கட்டிப்பாலைக்கறந்தனேதான்
நம்பினோரைக்கூட்டி வந்துயானுமெல்ல
நட்டாற்றிற்கைகளைவிட்டனேதான்
வம்புசெய்துப்பிறருடைமைதனைக்கையில்
வாங்கியேதானில்லையென்றனேதான்
வாழ்மனையிற்றீயை வைத்துநானுமண்ணில்
வழக்குவிக்கைகள்சொல்லி வாழ்ந்தனேதான்
தாழ்வில்லாமற்செய்த பாவமெந்தன்கொண்ட
சக்ரவர்த்திதன்னைப்பிரிந்தேனையோ
சூழ்பவத்தைத்தீர்க்குங் கயிலைவாசாதொண்டர்
சுந்தரர்க்காகத்தூது சென்றவீசா
மங்கையாளென்கண் கலக்கந்தீரவெந்தன்
மன்னவனைக்காணவென்மருள்தா
கங்கைதிங்கள்கொன்றை தும்பைசூடும்லோக
காரணனேகாக்கக்கடனுமக்கே.

தமயந்திகாலத்தைவெறுத்தல்-விருத்தம்.

திருவளரும்விதர்ப்பநகராளுநர்வீம
சேனனருள்புதல்வியெனுஞ்[illegible]ழிக்குங்காலம்
தருவளருங்கற்பகநாட்டண்ணலென்பால்
சக்ரவர்த்திநளன்புகழைச்சாற்றுங்காலம்
கருவளருமெனதுதந்தைநரேந்திரர்க்குக்
கன்னியென்னைமணஞ்சூட்டிக்களிக்குங்காலம்
இருவளருங்கலிராஜனிடுக்கஞ்செய்ய
எண்ணிடவேயாங்கள்வனமெய்தகாலம்
எய்திடவேபுட்காணுமுலகையாள
இராஜனுடன்வனத்தில்வந்திருந்தகாலம்
செய்திடவேநித்திரையிலென்னைவிட்டுச்
சென்றமன்னன்றனைத்தேடித்தியங்குங்காலம்
நைதிடவேசுற்றுமெனைப்பாம்புதன்னை
நறுக்கிவனவேடனென்னைநாடுங்காலம்
உய்திடவேபொருந்தாமலெரித்தேயெந்தன்
உத்தமனைத்தேடியழுதிருக்குங்காலம்.

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் தமயந்தியானவள் நித்திரைசெய்யும்பொழுது புருஷன்பிரிந்துபோக நித்திரைதெளிந்து புருஷனைக் காணாமல் அனேகங்காடுமலை வனம் வனாந்திரங்களெல்லாம் தேடிவருகையில் மலைப்பாம்பானது வந்து தமயந்தியைச் சுற்றிக்கொண்டு அவதிப்படுத்த அப்போது சுவாமிகிருபையினாலே காட்டில் வாசஞ்செய்யப்பட்ட வேடனானவன்வந்து அந்தப்பாம்பை யிரண்டுதுண்டாக்கிவிட்டு தமயந்தி

தேவியைச் சேரவேணுமென்றுவாதாடித்தர்க்கிக்க் அப்போது அவ ளிடபதிவிரதாககினியானது அவ்வேடனைபஸ்மீகாமா யெரித்துவிட அப்போது தமயந்தியானவள் அவன்செய்த அபசாரமெல்லாமன்னித் தும் அவ்வேட னெரிந்துப்போனதைப்பற்றிபுலம்பிக்கொண்டுபோகிற விதம் எப்படியென்றால்

பொது-விருத்தம்.

வனவேடனெரிந்தபின்பு வனிதையுமனதுநொந்து
தனிவழிநடக்கும்போது ஜனார்த்தனன்கிருபையாலே
முனிவராசிரமங்கண்டு மொய்குழலங்குசேர்ந்து
கனிவொடுமுனிவன்கேட்கக் காரியமுணாக்கின்றாளே.

முனிவர்-விருத்தம்.

சேயிழைக்காசியான தேன்மொழிமாதேயம்மா
காயிலைகனியருந்திக் கானகந்தன்னில்வாழும்
ஏயமாமுனிவர்பக்க லெங்கிருந்தெங்குவந்தாய்
நீயாருன்பேர்தானென்ன நெறியுடனிகழ்த்துவாயே.

வசனம்.

அகோவாருமம்மா நீயார் எந்தவூர் எந்ததேசம்இங்கேரிஷியீஸ்பரர் கள் வாசஞ்செய்யப்பட்ட ஆசிரமத்தில் நீ ஒண்டியாயழுதுபுலம்பித்திரி ந்து நீ இவிடம்வந்தகாரியஞ் சொல்லவேணுமம்மா.

தமயந்தி முனியீஸ்பரருக்குச்சொல்-அகவல்.

திருவடிசரணம் ஜெபமுனியேந்திரா
அருளைவென்னுயவை யன்புடன்கேளீர்
தருவளர்தேவ தாருணவிக்கும்
பெருவளமிகுந்த பெருமைசேர்விதர்ப்ப
நகர்வீமராஜன் நற்றவத்துதித்த
தகமைசேர்மாது தமயந்தியென்பேர்
ஜெகமெலாம்பரவும் ஜெயவீரசூரன்
பகைவர்கண்டஞ்சும் பராக்ரமமுடையான்
கிட்டநாடுடைய விதிமிகப்படையான்
தடமிகுஞ்சக்க ராயுதப்படையான்
கொடையினிற்கன்னன் குணசம்பன்னன்
நடமிடும்பரியோ னளேந்திராஜன்
பாரியாளிராஜன் பார்முழுதாண்டு
காரினன்பகையால் காசினியிழந்து
ஆரணியத்தி லாசனேடெய்தேன்
பேரணிமன்னன் பிரிந்தனர்துயிலில்
தேடியேசிந்தை தியங்கியேவனத்தில்
வாடியான்மயங்கி வருகின்றவழியில்
ஆடியோர்நாக மதுகண்டுமெறிக்க
வேடனும்வந்து வெட்டியவ்வரவை

கூடவேயென்மேற் கொண்டனன்மையல்
நீடியேயென்பால் நெருங்கியேவேட
மூடனையெரித்து முயங்கியர்னிக்கு
வந்தனன் சாமி மலர்ப்பதங்கண்டேன்
பின் துணையில்லைப் பிர்ம்மகுலத்தாய்
சுந்திரபாதந் தொழுதிடுமகளைவசி
சந்ததங்காக்கத தான்கடன்கடனே.

முனிவர்கள்சொல்-விருத்தம்.

தாளினை தனிற்பணிந்த தையலேயாசீர்வாதம
ஏழுநாட்டான் வந்து இருந்தநட்பாதிபோச்சு
ஊழ்வினை துலேந்துதிப்போ வுங்களைச்சந்திப்பார்
வாழ்நீயங்கிருந்துசுவாகு மாநகர்க்கேகுவாயே.

(வ-ம) அகோ வாருமம்மா தமயந்தி ஆசீர்வாதம் நீ நம்மிடமாயிருக்கிறதுசரியல்ல இவடமிருந்து எங்களுடன் கஷ்டப்பட்டுக்கொண்டு நல்ல அன்னவஸ்திர முதலானதுமில்லாமல் காய கனி கிழங்குகளை புசித்திருக்கமாட்டாய் இதோ எதிரேயிருக்குது சுவாகுபட்டணம் அதில் உன் சிறியதாயாரான கோகிலாதேவி யிருக்கிறுள அவளிடம் சுகமாய்ப் போயிருக்கலாம் உங்களுக்குச் சநீபகவான் இன்னமும் மூணு வருஷத்துக்குப் பூரணவதிகாரஞ் செலுத்தப்போகிறார் பிறகுஉங்களுக்கு சௌக்கியமுண்டா யிருப்பீர்கள் போய்வாருமம்மா தாயே.

தமயந்திசொல்-விருத்தம்.

தவமுனிவிடையைப்பெறறுத் தமயந்திநைதயல்தானும்
புவிமிலாரொன்னைப்போலப் பெண்பிறந்தார்களேயோ
பவமெனசெய்திட்டேனே பத்தாவும்பிரியமுன்செய்
தவமோயிவ்விதிக்காவேதன் ஜனாந்தரனைல்விதித்தவாறே. ;

தமயந்தி-முதல்-புலம்பல்-கண்ணிகள்-இ-ம-முகாரி-ஏகதாளம்.

அரிமாதவாமுகுந்தா நந்த அச்சுதாவாசுதேவா
கருடாசல கிருபைபனைவத்திந்தக் காட்டில்வதைக்காவா
ஒருதுணையுமில்லையேயெந்த னுயிர்த்தோழனும்வல்லையே
இறுமைமிகச் சநிபகவான்செய்த தொல்லையோ
அயனைமைத்தவிதியோ வதனுலேயிந்தக்கெதியோ
நயமாச்செய்யுங் கருமகதித் தேனுவந்தச்சதியோ
பயமேமென்னைமிஞ்சுதே யிந்தப் பாழ்மனமுமஞ்சுதே
தயைபோய்நாக்கௌஞ்சவே துணைசெய்குவாய்ச்சநிகெஞ்சவே
பூமிபொருள்புருஷன் பிள்ளை யாவுமுமிழந்தேன்
சாமிகொண்ட நாதன்செய்த சதியால்மனதளர்ந்தேன்

வெய்யல்மிகவாகுதே தீயெந்தன் மேனியெல்லாநோகுதே
கைகால்விட்டுப்போகுதே மனங் கலங்கிமிகவாடுதே
நாட்டைவிட்டுநானே இந்தக் காட்டில்வந்தேன்மானே
பாட்டைதப்பிபோனேனையோ பரதேசிபோலானேன்
பஞ்சவன்னக்கிளியே என்போல் பாவியுண்டோமொழியே
என்செய்குவேன்மொழியே எங்கள் நகர்தலைக்குவழியே.

தமயந்தி-உ-வது-புலம்பல்-தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

நாராயணகோவிந்த கேசவா-அரி
நாராயணகோவிந்த கேசவா

நாராயணகோவிந்த நன்பிளேனுன்னையிந்த
ஆரணியந்தன்னிலெந்த வாபத்துந் தீர்க்குமுகுந்த (நாராய)

ஆராவமுதேகிஷ்ணுமாதவாவுமக்கபயங்கோர்குலபதியாதவா
தீராவினையகற்றுக தீர்க்குந்தயாபரனே
வேறுருந்துணையுண்டோ வேளொட்சியுமென்னை (நாராய)

நாடுநகரைவிட்டு வந்தோமேநாங்கள்
ராப்பகல்யுகமாக நொந்தோமே
காடுவீடாய்த்திரிந்து கணவன்றனைப்பிரிந்து
வாடும்பேதைமுன்வந்தேன் வருத்தந்தவிர்ப்பரிந்தே (நாராய)

வாலவயதில்மணம் புரிந்தாரோபெற்றப்
பாலரொன்னையும்விட்டுப் பிரிந்தாரோ
காலன்போற்சனிவந்த காரணந்தானோமூந்த
கோலமெல்லாம்நந்த கோபாலராருளெந்தன் (நாராய)

மரகதவடிவம்போன்ற வனிதையுமனதுநொந்து
சரிவழிநடக்கும்போது ஜனார்த்தனன்கிருபையாலே
அரிபதமனதிலெண்ணி யாரணியத்தைநாடி
வருகையில்செட்டிமார்கள் வழியினில்வந்தனரே.

பொதிமாட்டுக்காரசெட்டிகள்-வருகிற-தரு-இ-ம்-
சௌராஷ்டகம்-அடதாளம்.

செட்டிமார்கள்வந்தார்- வர்த்தகஞ்செய்யும்
செட்டிமார்கள்வந்தார்

செட்டிமார்கள்வந்தார் தெட்டிப்பணம்பறிக்குங்
கொட்டிக்கொள்வோர்களை ஒட்டிப்பொருளைவாங்கும்—செட்
நாணயமுடையோர்க்கு வேணபொருள்கொடுப்பார்
நம்பிக்கையில்லார்க்கு செம்புக்காசுங்கொடார்
ஆணிப்பொன்கோவையு மழகுகட்டளைப்பையும்
வேணபொன்னமூத்திய மெழுகுருண்டையுங்கொண்டு—செட்
நார்மடிப்பூணூலும நவரத்தினப்பணிகளுஞ்
சீருடன்பணங்காசு சிலவானமணிகளும

ஆருங்கொள்ளவேவிற்கும் ஆசைபெருகிநிற்கும்
காரியந்தனிற்கெட்டு வீரியத்துடன்கோமுட்டி (செட்)

செட்டிகள்சொல்-விருத்தம்.

அம்மாநீயெந்தவூர்தா னழுகாதேபயப்படாதே
சும்மாச்சொல்வந்தவாறு துணைசெய்வர்சுவாமிதங்கள்
எம்மோடுபிறந்ததங்கை யெனவெண்ணிக்கேட்டோம்நாங்கள்
உம்மோடுபிறந்தோமென்றேயுண்மையாருளாசெய்வீரோ.

வசனம் - அகோவாருங்களம்மாதாயே நீங்கள் எந்தவூர் எந்ததேசம் இந்தவனத்திலே ஒண்டியாக அழுதுபுலம்பிக்கொண்டு வரவேண்டியகாரணமென்ன எங்களோடுகூடப் பிறந்தோர்க்குச் சமானமாகவெண்ணிபயப்படாமற்சொல்லுமம்மாதாயே.

தமயந்திசொல்-விருத்தம்.

சொல்லுமென்றுரைத்தீரண்ணா தொல்லுலகாளும்ராஜன்
வல்லவனளேந்திரனைகொண்ட மயில்தமயந்தியென்பேர்
பொல்லாதசனியனாலே புருஷன்பிள்ளையும்பிரிந்து
எல்லாதுன்பத்திற்காளா யிருந்திங்கேயான்வந்தேனே.

வசனம் - அகோவாருங்களண்ணே செட்டிமார்களே நான்விதர்ப்பதேசமாளப்பட்ட வீமராஜன்புத்திரியாகும், என்பேர் தமயந்தியென்றுசொல்வார்கள் விஷதபுரியாளப்பட்ட நளச்சக்கிரவர்த்தி மகாராஜனுக்குநான்பாரியானேன் பு சநிபகவான் மாயையினாலே ராஜனும் நானும்வனத்துக்குவந்து ஒருவரை ஒருவர்விட்டுப்பிரிந்து தேடிவரும்போது என்னைக்கொல்லவந்தசர்ப்பத்தை ஒருவேடன்சம்மாரஞ்செய்து என்னைச் சேரவேணுமென்றுவாதாடி அக்கினியாயெரித்துப்போனேன் இப்பால் நான்வரும்போது சுவாமியினிடகிருபையினாலே தங்களைக்கண்டேனண்ணா-தங்கள் பிறவியைப்போலெண்ணி துணையாகவழைத்துக்கொண்டுபோய் சுவாகுபட்டணம் சேர்த்துவிடுங்கோளண்ணா செட்டிமார்களே.

செட்டிகள்சொல்வசனம்.

அகோவாருமம்மாதாயே ஜெகதீஸ்வரீ அந்த சநிபகவான்செய்திறமாயைகளை அரியாப்பிரம்மாதிகளாலு மறியக்கூடாது நாங்களும் சுவாகுபட்டணத்துக்கு சிலவியாபாரங் கொண்டுபோகிறோம், எங்கள்பின்னேவந்தால் அழைத்துக்கொண்டுபோய்விடுகிறோமம்மாதாயே.

பொது-தரு-ஹு-ம்-சௌராஷ்டகம்-ஏகதாளம்.

செட்டிமாருடனேகூடித் தேன்மொழிநடந்தனளே.

பட்டணம்பதிகொடுத்து பத்தாவையுநகைவிடுத்து
துட்டவேடனையெரித்து சுவாமியைநெஞ்சிற்குறித்து (செட்டி)
கொடியிடையுந்தத்தளிக்க கோதைபாதங்கொப்புளிக்க
மடமயில்தமயந்திமாதவரும்விதியையெண்ணியிப்போது (செட்டி)

யானைசிம்பசார்த்தூலங்கள் யாளிபுலிபரவங்கள்
கானகமிருகங்களோர்ந்து கண்டுபத்தினித்தமயந்தி (செட்டி)

பொது-விருத்தம்.

பத்தினிதமயந்திப்பெண் பத்தாவும்வரக்காணுமல்
சித்தமுந்தியங்கிக்காட்டில் செட்டிகள்துணையாச்செல்ல
அத்தடந்தனிலோராலவிருக்ஷமுங்குளமுங்கண்டத்
குத்தமிதாகந்தீர வுண்டுநீருறங்கினளே.

இதுவுமது.

உண்டுநீருறங்கும்போது வுன்னியேகஜராஜேந்திரன்
அன்றுளபகையையெண்ணி யானையைப்போலரூபங்
கொண்டுகெர்ச்சித்துவீமன் கோதைக்குத்துணையாய்வந்த
திண்டிறல்வணிகர்தம்மைச் சேதிக்கவந்ததன்றே.

யானைவருகிற-பொது-தரு-இ-ம-தன்யாசி-ஆதிதாளம்.

யானைவந்துதே-கஜியானைவந்துதே
தானைதனிற்கடல்தாபசங்கங்கள்
வானைத்துள்ளோருமற்றெவருநிலைகலங்க (யானை)
பதியுமாசுமிழந்துபோகப்
பாவையுமபாலரும்வேறுவேருகக்
கெதியற்றவனந்தன்னிலேகக்
கிளிமொழிதமயந்திக்குமுன்பாக (யானை)
ஆதியிற்செயதகதையைமனதிலெண்ணி
யரசதுபுட்காளனுளுந்தங்கே பண்ணி
வேதினைசெய்யகளனுமனைக் குண்ணி
விட்டபின்னுனைமிகவருத்த நண்ணி (யானை)

பொது-விருத்தம்.

ஆனைபோல்வந்தசனிபகவான்றனு
மருவைதமயந்தியைக்கண்டார்ப்பரித்துக்
காலகத்திலித்தாசெயுமவணிகர்தம்மைக்
காலிறைதேய்த்துயிரைவாங்கும்போது
மான்விழியாளுடுங்கியஞ்சிப்பயந்துசிந்தை
வாடிவொண்டியாகவனந்தனித்திலோடித்
தீனதயாபரானந்தமுகுந்தாவென்ன
செய்குவேனெனப்புலம்பிச்செப்புவாளே.

தமயந்தி செட்டிகளிறந்ததைக்கண்டு புலம்பல்
தரு-இ-ம-கமாஸ்-ஆதிதாளம்.

இந்தவிதிக்கென்னசெய்குவேன்-எழைபங்காளா
இந்தவிதிக்கென்னசெய்குவேன்.
இந்தவிதிக்கென்னசெய்வேன் எப்படிநானினியுய்வேன்
முந்தசெய்பவவிதாமோ முழுதுஞ்சோதிக்கலாமோ (இந்தவிதி)

பச்சவடம்பழிகொடுத்தே-பரலாகுதேவா
பத்தாவையுங்காட்டில்விடுத்தே
அச்சமுடனோட்டமெடுத்தேன் துணையாய்வந்த
வியாபாரியைப்பழிகொடுத்தேன்
மச்சக்கூர்மநரசிம்மா லட்சுமிதகாயேயென்னம்மா
ரக்ஷிப்பாய்சீதாபிராமா நீநினைந்தால்பெரிதாமா. (இந்தவிதி)

இந்திரனால்வந்தகுறையோ-சநிபகவான்
இடுக்கததாலெய்தசிறையோ
தந்தையென்தாய்த்தவ றிறையோ அல்லதுராஜ
சக்கிரவர்த்திசெயதகுறையோ
சந்திரகுலத்திற்பிறந்து தண்டகவனந்திரிந்து
வந்தவழியிற்பரிந்து சொந்தமாவந்தோர்றிந்து (இந்தவிதி)

முன்னறியேன் பின்னுமறியேன்-சநியால்வந்த
மோசமென்பதையுந்தெரியேன்
அன்னீதமாயொன்றுங்குறியேன்-உயிர்வைத்திருந்து
அவனியிலினிமேற்றரியேன்
பன்னகசயனுபார்ப்பீர் பாவியென்றுயரந்தீர்ப்பீர்
தன்னையடுத்தோரையேர்ப்பீர் தனவணிகருய்யப்பார்ப்பீர் (இந்தவிதி)

தமயந்திசொல்-பத்தியம்.

வையவேகுநாடி தோர்த்ததற்கழுவனோ-பதியாசருக்கழுவனோ
பாலனைவிடுத்தே யிருப்பதற்கழுவனோ-பறித்ததுயிலுக்கழுவனோ
தையலெனைவிட்டேகும் நாயகற்கழுவனோ சர்ப்பந்தனக்கழுவனோ
தப்பிதனினைந்திடும் வேடனுக்கழுவனோ-தனவணிகருக்கழுவனோ
வையகந்தனில்வந்த விதிதனக்கழுவனோ-வளர்தந்தைதாய்க்கழுவனோ
வஞ்சகஞ்செய்தசநி வாதனைக்கழுவனோ வனம்வந்ததற்கழுவனோ
ஐயோநான்பெண்ணாய் பிறந்ததற்கழுவனோ யாரார்குறைக்கழுவனோ
ஆதிசெல்வத்துட னரசாட்சியருள்செய்வாய் அபயவரதக்கடவுளே.

பொது-விருத்தம்,

திருநிகர்தமயந்திபெண் செட்டிமாரிறந்தபின்பு
அரிபதமன திலெண்ணி யடிதசமூதலறும்போது
மருமலர்த்துளவமார்பன் வணிகனாயெழுப்டவபபோ
துரிதமாய்வணிகர்பின்னால் சுவாகுபட்டணம்வந்தாளே.

(வ-ம்.) இந்தப்பிரகாரம் தமயந்தியானவள் ரிஷியீசுரர்ள் ஆசிரமத்தை விட்டுப் பொதிமாட்டுக்கார செட்டிகளைத்துணையாக அழைத்துக்கொண்டுவரும்போது இவடத்தில் நல்ல ஜலமும் குளிர்ந்தகாற்றுமான திலே தமயந்தியானவள் தாகந்தீர்ந்து நித்திரைசெய்ய அப்போது சநிபகவான் ஆனைரூபமெடுத்துவந்து நித்திரைசெய்கிற செட்டியார்களைக்கொன்றுபோட அப்போது தமயந்தி துணையாகவந்த செட்டிகளிறந்துபோனதைக் குறித்து மிகவுங்கலங்கி ஸ்ரீமகாவிஷ்ணுவைஸ்தோத்திரஞ்செய்ய

அப்போது ஆகாயத்தில் அசரீரிவாக்கொன்றுபிறக்க அதனால் இறந்து போனசெட்டிகள் உயிருண்டாகத்தமயந்தியை யழைத்துக்கொண்டு சுவாகுபட்டணம்போகிறவிதம் எப்படியென்றால்.

(தரு) அன்னம்போல்நடந்து தன்னாடி
அகங்குழைந்து முகம்வாடி
பொன்னுடலில் வேர்வையோடி
புந்தியிற்பசியும் நீடி (செட்டி)

செட்டிகள்சொல்-வசனம்.

அகோவாருமம்மாதாயே ராஜபரமேஸ்வரி உங்களை இதுவரையிலு ங்காப்பாத்தியழைத்துக்கொண்டு சுவாகுபட்டணம்வந்து சேர்ந்தோம நீங்கள் சஞ்சலப்படாமல் எவ்விடமும்போகாமல் சுகமாய் இந்தப் பட்டணத்தில்தானே வாசஞ்செய்யுமம்மா நாங்கள்கொண்டுவந்த சரக் குகளைஎங்கேயாவது கொண்டுபோய் விற்கப்போகிறோம் நீங்கள்போ ய் வாருங்களம்மாதாயே.

பொது-விருத்தம்.

சந்திரவிம்பமொத்த தமயந்திமாதுதானும்
வந்தனள்சுவாகுராஜன் மாநகர்வீதிதன்னில்
அந்தமாநகரிலுள்ளோ ரநேகரவளைக்கண்டு
சிந்தையுமறந்துநின்று திகைத்துமேசெப்புவாரே.

தமயந்தியைப்பார்த்து-ஊர்ஜனங்கள்-விசனப்படுதல்-கண்ணிகள்.

இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

ஆரடியம்மா யிவள் ஆரடியம்மாபோகிற
தாரடியம்மா சுருக்காய் பாரடியம்மா
தாரணியி னிங்கலிந்த வாரணங்கைப்போலவாரும்
தாங்கண்ட துண்டோவம்மா-தங்கையரே.
நாரணன்மனைவியோதான் வாரணனிந்திராணியோதான்
நான்முகனுயகியோதா னவிலுமம்மா இவளை
சங்கரனபடைத்தசிவ சத்தியோதிதயகல்யாணி
தமயந்தித்தேவி தானோ தங்கையரோ
அங்கசவேள்ரதியோ வரமனையநூர்வசியோ
ஆகாசவாணிதானோ ஆச்சியரோசொல்லும்
மண்டலத்திலிந்தப் பூவையிருக்கப்பிரமன்
பெண்களையேன்படைத்தான் புகலுமம்மா
ஆயிவளுநவப்போல நாமெங்குங்கண்டதில்லை
அரசன்தேவிக்குரைப்போம் ஆச்சியரோசொல்லும்.

பொது-விருத்தம்.

இந்திரவுலகமாத ரிறங்கியேபோற்றிநிற்க
வந்தனஞ்செய்துரம்பை மாதர்களாசிகூறத்

சுந்திரவஸ்திரபூஷணாதிகளணிந்துக்கொண்டு
சந்திரமுகத்தாள்கோகிலாதேவிசபையில்வந்தாளே.

கோகிலாதேவிவருகிற-தரு-இ-ப-பைரவி-ஆதிதாளம்.

கோகநகத்தைநிகர்கோதையெனும்மா[illegible]கோகிலாதேவிவந்தாள்
மாகநகப்பணிகள்-வயிரமுத்துமணிகள்
தேகந்தனிலேபூண்டு சேடியர்கைலாகுகொண்டு (கோகநக)
தாமரைமலர்பதத்தை தண்டைசிலம்புகொஞ்சச்
சரிகையிடப்பரணந்தகதகவெனமிஞ்ச
மாமதிரதியிவள் வடிவுசாயலுக்கஞ்ச
வாலைநாயகிபோலே வந்தாள்சபைகள்கெஞ்ச (கோகநக)
பாம்பின்மதிப்பிறை பளபளெனமதித்துப்
பச்சைத்தங்கமிழைத்துச் சுட்டிருக்கடிமுத்து
மான்விழிநாசிகாபரணமூக்குத்தியிந்து
வரிவிழிநுதலில் மைதிலதமுந்தரித்து (கோகநக)
வன்னச்சரிகைதுயில் மருங்கில்வருந்துகட்டி
மாற்றுயரபாருசி வயிரமிழைத்தமெட்டு
மின்னுமேகலைபணி விளங்கவொட்டியாணமிட்டு
பின்னற்சடைபணிகள் பிளக்கதொங்கவேவிட்டு (கோகநக)

தாதிகள்சொல்-வசனம்.

அகோசரணம்சரணமம்மாதாயே ராஜபரமேஸ்வரி நம்மிட ஆசாரமூகவழியாய் ஆரோஒருஸ்திரீசாதிபோகிறாள் அவளைப்பார்த்தால் லட்சுமியோசரஸ்வதியோ இந்திராணியோ அல்லதாதிதேவியோ இவர்களையெல்லாம் ஒருபங்குசொல்லலாமா இந்தஸ்திரீயை நாங்களிதுவரைக்கும் பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை கண்டதுமில்லை நாங்களென்னசொல்லப்போகிறோமம்மாதாயே.

கோகிலாதேவி-விருத்தம்.

தாதியேசகியேபந்தத் தையலேநீங்கள்சென்று
போதவேயழைத்துவந்து புகலுவீர்பூதலத்தில்
ஏதொருவருங்காணாத வெழில்மிகுவடிவமுள்ள
மாதினைநமதுபக்கல் வருகவேயழைப்பிப்பாயே.

(வ-ம்) ஆகோவாரும்பெண்ணே சகிமார்களே அந்தப்பெண்ணைப் போலே நாங்கள்கண்டதுமில்லை கேட்டதுமில்லையென்று சொல்லவந்தீர்களே அந்தஸ்திரீயை நம்மிட சபைக்கழைத்துக்கொண்டுவாரும் பெண்ணேசகிமார்களே.

சகி-விருத்தம்.

தாயேஓஅம்மாநில்லு தாரணியாளுமெங்கள்
ஆயிராஜாத்திபுகல ளரியவாய்மொழியைக்கேட்கப்
போயழைத்திடவுகதாம் புரிந்தனளாகையாலே
நேயமாய்வந்துகண்டு நிமிஷத்திற்சொல்லுவாயே.

(வ-ம்.) அகோவாருமம்மாதாயே எங்கள்ராஜாத்தியானவள் உங்களை யழைத்துக்கொண்டுவரும்படி உத்தரவாகியிருக்குது நீங்கள் வந்துகண்டுவார்த்தைபேசிப்போங்களம்மாதாயே.

தமயந்தி-விருத்தம்.

நானிலம்புகழுந்தாயே நமஸ்காரமம்மாவென்னை
யனைழைத்தீர்கள்நானோ இரப்பவர்தனிலுமேழை
கானகந்தோறுஞ்சுற்றிக் கடிநகர்தன்னில்வந்தேன்
நானழைத்திட்டசெய்தி தயையுடன்சாற்றுவீரே.

(வ-ம்) அகோசரணஞ்சரணமம்மாதாயே ராஜபரமேஸ்பரி இந்தப்பட்டணத்தில் பிழைக்கவந்தவென்னை அழைத்தகாரணம் திருவுளம்பற்றவேணுமம்மாதாயே.

கோகிலாதேவிக்கும்-தமயந்திக்கும்-தர்க்கம்-தரு

இ-ம-மத்தியமாவதி-திரிபுடை-தாளம்.

ஆர்நீஎன்னம்மா-சொல்லொணுக்கு-மஞ்சாதேசும்மா
பாரிலுனைப்படைத்த பாவிபிரமதேவன்
ஓரவஞ்சனைக்காரனோகெடுவானையோ (ஆர்நீ)
சரணமென்தாயே-சொல்வேன்கேளும்-சமுகத்தில்நீயே
அருணகிரணவொளி யதைதிகருளவிழி
கிரணமென்மேல்வைப்பீர் செப்புகிறேன்காப்பீர் (சா)
எங்கேநீவந்தாய்-உன்பேரென்ன-என்மனம்நொந்தாய
உங்களூருமெது வுண்மையாகவோது
மங்கையரோருது வையாமலிப்போது (ஆர்நீ)
வான்பதிநாடு-விதிவசம்-வந்தனன்காடு
நானுபட்டபாடு நாய்தனிலுங்கேடு
கானகந்தான்வீடு காவதிலுஞ்சேடு. (ஆர்நீ)
அன்னமேதேனே-எழில்மிகு-மயூரூபமானே
உன்னிடபேரென்ன வுரைத்திடுவாய்கன்ன
லென்னுமொழிக்குயிலே யெந்தன்பெண்மயிலே (ஆர்நீ)
சுந்தரவதியே-என்பேர்சய-ந்திரிமதியே
எந்தன்கணவனேசன் கெந்தருவராஜன்
சொந்தமாயெனைவிட்டார்சோகமுனைத்தொட்டார். (சா)
சயனந்திரிமாதே-நீயெங்கினும-தனியேபோகாதே
நயனம்போலும்நானே ரக்ஷிப்பேனுனைத்தானே
பயமில்லாமலிரும் பாங்கியென்றெல்லோரும் (ஆர்நீ)

கோகிலாதேவி-வசனம்.

அகோவாரும்பெண்ணே சயனந்திரிநீயிட ஆரண்மனையிலேயிருந்துகொண்டு பிள்ளைகளுக்குத் தலைசிவி எண்ணெயிட்டுஸ்நானஞ்செயவித்து புனுகுபன்னீர் பரிமளாதிகளை யணியச்செய்துகொண்டு சுகசௌக்கியமாக இருமம்மா தாயே.

பொது-விருத்தம்.

கோகிலாதேவியம்மன் குணமுடனுரைக்கக்கேட்டு
சாங்கமாய்த்தாதியேவல் சயனந்திரிசெய்துகொண்டு
பூங்குழைகட்டும்போதும் பொட்டிணைகூட்டும்போதும்
ஏந்திழையழகுமதனை யெண்ணிநொந்துருகுவாளே.

தமயந்திபுலம்பல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

வேணபணிவிடைகள் வெள்ளாட்டிமார்கள்செய்ய
வீற்றிருந்தேனே ஐயோ — தெய்வமே
சாணைத்தொடவுமெச்சில் தானெடுக்கவும்விதி
தான்வந்துநேர்ந்ததையோ — தெய்வமே
மாந்தளிரையனைய காந்தட் கரம்வலிக்க
பூந்தழைப்பூவுகட்ட — தெய்வமே
நேர்ந்துதொடுத்திடவும் பாந்திவேலைசெய்யவும்
நிலத்திற்பெண்பிறந்தேனே — தெய்வமே
மன்னராஜர்குல மாதர்கஞ்சனந்தீட்ட
வைத்தாயோஎனைப்பாவி — தெய்வமே
இந்திரசேனனையும் எந்தனையுமறந்து
எங்கேயிருக்கிறாரோ — தெய்வமே
வந்தென்துயர்தீர்ந்து சொந்தமுடன்கைகோர்த்து
வாழ்வதெக்காலமையோ — தெய்வமே

பொதுவிருத்தம்.

தாதிபோலேவல்செய்துத் தமயந்திமாதுதானும்
மாதரிலாசியான மங்கையும்புலம்பிவாடி
வேதனைமிகுந்துவுள்ள மெலிந்துதன் னுயிர்ப்பிராண
நாதன்செய்சதியையெண்ணி நாளும்வீற்றிருந்தாளன்றே.

(வ-ம) இந்தப்பிரகாரம் தமயந்தியானவள் சுவாகுபட்டணம்வந்து தன் சிறியதாயாரான கோகிலாதேவியினிடமாகத் தான் சயனந்திரியென்னும் பேரிட்டுக்கொண்டு தாதிகள்செய்கிறவேலைகளைச்செய்துக்கொண்டு மகாவிதனத்தோடிருக்கிறதினாலே விதர்ப்பதேசமாளப்பட்ட வீமராஜன் தன் மருமகனான நளச்சக்கிரவர்த்தி மகாராஜாவும் தமயந்தியும் சனிபகவான் மாயையினாலே இராச்சியம்விட்டு வனவாசம்போனவர்கள் வரக்காணோமென்று விசாரிக்கிறதின்நிமித்தமாகச் சபைக்கு வருகிறவிதம் எப்படியென்றால்.

பொது-விருத்தம்.

வயிரநவமணிமகுடமுடியிலங்க
வயங்கவிநகுணமுமில்லாதக்குண்டலங்கள்
வெயிலவன்போலொளிவீச மார்பிற்கண்டி
மின்னலைவன்னிராபரணங்கள்மெய்யிற்றுண்டு

நயமிகுரம்பையர்நடனமாடவாணர்போற்ற
நற்கவரிசாமரைகள்சுருட்டிவீச
ஜெயஜெயவென்றேகட்டியங்கள்கூறத்
திகழ்சபையில் வீமராஜேந்திரன்வந்தான்

வீமராஜன்-தன்கொலுவுக்குவருதல்-தரு-இ-ம-சுருட்டி-ஏகதாளம்.

வீரலட்சுமிவாசன்-வீமராஜன்வந்தானே.
சூரியகுல துங்கனகளங்கன்
அரந்தரராஜ புரந்தரனென்ன (வீரலட்)
மாணிக்கநவமணிகள் பதித்தமகுடமின்னவே-சிரசில்
வயிரப்பச்சைநீல மிழைத்தவளைகள் துன்னவே-கழுத்தில்
ஆணிப்பொன்சரப் பணிகளிலங்க
அபரஞ்சிச்சந்திரவாரக்குலுங்க
வானவர்மந்திரி மார்கள்வணங்க
மாநிலமன்னர் திறையளந்திலங்க (வீரலட்)
அதிரதர்மகரதர் சமரதரத்தரதர்சூழ
அங்கனர்வங்கனர் கொங்கனர் டங்கனரடியிலிறைஞ்சூழ
குகுதர்குச்சார் குடகர்போற்றக்
கொங்கியர்வங்கியர் கைகுவித்தேற்றப்
பதியினில்விதர்ப் பாபுரிவீமன்
பண்புநயாள குணவிகவாசன் (வீரலட்)
வித்தைவிநோதங்கள் தத்திமத்தாளங்கள்
மேளம்முழங்கிவர
தத்திமித்தித்திமித் தத்தையர்கற்றிச்
சலாம்வரிசைகள் தர
உத்தமவேசியரசிகூற வுறவினர்சந்தோஷமீற
சித்தசனெனிசமொழிலுற்ற தர்மசெகபதியதிபதிஞெய்யாரதீர(வீர)

வீமராஜன்சொல்-விருத்தம்.

சந்ததநமதுவாசல் சார்ந்தகட்டியனேகேளாய்
வந்தவாறறிந்துசொல்லும் மாருதந்தனைக்கொப்பான
தந்திரத்திளிலுபவெற்றி தனின்மிகுஞ்சாரணனே
இந்தகாழிகைக்குள்ளென்ற னிடம்வரவழைத்திடாயே.

வ-ம. அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நம்மிட சாரணசிரோமணி தன்னை அதிசீக்கிரத்தி லழைத்துவாரும்பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியக்காரன் சொல்-வசனம்.

அப்படியேமகாபாக்யமையா ராஜகெம்பீர பராக் பராக்.

பொது விருத்தம்.

தலமதில்விதர்ப்பதேசந் தனையரசாளும்வீமன்
நலமொழிகேட்டுசதுரர் நளன் தமயந்தி...

உலகெலாந்தேடிப்பார்க்க வுறுதியாய்வேகமாகப்
புலம்விசாரிக்கவேதான் புரோகிதர்வருகின்றாரே.

சாரணர்வருதல்-தரு-இ-ம்-தன்யாசி-ஆதிதாளம்.

சாரணர்வந்தார்-கூடியிதோ-சாரணர்வந்தார்
சாரணர்வந்தார் தாரணியெங்குஞ்சுற்றித்
தீரனீன்றமயந்தி தனைமக்காண. (சாரணர்)
பாதரக்ஷைபுனைந்து யிடையில் பட்டுவஸ்திரமணிந்து
பேருவாங்கதணிந்து கையிற் பிரப்புக்கழியும்புனைந்து
சாதகமாய்சண்டமாருதபபோலே தாவிததாவிதினையுலாவிமே
காதவழிகணத்திற்செல்லுருக்காலே ன்மேலே
கர்த்தன்வீமராஜன் சபைமேலே
சரிகைச்சோமன்கட்டி மார்பில் தங்கப்பூணூல்மாட்டி
அரிபதந்தனைநாட்டி உள்ளம் அதிபராக்ரமமேட்டி
திரிலோகமுமொரு நொடியினிற்செல்லுவோம்
தெரியாதிருப்பவர் புலங்கண்டுசெல்லுவோம்
பரிவாயிருவருங் கலந்துறவாடிப்
பலருமறியதன் யாசியைப்பாடி. (சாரணர்)
நாட்டினிற்சென்றாலும் எந்த நகரினிற்சென்றாலுங்
காட்டினிற்போனாலும் என்னகாரணமானாலும்
தாட்டீகமாகஒரு வோட்டமதாகப்
பேட்டிக்காணவீமராஜன்முன்பாக. (சாரணர்)

சாரணர்-வசனம்.

அகோசிரஞ்சீவி ஆசீர்பாதமங்களம் சுகிபவஸ்து தீர்க்காயஸ்து வீமராஜனே எங்களை வரவழைத்தகாரியம் சொல்லவேணுமையா வீமமகாராஜனே.

வீமராஜன்-விருத்தம்.

புகலறிந்துரைக்குங்கீர்த்தி புகழ்பெற்றசாரணரே
நகரசிறந்தபேதை நம்மிடமாவிக்காரேனும்
செகமெலாந்தேடியெந்தத் திசையினிற்காணுமெங்கள்
புதல்வியுமிருக்கின்றாரோ போய்ப்பார்த்துவருகுவீரே.

(வ-ம்) அகோகாருண்மையா சாரணபுரோகிதாளே என் மகளாகியதமயந்திதேவியும் என்மருமகனாகிய நளச்சக்ரவர்த்திமகாராஜனும் சனிபகவான் மாயையினால் ராச்சியமவிட்டு வனவாசம்போனவர்கள் இதுவரையிலும் வரக்காணோம் அவர்களெந்தவிடத்தி லிருக்கிறார்களோ தெரியவில்லையே நீங்கள்தேடிப்பார்த்துவந்து சொல்லுங்களையா சாரணர்களே.

சாரணர்-தமயந்தி-நளனைத்தேடுதல்-தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

தேடிப்பார்த்துவருவோம் நாமுந்தேடிப்பார்த்துவருவோம்
கூடித்தேடியிந்தக் குவலயந்தனிலுள்ள
நாடெங்கும்புகழ்நள ராஜன்தமயந்தியைத் (தேடி)

குப்பையரேவாரும் கொங்கணதேசஞ்சுற்றிப்பாரும்
தப்பாமல்நளனுந்தமயந்தி தன்னையுங்கண்டேதான் வாரும்
இப்புவிதனிலெங்கு மிருக்கிறயிடங்கடேடும்
எப்படியாகிலு மிருவருமவெளிப்படும் (தேடி)
அங்கதேசமாதி பலவனந்தன்னிலெங்குந்தேடி
தங்கக்கடயம்பெறலாந் தமயந்திதன்னைக்கண்டேதான்போகலாம்
அங்கிருந்தாலழைத்து யாமுபனைச்சரித்துச்
சங்கையில்லாமல்வீமன் சமூகஞ்சொல்வீரில்லாமுன் (தேடி.)

வீமராசன்சொல்-விருத்தம்.

தாரணிதனை யிழந்த தமயந்திநளேந்திரன்றன்னைத்.
தூரதேசங்கள்சுற்றிச் சுவ குமாரசனைக்கண்டு
பார்புகழ்வீமராசன் பத்திவிசமூகந்தன்னில்
ஆரியன்றனம்வாங்கி யரண்மனைக்குள்வந்தாரே.

(வசனம்) இந்தப்பிரகாரம் வீமராசனானவர் தன்மகளையும் மருமகனையும் ராச்சியமுதலானது மிழந்து வனவாசம் போனவர்களைக் காணுமென்கிற விசனமடைந்து சகலவேதவேதியனாயழைப்பித்து சாஸ்திரங்களைப்பார்த்து புரோகிதர்களுக்கு வேண்டிய வெகுமதிசெய்து இந்த ஐம்பத்தாறுதேசங்களும் பலவனம் வனாந்திரங்களெல்லாந் தேடிப்பார்த்து வாருங்களென்று சாரனுளாகியபுரோகிதர்களையனுப்ப அவர்களெங்குந்தேடிக்காணாமல் சுவாகுபட்டணம் வரும்போது அதற்கதிபதியாகிய சுவாகுராசன் அரண்மனையில் பிராமணருக்கு பூரிகொடுக்க அப்போது விதர்ப்பதேசத்திலிருந்துவந்த சாரணபுரோகிதாளும் இதுதெரிந்து அரண்மனைக்குள்ளேவர அப்போது கோகிலாதேவியானவள் சயனந்திரியென்கிற தாதியைப்பார்த்துச் சொல்லுகிறவிதம் எப்படியென்றால்.

கோகிலாதேவிசொல்-விருத்தம்.

தாதியேயெனதுபாங்கி சயனந்திரிமாதேயிந்த
வேதியர்தமக்கிப்போது விருப்பொடுசுயம்பாகங்கள்
போதவும்படைத்துநீதான் பொட்டெனவனுப்பவேண்டி
ஆதலாலுனையழைத்தே னப்படிசெய்குவாயே.

(வ-ம்) அகோ வாரும்பெண்ணே சயனந்திரிமாதே நம்மிட அரண்மனைவாசலிலே வந்திருக்கிற பிராமணருக்கெல்லாம் தக்ஷிணைதாம்பூலங் கொடுத்து பஞ்சகச்சாயத்துடனே அன்னமும்படைக்க உத்திரவுகொடுத்து இன்னம் அவர்களுக்குவேண்டிய சாமக்கிரியையெல்லாம் கொடுத்தனுப்பும் பெண்ணே சயனந்திரிமாதே.

சயனந்திரிசொல்-வசனம்;

அகோவாருங்களையா சுவாமி புரோகிதருங்களே இதோ வுங்க

ளுக்குத் தேவையானதுகளெல்லாந் தருகிறோம் வாங்கிக்கொள்ளுங்க ளையா சுவாமி.

சயனத்திரியாகிய-தமயந்திக்குப் புரோகிதர்சொல்-விருத்தம்.

செந்திருவனையமாதே செயவீமராசனீன்ற
சுந்தரத்தமயந்திப்பெண் தோகையேயம்மாநீங்கள்
உந்தனுயகினுமெங்கே வொண்டியாயிக்குவந்து
இந்தவாறுனதென்ன வெந்தனுக்குரைசெய்வாயே.

(வ-ம்) அகோவாருமம்மாதாயே ராசபரமேஸ்வரீ நீ விதர்ப்பபுரி வீமராசன்வயிற்றிற்பிறந்து நளச்சக்கிரவர்த்திக்குப் பாரியாயிருந்து இப்படிக்குத்தாதியேவல்செய்ய உன் தலையில் பிரமதேவனெழுதினானோ என்னகாரணம் உன்னதிஷ்டமிப்படியாச்சுதே உனதுபிராணநாயகனெங்கேபோனார் எங்களுக்குச்சொல்லவேணுமம்மா தாயே.

தமயந்திசொல்-பத்தியம்.

எந்தனைத்தெரிந்துகேட்கு மெழில்மறையோரேகேளீர்
நிந்தைதரச்செய்ததீதோ தலைவிதிதானோபிற்மன்
அந்தநாளெழுதும்வாறு மனுக்குறையாதுகண்டீர்
இந்தநாளிதற்காய்த்தேக மெடுத்ததற்கென்செய்வேனே.

தமயந்தி-புலம்பல்-தரு-இ-ம்-கும்பகாம்போதி-ஏகதாளம்.

தெய்வமறையோரேயென்ன செய்குவன்திருவுளமே
ஜென்மமெடுத்தென்னபலனே-பெண்ணென்றுமண்ணில்
ஜென்மமெடுத்தென்னபலனே
மண்ணரசிற்பிறந்திருந்தும் வாழ்ந்துசுகித்திருந்தும்
வனவாசஞ்செய்யலாச்சுதே-மன்னனைவிட்டு
வனவாசஞ்செய்யலாச்சுதே
மன்னனைப்பிரிந்தடவி வருவழியில்கண்டபாம்பை
வனவேடன்கொன்றெரிந்தானே-என்னையல்கொண்டு
வனவேடன்கொன்றெரிந்தானே
வேடனெரிந்தபின்னால் விதியைநினைந்துகொண்டு
மெய்மறந்திருந்தேனே-விதியையெண்ணி
மெய்மறந்திருந்தேனே
வந்துவேடிமாருமானும் மாதாகோசலாதேவி
மகாராசிதன்சமுகமே-வுயிர்வளர்க்க
மகாராசிதன்சமுகமே
வுயிர்வளர்த்திடவேண்டி மாலைகட்டித்தான்கொடுத்து
மயிர்வாரிச்சடைபின்னவும்-மையபொட்டுமிட்டு
மயிர்வாரிச்சடைபின்னவும்
சடைபின்னித்தேலைகட்டித் தாதிபோலேவல்செய்து

சயனேந்திரியென் றும்பேரிட்டுச்-சதியனுலே
சயனேந்திரியென் றும்பேரிட்டு
பேரிட்டேன் தாயிடத்திற் பிறந்தியார்போலேநானும்
பிழைத்திருக்கிறேனையனே-காலங்கழித்துப்
பிழைத்திருக்கிறேனையனே

சாரணன்சொல்-விருத்தம்

சந்திரவதனத் தாயே தமயந்திபம்மா வுந்தன்
தந்தைதனிடம்போய்ச்சொல்லி நையலார் துணையைக்கூட்டி
இந்தி(ரசை)வைபோகமாக விப்போதேவிதர்ப்பதேசம்
வந்துசேரச்செய்வேன் மனமகிழ்ந்திருந்திடாயே.

(வ-ம்) அகோ சிரஞ்சீவி ஆசீர்வாதமம்மா தாயே ராஜபாமேஸ்பரி உங்களிட கஷ்டகாலங்களெல்லாம் தீர்ந்துபோகுது இனிமேல் சஞ்சலப்படாமலிரும் இக்ஷணமே வீமராசனிடத்திற் போய்த் தெரிவித்து உங்களை அவடம அழைப்பிக்கும்படி செய்கிறேம் நீ இனிமேல் விசனப்படாமல் சுகமாயிருமம்மா தாயே ராஜபாமேஸ்பரி.

சாரணன்-வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

மாமுடிமன்னர்சூழ்ந்து வணங்குமார்த்தாண்டாகேளீர்
பூமியிலநேகதேசம போய்பார்த்தோமகளைக்காணும்
க்ஷேமமாயுனதுபுத்ரி செதிபதாய்வீட்டிற்கண்டு
யாமிங்குவந்துரைத்தோ மையனேயறிகுவீரே.

(வ-ம்) அகோ சிரஞ்சீவி ஆசீர்பாதமையா வீமராஜனே இந்த அவனிகளை ஐம்பத்தாறுதேசம காடுமலை வனம் வறந்திரங்களெல்லாந்தேடிக்காணமல் சுவாகுபட்டணம கோகிலாதேவி யம்மனிடமாக தமயந்தியம்மாள் தாதிவேலைசெய்துக்கொண்டிருக்கக்கண்டு வந்தோம ஐயாராஜனே.

வீமராசன்-புலம்பல்-தரு-இ-ம-புன்னாகவராளி-ஆதிதாளம்.

என்னசெய்குவேனையோ-இந்தவிதிக்கு
என்னசெய்குவேனையோ
என்னசெய்குவேனெந்தன் கன்னிகைதமயந்தி
மன்னவனைனென்ன மாகவிருக்கிறாரோ (என்ன)
நினைத்தால் துயர்பெருகுதே-மனம்பதறி
நினைபுறந்து போகுதே
சனிக்ரகத்தால்வந்த சர்ப்பனைதானுழந்த
வனத்திற்குப்போனரோ மைந்தனைப்பிரிந்தாரோ (என்ன)
தேசப்புகழ்க்கும் பிரண்-செகமுழுதும்
செங்கோல்செலுத்தும் திரன்
ராசன்செயலோமறு வேஷமாகியோரங்கம்
நீசமடைந்தின்னொரு ராஜாக்கேவல்செய்வாரோ (என்ன)
தஞ்சமென்றேனை தேனே-மகாகொடிய
பஞ்சமாபாதகஞ்செய் தேனே

மஞ்சன் மனைவியையும் வனத்தில்விட்டவர்போக
வஞ்சகமெண்ணிநாம்தேடி மயங்கிடவைத்தாரோயோடி. (என்ன)

வீமராசன்சொல்-விருத்தம்

சொன்னசொற்படிக்குந்தோகையேபாங்கிமாரே
என்மகள்சுவாகுபட்டண மிருப்பதாலவிடமேகி
இன்னவாறெனவேகோகி லாதேவிக்கெல்லாஞ்சொல்லிப்
பொன்சிவிகைமேலேவைத்துப் புத்ரியையழைத்துவாரீர்.

(வ-ம்) ஆகோவாருப்பெண்ணே சகிமார்களே நீங்களசுவாகுபட்டணம்போய்என்கொழுந்தியாளான கோகிலாதேவியினிடத்தில தமயந்தியம்மாள் வந்திருக்கிறதைத் தெரிவித்து சகலசம்பிரமத்துடனே அழைத்துவாரும்பெண்ணே சகிமார்களே,

தமயந்தியினிடம்-சகிமார்கள்வருகிற-தரு.

இராகம்-பிலாரி-ஏகதாளம்.

தமயந்திதேவியிடம் சகிமார்கள்வந்தனரே
அழகம்போலேநடந்துஆரணியங்கடந்து (தமயந்தி)
விதர்ப்பபுரியைவிட்டுவெய்யிலிலேவதிபட்டு
பதைப்பாசுவாகுபட்டணம் பாதைகூடியக்ஷணம் (தமயந்தி)
கோகிலாதேவியிடம் கும்பிட்டுநேராக
பாங்காவீமாராஜேந்திரன் பாங்கியர்சவிதியாகத் (தமயந்தி)

சகிகள்-விருத்தம்.

இந்திரனுக்கிடாய்வாழு மிராஜபத்தினியேகேளீர்
சந்திரகுலத்தில்வந்த தமயந்திதேவியுந்தன்
சொந்தமாமகளதானம்மா சொலமெழுதியறிந்துபார்த்து
தந்தையாம்வீமராஜன் றான்கூட்டிவரச்சொன்னாரே

(வ-ம்) ஆகோ சரணஞ்சரணமம்மா தாயே ராஜபரமேஸ்வரி எங்கள்வீமராஜாவானவர் தங்களிடமாக தமயந்திதேவிவந்து ஏவல்செய்துக்கொண்டிருக்கிறதுதெரிந்து உங்களுக்குத் தெரியப்படுத்தி அழைத்துவரச்சொன்னாரம்மாதாயே.

கோகிலாதேவி-விருத்தம்.

தாதியர்சொல்லக்கோகி லாதேவிமெய்ம்மறந்து
கால்தலைமுகத்தைநன்றாய்க் கவனித்துப்பார்க்கும்போது
தாதியரேவல்செய்யத் தாயேவுன்றலையில்வேதன்
ஏதுக்கென்றெழுதினானென் றவள்புலம்புவாளே.

கோகிலாதேவி-புலம்பல்-கண்ணிகள்.

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

என்னசெய்வேனேதுசெய்வே னிவ்விதிக்கென்னசெய்வேன்
இந்தவிதிவந்ததோ மகளே
கன்னியர்க்கரசியான மன்னவன்வீமராஜேந்திரன்
கருதியதவத்தால்வந்த கண்ணின்மணியே

இந்திரதேவர்களெல்லாம் வந்தனஞ்செய்தேவணங்கும்
ஏகச்சக்கரேஸ்பரியாம் எந்தன்மகளே
சந்திரகுலநளேந்திரன் தனக்குன்னைப்பாரியாகத்
தந்தகாரணமிதுவோசாந்தன்மகளே
பட்டணஞ்சேனைபாக்கியமும் பலசுபண்டாரமுடன்
பாலனும்பத்தாவுமெங்கே பாவிமகளே
விட்டுநீவெண்டியாயிந்த வேஷமென்னிடம்வந்த
விதமென்றுமறியேனே பிர்மதேவனே
ஆயிரந்தாதிமாருன்னை யமுசத்தூளிமெத்தைமே
லமத்தியுபசரிப்பார் ஐயோமகளே
பூவிதழுங்காலிற்பட்டால் பொறுக்காமற்கொப்பளிக்கும்
பொன்னடிகள்கொப்பளிக்கப் புறப்பட்டாயே
பொற்சரிகைச்சேலையுடன் பொன்பட்டுடைப்பணிகள்
புனைந்துவாழ்ந்திருந்தாயே பூங்கொடியே
துர்ப்பலமாய்க்கேவலமாய்த் துயிலுமில்லாமலிங்கே
தோணினையென்றுவந்தாயே தோகைமயிலே
பாவியென்கண்ணிலேபார்த்தும் பாக்கியேவல்கொண்டேனே
பற்றுதேவயிறதுநான் பெற்றமகளே. (யோ)

கோங்கிலாதேவி-விருத்தம்.

அன்னையேதேனேயெங்க ளருந்தவக்கொழுந்தேயம்மா
என்னகாரணத்தினாலே யிவ்வேஷமாகிவந்தாய்
உன்மனந்தன்னிற்சங்கை யொன்றுமெண்ணுபவிப்போ
என்மனந்தேறுதற்கே யியம்புவாயியம்புவாயே.

(வ-ம்) அகோவாருமம்மா என்னிருகண்மணியானமகளே சர்வலோகேஸ்பரியாகவாழ்ந்து மகாபாவியாகிய என்னிடத்தில் தாதியென்றுபேரிட்டுக்கொண்டு இந்த வேஷமாகவந்தாயே என்னருமைமகளே நீயாதொன்றுக்கும் சஞ்சலப்படாமல் நடந்தகாரணத்தை சவிஸ்தாரமாகச் சொல்லடியம்மாதாயே.

தமயந்திசொல்-விருத்தம்.

தாரணியாண்டுவாழ்ந்து சநியன்செய்சதியாற்றாழ்ந்து
ஆரணியத்தில்வந்து அரசனுமெனைத்தூக்கத்தில்
பூரணமாகவிட்டுப் போயினாரதனாலிந்தக்
காரணந்தனக்காளாகிக் கனவிதான்வந்தேனம்மா.

(வ-ம்) அகோ சரணஞ் சரணமம்மாதாயே என்னை இந்தவேஷமானவிதம் என்னகாரணமென்று கேட்கவந்தீர்களே நானும் இராஜனும் பிள்ளைகளும் சுகத்துடன் வாழுங்காலத்தில் சநியீசானிட மாயையினாலே ராச்சியமிழந்து வனவாசம் போன விடத்தில் இராஜன் என்னை நித்திரையில் விட்டுப் பிரிந்து போனார் அவரைத் தேடிக் காணாமல் அநேகதுன்பப்பட்டு தப்பலை நீடத்திற் போகச் சங்கை

யாக தாதியென்று பேரிட்டுக்கொண்டு உங்கள் சமூகத்துக்கு வந்தேன் நான் தமயந்திதானம்மா தாயே.

கோக்கிலாதேவிசொல்-விருத்தம்.

தாயேயென்னம்மாகேளாய்ச் சனியனுபவதிப்பட்டு
நாயகன்றனைப்பிரிந்து நம்மிடம்வந்துசேர்ந்தாய்
நேயமாய்வந்ததாலே நீகலங்காமலுந்தன்
தேயத்திற்றந்தைபக்கஞ் சென்றுவாழ்ந்திருந்திடாயே.

(வ-ம்) ஆகோவாருமம்மா எனது புத்திரியாகிய தமயந்தி நீங்கள் சனிபகவான் மாயையினாலே ராச்சியமிழந்து புருஷனையும் பிள்ளைகளையும் விட்டுப் பிரிந்து எந்நேரமுந் துக்கப்படுகிறாய் உன் தந்தையாகிய வீமராஜனிடம்போய் உன்பிள்ளைகளைப்பார்த்தாவது சுகமாயிருமம்மாதாயே

பொது-விருத்தம்.

மகள்தனைவீமராசன் மாளிகைக்கனுப்பவெண்ணிச்
சகலவாபரணவஸ்திரந் தண்டிகைசகிமார்சூழப்
புகழ்பெறுவிதர்ப்பதேசம் போய்வாருமென்றனுப்ப
அகமகிழ்விலாமற்றந்தை யவரிடம்வருகின்றாளே.

தமயந்திதன் தகப்பனிடம் வருகிற-தரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

தந்தைவீமசேனன்றன் பதம்நாடியே தமயந்திதேவிவந்தாள்
சகிமார்சூழத் தமயந்திதேவிவந்தாள்
அந்தமாந்தாதியர் அருகினிற்புடை சூழச்
சிந்தைமகிழ்ந்தேறிச் சிவிகையதனிலேறி. (தந்தை)
சிறியதாய்கோக்கிலா தேவியுத்தாரங்கொண்டு
சிறப்பாகராஜவீதித் தெருக்கள்பலவுங்கண்டு
அரியபலவனங்க ளாரணியத்தைநாடி
அழுதுதமயந்திப்பெண் ணருகைவயர்தனைக்கூடி. (தந்தை)
மயில்கள்புறாவினங்கள் வாவிதனிலன்னங்கள்
பயிலுங்குயிலினங்கள் பகர்வண்டுபூஷணங்கள்
நயமாய்க்கீதம்பாட நரிகள்முயல்களோட
கயல்விழிமாதாடக் கவரிசாமரைபோட (தந்தை)
மன்னனானையெண்ணி மங்கைமனதுங்குன்னி
அன்னமாகாரந்தண்ணீ ராவல்கொள்ளாமற்கண்ணி
முன்னஞ்செய்தவினை முடிந்ததிப்படியென்று
என்னமாகத்தந்தை யிடத்திற்போய்ச்சேர்வதென்று. (தந்தை)

வீமராஜன் தமயந்தியைப்பார்த்து சொல்விருத்தம்.

சீவரத்தினமேயெந்தன் சிரோமணியேயான்பெற்ற
பாவையேநான் முன்செய்த பாவபாக்கியமோவுந்தன்

நாயகன் றனைப்பிரிந்து நம்மிடம்வந்துசேர்ந்தாய்
கேவலமாகவந்து கிலேசமவிட்டுரைசெய்வாயே.

(வ-ம்) அகோவாருமம்மா எனது புத்திரியாகிய சீவரத்நமே நாங்செய்தபாவமோ அல்லது நீங்கள்செய்த பூர்பலமோ ராச்சியந்தையும் பிள்ளைகளையும் விட்டுப்பிரிந்து வனவாசம்போனீர்களே- உன்னிட பிராணநாயகனெங்கேபோனார் ஒண்டியாய் அநாதிபோல்வந்து ஏவல்செய்துக்கொண்டிருப்பானேன் உன்தலையி லிப்படிக்குப் பிரமதேவ னெழுதினானோ நல்லது (நீ) யார்செய்த பூசாபலத்தினால் என்னிடம் வந்துசேர்ந்தாய இனிமேல் நீ சஞ்சலப்படவேண்டாம் நீ வனவாசம்போனநாள் முதற்கொண்டு நடந்ததைச் சவிஸ்தாரமாகச் சொல்லுமம்மா தாயே.

தமயந்தி-வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

தந்தையேவீமராசா தயாபராசொல்லக்கேளும்
எந்தனைநீயேன்பெற்று யிந்தகண்காக்ஷிக்கோதான்
சொந்தநாயகனுமென்னைச் சோதிக்கவிட்டுப்போனார்
அந்தரப்பக்ஷிபோல வலைந்துநான்வந்தேனையா.

தமயந்தி-தன்தகப்பனிடத்தில்-முறையிடல்-கண்ணிகள்

இ-ம்-முகாரி-சம்பைதாளம்.

ஆதிமுதலின்னளவில் ஐயனேநடந்தகதை
சூதினாற்பதியிழந்தேன் றுணைவருடன்காட்டில்வந்து
காதலனைப்பக்ஷிதன்னைக் காவலன்பிடிக்கப்பின்னே
சோதனைசெய்யவேயன்னாங் துகிலைப்பறித்ததேகவின்னம்
அரசனும்நானும்வந்து அடவிதனிலேயுகந்து
இருதுகிலையிருவோரு முடுத்திருந்தொசெய்தோம்பாரும்
பெருவனத்திலென்னைவிட்டென் பிராணநாதன்பிரிப்பட்டு
அருவையென்னையொண்டியாக வரசனும்பிரிந்துபோக
மயக்கித்தியங்கிவரும் வழியில்மறித்தாடிவொரு
புயங்கமென்னைக்கொல்லவந்த போதுவனவேடனொந்தன்
நயந்தருகில்வந்திருந்தா னங்கையெந்தறுலெரிந்தான்
மாதவரிஷியைக்கண்டேன் வணிகர்துணைகைக்கொண்டேன்
சேதஞ்செய்யசெட்டிதன்னைச் சினந்தானைசெல்லப்பின்னே
பாதைகூடிச்சுவாகுநாடு பாவிவந்தேன்பட்டபாடு
சிறியதாயுடனேமெய்யாய்ச் செப்பியிங்குவந்தேனையா.

வீமராசன்சொல்-விருத்தம்.

பாரினிலெங்களைப்போற் பாலனைப்பெற்றோரிந்தக்
காரணங்கண்டாருண்டோ கர்த்தனேகமலவாழ்வே
ஆரணன்முன்னஞ்செய்த வநீதமோபகவானுக்குங்
காரிக்குங்களிப்பாய்ச்செய்த கண்காக்ஷிக்காளானேனோ.

### வீமராஜன்-தமயந்தியைப்பார்த்து-புலம்பல்-தரு

இ-ம்-சாவேரி-திரிபுடை-தாளம்.

என்செய்வேனம்மா-என் கண்ணே நான்
என்செய்வேனம்மா
உன் அகம்பார்க்கவு மென் றுயர் தீர்க்கவும்
உள்ளந்தனிலெண்ணி யுருகுது-டலங்குண்ணி (என்செய்)
பொன்னே கண்மணியேவிலையில்லாப் பூஷணப்பணியே
அன்னமேதேனே யமுதே யழகுயர்மானே
முன்னோர்செய்தவினை மூண்டதுவோவினை
என்வயிற்றினில்வேதனையென்படைத்தான் நான் (என்செய்)
நளனுன்னைக்கொண்டான் உன்னைவிட்டுநடுக்காட்டிற்சென்றான்
கிளிமொழிமாதே மனதிற்கிலேசம்வையாதே
அழுகாதேபுலம்பாதே யம்மா பயப்படாதே
விழுகாதேதயங்காதே விதிபின் பயன்விடாதே. (என்செய்)
பஞ்சணைவிட்டே-என்னம்மா-யிப்பாடுகள்பட்டே
மஞ்சனைப்பிரிந்தே-பிறப்பட்டு-வந்தாயேயரிந்தே
அருசுகமேபெண்கள்-அன்னமேசொர்ணமே
நெஞ்சங்கலங்காதே நின்றுபுலம்பாதே. (என்செய்)

### தமயந்திசொல்-விருத்தம்.

அன்னையேயென்னைப்பெற்ற வையனேயருமையாகப்
பொன்னெனவேவளர்த்திரிந்நான் பிரிந்தவெண்கணவன்றன்னை
கண்ணினாலேகாணு மெத்த காலங்களாச்சுதென்ன
பண்ணுவேன் மாலையிட்ட பத்தாவைவரக்காணேனே.

(வ-ம்) அநேகோசரணந் சரணமையா சுவாமி என் தந்தையாகிய வீமராஜனே நாங்கள் ராச்சியபாரம விட்டு வனவாசம் வந்தவிடத்தில் என்னை விட்டுப்பிரிந்துபோன எனதுபிராணநாயகன் இதுவரையிலும் காணோம் இனிமேல் சும்மாயிருந்தால் அபகீர்த்திவரும் ஆகையால் நம்மிட சாரணபுரோகிதாளவர்களை இந்த ஐம்பத்தாறு தேசங்களிலும் காடுமலை வனாந்திரம் ரிஷிகளாசிரமம் இதுமுதலானதுந் தேடிப்பார்த்துவரச்சொல்லுங்களையா சுவாமி.

### வீமராஜன்-விருத்தம்.

சண்டமாருதத்தையொத்த சாரணரேகேளீரிந்த
மண்டலந்தனிலேயுள்ள மாநகர்தன்னிலெங்கும்
கண்டிடில்நளேந்திரராஜன் காணக்கூடாதகேகம்
கொண்டிருப்பார்தானிக்கண் குறிப்பறிந்துரைசெய்வீரோ.

(வ-ம்) அநேகோவாருங்களையா சாரணப் புரோகிதாளே இந்த அவனி ஐம்பத்தாறு தேசங்களும் காடு மலை வனம் வனாந்திரங்கள் ரிஷிசுகாள் ஆசிரமம் இதுகளிலே நீங்கள் தேடினால் அப்போது அவர் முன்னிருந்த மாதிரியாயிருக்கமாட்டார் வேறும் உருமாறியிருப்பார் ஆகிலும் நீங்

கள் அப்பேர்ப்பட்ட விடங்களிலே மெள்ள தந்திரவுபாயமாக விசாரி த்து அவருடன் கலந்துபேசி அந்தக் குறிகுணங்களையும் அறிந்துவந்து சொல்லுகிறவர்கள் சாரணப்புரோகிதர்களே,

சாரணன் நளராஜனைத்தேடி வருகுதல்-தரு

இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

தேடிப்பார்த்துவருவோம் வ. ரீரநளராஜனைத்
தேடிப்பார்த்துவருவோம்
தேடிப்பார்த்துவருவோம் ஜெயவிடதபதியைக்
கூடிநடவுங்காணும் குச்சரதேசம்வந்தோம (தேடிப்)

(வ-ம்) ஓய்கப்பைபயரே ஓய்குப்பைபயரே இவ்விடத்தில் நளமகாராஜா யி ருக்கிறாரா பாருங்காணும் பாரும் ஓய் இவ்விடத்தில் காணோம் காணும காணோம் இல்லாவிட்டால் அளந்தாதான் குறுணிகாணும்.

(தரு) வங்கணதேசஞ்செல்வோம் வாரும்மாராடவிங்க
மாளுவதேசத்தே தீபாரும்
கொங்கணதேசத்திலுந்தேடிக்-குருபியான
கொம்மவனைன் றன்னை நாடி
மங்களஞ்சேர்கலிங்க மாநகர்தன்னிலோடி
எங்கிலு நளனைக்காணோ தங்கியேமுகமும்வாடி (தேடிப்)

வசனம்-ஓய்அப்பணிப்பட்டரே ஓய்சப்பாணிப்பட்டரே எங்கேகாணு ம் இந்தத்தேசங்களெல்லாம் போய்த்தேடிக காடு மலை வனம் வனாந்தி ரங்கள் எல்லாம் பார்த்தோமே காம் என்னகாணும் செய்கிறது வியாரா ஜன்முகத்தில் எப்படிகாணும விழிக்கிறது ஓய் போவோம வாருங்கா ணும் அப்படியல்லகாணும அல்ல இன்னமுண்டான தேசங்களெல்லா ந் தேடிப்பார்த்துக் கண்டு வந்தோமேயானால் ஓய் மோகனமாலை கன் டசாப்பனி இதுகளெல்லாம் வெகுமதிகொடுப்பார்காணும் ஆம்ஆம் அ ல்லகாணும் எனக்கு வருகிறதற்கு மனதில்லைகாணும் ஆனால் நீர் போ ய்வாருங்காணும் குத்திரப்பொட்டிமகனே.

கடவுந்துவாரகைக்குச்செல்வோம்-அயோத்தியிற்போய்
நன்றாய்விசாரணைசெய்வோம்.
அடமாய்நளனைத்திட்டிவைவோம்-அதுகண்டங்கு
ஆர்வந்தெதிர்ப்பாரதைப்பார்ப்போம்
படபடவேயுரைத்தால் பார்த்துக்கொள்ளுவோம்நளன்
இடம்விட்டுவேஷமாயிருப்பாரதுவேசம். (தேடிப்)

வசனம்-ஓய் வெங்கடராமகுருக்களே ஓய்கிரிஷ்ணகுருக்களே இந்த அ யோத்தியாபுரிபட்டணங்காணும இவ்விடத்தில் அங்கேபார்த்ததுபோல்பா ர்க்கலாகாதுகாணும் ஓய் அந்தநளராஜா? தமயந்தியைவிட்டுப்பிரிந்துபோ னதினால் அவனைத் தூஷணித்துப் பேசினோமேயானால் எப்படியும்வெ ளிப்படுங்காணும் இதற்குச்சந்தேகமில்லை ஆனால் அவர்கூட அதற்குப்பதி

னுத்திரவுமிகாடுத்தால் பார்த்துக் கொண்டுபோய்த் தெரிவித்துப் போ டுவோங்காணும் ஓய் ஆம்ஆம் மெய்தான்காணும் சபாசுநன்றுயோசனை செய்தாய் சரிசரி ஆனல் அந்தரிதுபர்ணராஜன் சபையிற்போய் தாக்ஷிப் போம்வாருங்காணும்.

சாரணன்-விருத்தம்.

மண்டலந்தனிலேவாழும் மன்னராயிருந்தபேர்கள்
கொண்டபெண்டிணைப்பிரிந்த கொடுமையைக்கண்டதுண்டோ
விண்டிடப்பார்த்துநல்ல வீரமில்லார்க்குவேறு
பெண்டிருமபிள்ளைவேண்டாம்-பெரிதோதன்வயிறுதாமே.

(வ-ம்) அகோசேளுங்களையா அயோத்திபாபுரியிலிருக்கிற ரிதுபர்ணம காராஜா சபையோர்களே கேளுங்கள் அதென்னவெனில் உலகத்திலா ண்பிள்ளையாகப் பிறந்தால் கொஞ்சமாவது ரோஷம்வெட்கம் இதுமுத லானதுகளும் வேணும் இல்லையென்று நிஷதாபுரியாளப்பட்ட நளச்சக் கிரவர்த்தி மகாராஜன்செய்த அன்னீதத்தைகேளுங்கள் ஆபத்வருங்கா லத்தில் தன்பெண்சாதி பிள்ளைகளுடனே குடும்பசமேதரா யிருக்கவே ண்டியது. அப்படிக்கில்லாமல் தனபிள்ளைகளை ஒருபக்கமும்பெண்சா தியைக்கூட அழைந்துக்கொண்டுபோய்க் காடிபுலி மிருகசாதிகளிருக் கப்பட்டகாட்டிலே தமயந்தியை நித்திரையில் ஒண்டியாய் விட்டுவிட்டு ஓடிப்போய்விட்டார். இது லோகத்தாருக்கடுக்குமா இப்படிக்குச் செய் யலாமோ சொல்லுங்களையா புண்ணியபுருஷர்களே.

பாகவன்சொல்-விருத்தம்.

ஏதுகாண்சாரணனே யிகத்தினிலெவரானாலும்
நீதிநலநேகந்தொல்லைச் சிறுமையால்மனைவிமக்கள்
காதலைமறந்துபோனர் காணுதவிடத்தில்நீங்கள்
பேதமயிககூறிபேசப் பித்தரோசொல்லுவீரோ.

(வ-ம்) அகோவாருங்கள் சாரணப்புரோகிதர்களே உலகத்தில்ராஜாதி பதிகளுக்கு ஆபத்வருங்காலத்தில் பெண்சாதி பிள்ளைகளை விட்டுப்போ வதும வருவதும ஒருநிலையல்ல. ஆகிலும் நீங்கள ராஜாக்கள் நிறைந்தச பையில் அந்தநளமகாராஜாவை யானம் வெட்கமில்லையென்றும், இப்ப டிதூஷணிப்பது எந்த தருமசாஸ்திரததில் சொல்லியிருக்கிறது மேலு ம் அந்தராஜா என்ன அன்னீதஞ்செயதிருக்கிறுர் தன்னுடனேகூடப் பெண்சாதியானவள் காட்டில் கஷ்டப்படலாகாதென்று தாய்வீடுபோ ய்ச்சேரட்டுமென்று விட்டுப்போனர் இதுதப்பிதமா இந்தச்செய்தியெ ல்லாம் அந்தநளராஜனிருந்து கேட்டதேயுண்டானல் உங்களை நக்கை ப்பிடுங்கிப்போடுவார் சீபோபயித்தியங்கொண்ட சாரணப் புரோகிதர் களே.

சாரணன்வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

மண்டலாதிபனேமன்னர் மகிபனேசொல்லக்கேளும
எண்டிசைதனிலெண்ணேழு தேசங்களெல்லாஞ்சுத்தி

கண்டுவந்தோம்நளேந்திரன் கருத்தறிந்துணாவகர்ந்தோம்
சண்டையேசெய்துபோனார் தாமினதையறிகுவீரே.

(வ-ம்) அகோசிரஞ்சீவி விதர்ப்பதேசமாளப்பட்ட வீமராஜனே, தேவரீர்திருவுளப்பிரகாரம ஐம்பத்தாறு தேசங்களும் காடுமலை வனமனைஞ் சுதிரங்களெல்லாம் போயத்தேடி அவ்விடத்தில் தாவித்து மறுபடியும் அயோத்தியாபுரி ரிதுபர்ணமகாராஜன் சபையிலும் நின்று அந்த நளமகாராஜனைத் தூஷணித்துவரும்போது அவ்விடத்தில் பாகவனென்றும் ஒருவர்வந்து எங்களைத்தடுத்துப் பேசாதெல்லாம பேசிப்போனார் அவரைப்பார்த்தால் மெத்தவும் விகாரரூபமுள்ளவராயிருக்கிறார் இதுதான் நாங்கள்போய்க் கண்டுவந்தோமையாராசனே.

தமயந்திக்கு-வீமராஜன்சொல்-விருத்தம.

திங்களேனார்முகத்திருளே செல்வியேசென்றதூதர்
எங்கும்போய்ப்பர்த்தயோத்தி யிறைரிதுபர்ணன்பக்கல்
நங்கையையிருக்கக்கண்டு நவின்றவுத்தாரங்கேட்டு
இங்கிதேதாவந்தாரம்மா யினியிதற்கென்னசெய்வோம்.

(வ-ம்) அகோகேளும் எனதுபுத்ரசிகாமணியாகிய தமயந்தி நானனுப்பின சாரணப்புரோகிதாள் செகமுழுதுந்தேடிக்காணாமல் அயோத்தியாபுரிபட்டணத்திற்போய் அந்தநளராஜனைத் தூஷணித்தார்களாம். அப்போது அவிடத்தில் தடுத்துப்பேசினவர் ஒருவருமில்லை திரும்புங்காலையில் யாரோ ஒருவிகிர்தரூபமுள்ளவன்வந்து இவர்களைமறித்துப் பேசாதெல்லாம் பேசிப்போனானாம் ஆனால் எனக்குச்சந்தேகமில்லை உன் புருஷனாகவேயிருக்கவேணும் இதற்கென்னயோசனை செய்கிறதுசொல்லுமம்மா தாயே.

தமயந்திசொல்-விருத்தம்.

தவஞ்செய்துபெற்றெடுத்த தந்தையேசரணஞ்சேனீர்
நிலந்தனிற்றமயந்திக்கு இரண்டாம்விவாகமென்று
சுயமாம்நாட்டினேமயாம சுருக்கினில்ரிதுபர்னேந்திரன்
வருகவேநிருபர்தூதர் வசத்தினிலனுப்புவீரே.

(வ-ம) அகோ சரணஞ்சரணமையாசுவாமி எனது தந்தையாகிய வீமராஜனே இப்பவும என்மகள் தமயந்திக்கு இரண்டாவது சுயமரம்நாட்டியிருப்பதால் சகலதேசத்து ராஜாக்களும் வந்திருக்கிறார்கள் நாளை சூரியவுதயத்துக்கு முகூர்த்தமானபடியால் தாமும் அதிசீக்கிரத்தில் வந்து சேருமென்று ரிதுபர்ணராஜனுக்கு நிருபமனுப்பினால் அவருடனேநளனும் நாயகரும் வந்துசேருவாரையாசுவாமி.

வீமராஜன்-விருத்தம.

சீர்பெருமயோத்தியாளுஞ் செயரிதுபர்னேந்திரற்கு
ஊர்பெரும்வீமராஜ னெழுதியநிருபஞ்சேனீர்

பாரினிலெனதுபுத்ரி பாங்குளதமயந்திக்குச்
சூரியவுதயத்திற்குச் சுயமரமெனச்சொல்வீர்

(வ-ம்) அகோவாருமையாசாரனுளேஇந்த நிருபத்தைஅயோத்தியாபுரியாளப்பட்டரிதுபர்ணமகாராஜனிடத்திற்கொடுத்து விதர்ப்பதேசத்தில்தமயந்திக்குஇரண்டாவது விவாகமானபடியால் நாளையதினம் சூரியவுதயத்துக்குமுகூர்த்தமொன்று சொல்லி சவிதியாய்வரும்படிதெரியப்படுத்தி வாருங்களையா சாரணபுரோகிதாளே.

சாரனுள்-ரிதுபர்ணராஜனுக்குச்சொல்-விருத்தம்

தலமெலாம்புகழ்மிகுத்த ஜயரிதுபர்ணராஜே
சலமறுவீமராஜன் சாரனுள்வந்தோமையா
நிலமெலாமறியவொண்டாம் விவாகமென்மகளுக்கென்று
உவகையாய்ச்செய்திசொல்லி ஓலையைத்தரச்சொன்னரே

(வ-ம்) அகோவாருமையா ரிதுபர்ணமகாராஜனே விதர்ப்பதேசத்தையாளப்பட்டவீமராஜன் புத்திரியாகிய தமயந்திக்கு இரண்டாவது சுயமரம் நாட்டியிருப்பதால் சகலதேசத்துராஜக்களும் வந்திருக்கிறார்கள்தாமும்அதிசீக்கிரத்தில் வரவேண்டியது நாளைசூரியவுதயத்துக்கு முகூர்த்தமானபடியால் வந்துசேரவேணுமையா மகாராஜனே.

பொது-விருத்தம்.

காந்தனிற்செங்கோல்கொண்ட காவலன்வீமராஜன்
வரவிட்டநிருபந்தன்னை மன்னவன்ரிதுபர்னேந்திரன்
தாமிகுஞ்சபையிலோலை தன்னைவாசித்துபார்த்துச்
சிரவணனந்தங்கொண்டு ஜெயபேரிமுழக்கினனே.

ரிதுபர்ணராசன்சொல்-விருத்தம்.

கொண்டதோர்சக்கிரவர்த்தி கொடுத்துவையாமற்போனர்
பெண்டவள்நமக்கில்லாமற் பின்னொருவருக்குமுண்டோ
இன்றுநான்விதர்ப்பதேச மீக்ஷணஞ்செல்லவேணும்
நன்றாகரதத்தைப்பூட்டி நடத்துவாரார்சொல்வீரோ.

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் சாரதிமார்களேவிதர்ப்பதேசத்தில் தமயந்திக்கு இரண்டாவது முகூர்த்தமானபடியால்நாம் போகவேணும்ஒருவேளை அந்தப்பெண்ணானவள் நமக்குக்கிடைத்தாலுங்கிடைக்கும்நாளைசூரியவுதயத்துக்கு நமமைக்கொண்டுபோய்ச் சேர்க்கிறவர்கள் ஆர்சொல்லும்பிள்ளாய் சாரதிமார்களே.

சாரதிசொல்-விருதகம்.

வாழ்வினின்மிகுத்தவெங்கள் மகாராசனேநீர்கேளும்
தாழ்விலாவுமதுவார்த்தை தனைப்போலதம்கடத்த
ஏழைமாதஞ்செல்லு மிவடம்விட்டவடம்போக
ஆழியானலுமேக அருணனல்முடியாதையா.

வசனம்.

அகோ சரணஞ் சரணம்மையாசுவாமி ரிதுபர்ணமகாராஜனே தங்களுத்திரவின்படிக்கு விதர்ப்பதேசத்துக்கு ரதம்நடத்தவேணுமானால் ஆயிரம்யோசனை தூரமிருக்குது ஆனபடியால் நாளை சூரிய வுதயத்துக்கு ரதம்போகவேணுமென்றால் எங்களாலேயும் சூரியபகவான் சாரதியான அருணனாலேயும் முடியாதையாசுவாமி.

பாகவான்சொல்-விருத்தம்.

போகனுயிர்கள்போற்றும் புரவலாசரணங்கேளும்
தாகமாகொடியிற்றேனாத் தானடத்துவராகொன்றீர்
வேகமாய்ரதநடத்தும் வித்தையென்னிடத்திலுண்டு
ஏகவேமனமிருந்தா லேகுவோம்வருகுவீரோ.

பாகவான்சொல்-தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

சரணஞ்சரண                ஐயனே         தயாபரகிருபாகரா
சாரத்தியஞ்செய்வேனையனே,
அருணன்றேரோட்டி யவனெனக்கிணையாமோ
திரணயோசனைவழிதேறச்சொல்லும்போய்போமோ                (சர)

ரிதுபர்ணன்சொல்-தரு.

சொல்லுமென்பாகவனேசொகுசா அவுசா
துரையா வீரையா தொகைசொல்லும் பாகனே
தொல்லுலகதியலே சுயமாமெனவீமன்
சுருக்காய்வரச்சொன்னதால் தெலைதூரமிருக்குதே.                (சொல்)
இருந்தால்நாளை யேகுவோமினிதாய் நனிதா
விதமாய்ப்பதமாய்ரதம்விடுவேனையனே
வருந்தவேண்டமொரு முகூர்த்தந்தனில் வீமன்
மாநகர்க்கேயும்மைநானேகொண்டேகுவன்.                (இருந்தால்)
(இராஜன்)நான்கொண்டுசெல்வேனென்றாய்-நல்லாய் வல்லாய்
வில்லாய் சொல்லாய் நாமுமப்படியேசெல்வோம்
தேன்மலரணிகுழற் தமயந்திக்குமணஞ்
செய்யமோகனக்கூறி சூணந்தில்விதர்ப்பபுரி.                (நான்)

ரிதுபர்ணராஜன் சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய்பாகனே நம்முடையகுதிரைசாலாவத்தில்போய் நல்லபுரவியாய்ப்பார்த்துவந்து நம்மிடதேரை அலங்காரஞ்செய்துகட்டி சவாரிக்கேதுவாகவந்து சொல்லும்பிள்ளாய்பாகனே.

பாகவன்சொல்-விருத்தம்.

அரிகரிஸ்ரீநிவாசா அநாதரக்ஷகரோயானும்
இருவினைசெயலினாலே செகமொருகுடையிலாண்டு
சுசிபலனெலுமெந்தன் கன்னிசெய்கபடத்தாலும்
சிறுமையாரதசாரத்தியஞ் செய்வதற்கானேனே.

பாகுகன் புலம்பல்-கன்னணிகள்-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

என்னசெய்குவேனையோ என்றலைவிதிவசம்
இப்படிக்கிருந்ததோ என்னசெய்வேன்
மன்னர்மன்னவர்கட்கு மன்னவனுயிருந்து
வாழ்ந்தபலனிதுவோ மாதவனே — சுவாமி
தன்னைப்பணிந்தவர்க்குத் தானேபணிந்தாத
சாதயஞ்செய்யவுமென் றலைவிதியோ — சுவாமி
முன்னஞ்செய்தபவமோ இந்நாள்செய்யுந்தவமோ
முடிந்ததிப்படியோதான் முரகரியே — சுவாமி
திக்கெக்கும்புகழ்பெற்ற சக்ராயுதந்தரித்த
செயவலுமையுங்குன் றசெய்குவாளோஎன்தேவி — சுவாமி
அக்கம்பெரிதென்றெண்ணிச் சுகத்தைவிரும்பினளோ
சோதனைசெய்கிறளோ குசுலிதானோ — சுவாமி
தெற்குவடக்காய்த்திங்கள் தினகரன்மாறினலும்
சித்தங்கலங்கிடாளே தேவிஐயோ — சுவாமி
சித்திரையிலுமெந்தன் நினைவுமறந்திடாளே
நெறிபதுரியாச்சே நின்செயலோ — சுவாமி

பாகுகன்-விருத்தம்.

ஐயனேயாசர்கோவே அடியேனேர்தசிங்காரம்
செய்யவேயுனாத்தாப்போல் சிங்காரஞ்செய்துவந்தேன்
மெய்யாகவிதற்கும்வீமன் விதர்ப்பதேசத்திறுக்கும்
ஐயாயிரங்காதங்காண் ஆண்டவாசொல்லுவோமே,

(வ-ம்) அகோவாருங்களையாசுவாமி ரிதுபர்ணமகாராசனே தேவரீர் உத்தரப்படிக்குத் தேரை அலங்காரஞ்செய்துவந்தேன். இதற்கும்விதர்ப்பதேசத்துக்கும் ஆயிரம்யோசனை தூரமிருக்கிறதே காலதாமசஞ்செய்யாமல் தேவரீர் தேரிலெழுந்தருளவேண்டியதுதான்.

பொதுவிருத்தம்,

சாதிகொண்டுவந்த தங்கயாரதத்திலேதான்
வாரிதிசுலாமண்விண் மண்டலநடுங்கிட
மேருவையொத்தநின்டோள் வேந்தனுந்தேர்மேற்கொண்டு
சீருடன்விதர்ப்பதேசஞ் சேரவேபுறப்பட்டாரே.

ரிதுபர்ணராசன் விதர்ப்பதேசம் வருகிறதரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்

ராஜன்ரிதுபர்ணன் ரதமேறியேவிதர்ப்ப நகர்க்குநடந்தனனே
ஆசிக்கவிவாணர் ஆரியர் கூறவே
அமைச்சர்பிரதானிக ளருகிலிருந்தேசரவே
வாசமிகும்பன்னீர் வாடைகள்வீசவே
மன்னர்திசையாக்குநன்னயம்பேசவே — (ராசன்)
தேபந்தனிலேவீமராசன்புத்திரிகளான்-தேவிதமயந்திக்கே

ம௬

சூழவுவருமநியசுயமராட்டியே-முகூர்த்தத்துக்கேகுதற்கே
மாவேகமாகத்தேர்பூவுலஞ்செய்ய வே
வானவர்யாவரு மலர்மாரிபெய்ய வே
கோபத்துடனேகளண வாம்பரித்துண்ட வே
குதிரைகளுமாளித் தேவின்ஸீற்றுண்டவே (ராஜன்)

ரிதுபர்ணன்சொல்-விருத்தம்.

தேரேறிரிதுபர்ணேந்திரன் செல்லுமப்போதிலேதான்
சாதருநழுவிவீழச் சாரதிதனைக்குறைத்துத்
தேரையிவ்விடம்நிறுத்திச் சீக்கிரந்தன்னிற்சென்று
வார்மிகுஞ்சாதருவை யெடுத்துநீவருகுவாயே.

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் பாகவா நாம் ரதமேறி வருகிறவேகத்தி னாலே மேலேபோட்டிருந்த சாதரு நழுவி பூமியிலே விழுந்துவிட்டது சற்றுநேரம் தேரை இவ்விடத்தில் நிறுத்திவிட்டுப்போய் பார்த்தெடுத்து வாரும்பிள்ளாய் சாரதியே.

பாகவன்சொல்-விருத்தம்.

தேர்தனைநிறுத்துமென்று செப்பியவிதற்குள்ளாக
பாரும்யோசனைதான்மூன்று பார்த்திபாவந்துமிப்போ
காரியம்பெரிதுநாமுங் கடுகவேசெல்லவேணும்
வாருமென்றுரைத்துத்தேரை வண்மையாய்நடத்தினாரே.

(வ-ம்) அகோ வாருங்களையா சுவாமி ரிதுபர்ணமகாராஜனே தேவரீ ர்கள் தேரை நிறுத்தவேணுமென்று சொன்னதற்குள்ளாகத் தேரான து மூன்று யோசனைதூரம் வந்துவிட்டது நாம்வந்தகாரியம் பெரிதே யொழிய இதுபோனது பெரிதல்ல காலதாமசமாகிவிடும் ஆகையால் தேரை ஓட்டுகிறேனையா சுவாமி.

ரிதுபர்ணராஜன்-தரு.

அண்டபுவனமிரண்டுக்கதிர்மதியும் அதிரநக்ஷத்திரமும்
விண்டலந்தனிற்பரி பாய்கின்றவேகத்தால் மேலவனொருபுறமும்
கண்டுநடுங்கிக கிடுகிடென்றேயிவன்
காவலனளன்றனைப்போலே காணுதிவன்
எனறுபேசிக்கொள்ள விறைரிதுபர்ணராஜன்
மண்டலாதிபவுத் தண்ட வீரப்ரகாசன் (ராஜன்ரிது)

பொது-விருத்தம்.

அதிபனும்ரிதுபர்ணேந்திர னநேகதூரங்கள்செல்லக்
குதிரைகளிளைப்பாயாருங் குறிகண்டுபாகனப்போ
அதிஅரையாயவிழ்த்து அசுவமந்திரம்போதித்து
எதிர்ரிதுபர்ணேந்திர னியம்புவான்சாரதிக்கே.

(வ-ம்) அகோதெப்படியென்றால், இந்தப்பிரகாரம்ரிதுபர்ணராஜனான வர் தேரிலேறிக்கொண்டுவரும்போது மேலேபோட்டிருந்த சாதருவிழு ந்துபோக அதை எடுத்துவரும்படி சொல்ல அப்போது பாகவன் அதாவ

ன்றுயோசனை தூரத்துக்கப்புறம் விழுந்துபோச்சுதென்று சமாதானஞ்சொல்லி யழைத்துக்கொண்டுவா அப்போதுகுதிரைகள் அனேகம் யோசனை தூரம் வந்ததினால் இளைப்படைந்து தத்தளிக்கிறதைப்பார்த்து பாகவன் குதிரைகளை யவிழ்த்துத்தண்ணீர்காட்டி அசுவத்துக்கு அசுவமந்திரங்களைப்போதித்து குதிரைகளை தடவிக்கொடுத்துக்கொண்டு நிற்கிறபாகவனைப் பார்த்து ரிதுபர்ணராஜன்சொல்லுகிறவிதம் எப்படியென்றால்.

ரிதுபர்ணராஜன்சொல் விருத்தம்.

ஜனகமகிழும்நல்லவிரதசாரதியேகேளாய்
வனமிதில்வாழுந்தாணி மரந்தனைழகனிகாய்பூக்கள்
கணிதமொன்றுரைப்பேன்கேளாய் காய்பழம்லக்ஷாலக்ஷம்
புனிதமாயிலைகள்கோடி போய்பார்த்து வருகுவீரோ.

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் பாகவசாரதியே இந்த அசுவமந்திரமானது இப்பேர்க்கொத்தகேவலமுள்ள அசுவத்திற்குப்போதித்து இவ்வளவுதூரம்வந்ததுநான் எங்குங்கண்டதுமில்லை கேட்டதுமில்லை ஆனால் நானொரு மந்திரஞ்செய்கிறேன் இதோ எதிரேயிருக்கிற தாணிமரத்தில் பூலக்ஷம் காய்லக்ஷம் கனிலக்ஷம்இலைகள் கோடியிருக்கிறது நீர்போய் எண்ணிப்பார்த்து வாரும்பிள்ளாய் சாரதியே.

பொது-விருத்தம்:

கனிமொழியாள்தமயந்தி மறுகல்யாணக்
கருத்தறிவோமென் றுரிதுபர்ணன்றனை
அனிலமதற்கெண்மடங்காய்நடத்தும்போது
அரசனுரைத்திடுக்கணக்கையாய்ந்துபார்க்கத்
தனிநளனும்வந்துமரத்தின் கீழ்நின்றுத்
தான்மிக்காயென்றதிகந் தன்னைக்காணச்
சனிபகவானேழரையுஞ் சரியாய்ச்சென்று
சக்கரவர்த்திமுன்னெழுந்துசார்ந்துவானே.

சனிபகவான் நளராஜனுக்கு முன்வருதல்-தரு

இ-ம்-கலியாணி-திரிபுடை-தாளம்.

காக்ஷிகொடுக்கநள ராஜனைத்தேடிசோ கலிராஜேந்திரன் வந்தார
ருக்ஷியாகமெத்த சோதனைசோதித்து
மாட்சிமையுடன்றாணி மரத்தடியிற்குதித்து. (காட்சி)

சத்தரிஷிமுனிவர் சித்தர்தேவர்களும் -
ஜனகாதியரிவை காரச்செய்தபான்
அத்தன் மால்பிரமன் சித்தங்கலங்கியவ
ரவர்கள்தமென்கும்படி யடித்தகெதாதான்
எத்தலந்தனிலுள்ள ஜீவமுகத்திறங்களையும்
இம்புதலைக்கலை யாவேயுயிர்களையும

பத்திப்பிடித் தத்தாழு வாழுவைத்திடுந்தீரான்
நத்திப்பணிகுவோனாட்டிக்குருபகாரன் (காட்சி)

ஆதியிலேதமயந்திதனைக்கொள்ள
ஆசைகொண்டாரவள் வேண்டாமென்றுதள்ள
வேதனைசெய்ய மனந்தனிலேயெண்ணி
வெகுகாலமாய்நளன் வீடுசென்றேநண்ணி
பாதத்திலேநீர் படாதவிடத்தைப்பற்றி
பதிகுலையச்செய்த சனிபகவான் வெற்றி
கோபத்தையும்மனக் குறையையெல்லாம்விட்டுக்
கொடுத்திடவாம்நளன் றனக்கேயுடன்பட்டு (காட்சி)

இத்தனைபாடும்படுத்திவைத்தேசனி
யீசன்செயல் செயலென்றிருந்தானவனினி
பத்தினித்தமயந்தி பதிவிரதாக்கினி
பத்திததிக்குதே யென்செய்குவோயினி
அத்தமும்வாழ்வு மாசாதிபத்யமும்
அவனுக்குண்டாக வருள்செய்துநித்யமும்
வைத்துநிஷதா புரியாளமுடிசூட்டி
வருகுவோமென்றெண்ணித் திருவுளத்திற்காட்டி (காட்சி)

நளராஜன் சனிபகவானைத்துதித்தல்-கண்ணிகள்
இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

ஆதிபகவானே யருளாளாநமஸ்காரம்
வேதமுதலோர் துதிக்கும் மேலாநமஸ்காரம்
கந்தன்முசுகுந்தனெனுமில் காமன்ரகுராமன்
நொந்தத்துயர்படவேசெய்த மூர்த்திநமஸ்காரம்
விந்தன்கோவிந்தன் அரிச்சந்திரன்சராசர்தன்
எந்தாயிடர்கொள்ளச்செய்த யிறைவாநமஸ்காரம்
கனகன்முனிசனகன்புகழ் கனத்தமாபலியும்
ஜனகிசிறையிருக்கச்செய்த சுவாமிநமஸ்காரம்
ஈசன் அளகேசனிந்திராசன் விக்கிரேசன்
நீசமடையவுமேசெய்த நீலாநமஸ்காரம்
மாசின்மறைதேவர்முதல் வணங்குஞ்செயல்பெற்றோன்
தாசநுகூலாசனி யீசாநமஸ்காரம்.

நளராஜன் சொல்-விருத்தம்.

சோதியேசுடரேதொண்டர் துயராத்திரம்பகல்கும்
ஆதவக்கொழுந்தேயென்னை யாண்டருள்செய்யுமையா
ஏதுகுற்றஞ்செய்தாலு மீஸ்பராபொறுத்துக்காப்பீர்
வாசமாமுனதுபாத பலாடிசரணந்தானே.

(வ-ம்) அகோசரணஞ்சரணமையாசுவாமி சனீசரபகவானே தேவ
ரீரவர்கள்-வந்தபோதேநான்தன்னியனானேன் ஜென்மசாபல்யநிவர்த்தி

பெற்றேன் அடியேன் என்ன குற்றஞ்செய்திருந்தபோதிலும் தேவரீ வர்கள் பொறுத்து ரட்சிக்கவேணுமையாசுவாமி.

சகிபகவான் சொல்-விருத்தம்.

சந்தனைப்பணிந்துபோற்று மிராஜாஜேந்திராகேளாய்
வந்தனைசெய்தவெல்லா மனதுசந்தோஷமாச்சு
உந்தனைச்சோதித்தோம்நா மூமக்கொருகுறைவுமில்லை
வந்தநானுனக்குவேண்டும் வரந்தனையருளுவோமே.

(வ-ம்) அதோவாருமையா நளராஜனே நானுனக்குச்செய்தவஞ்சனை யினாலும்கொடுமையினாலும்நீர்மனம்பொறுத்து சத்தியந்தவறிடாமலு ம்பெரியோர்களை நிந்தியாமலும் இதுகாலவரையில்படாதபாடெல்லாம் பட்டுவந்தபடியினாலே உங்கள்பதிவிரதாக்கினி நம்மைமிகவும் தகிக்குது ஆகையால் நானொருக்ஷணமாகிலும் உங்களிடத்திலிருக்கமுடியாது உம க்குத்தேவையான வரத்தைக்கேளும் தருகிறேன்பிள்ளாய்ராஜனே.

இராசன் சொல்-தரு-இ-ம்-பந்துவராளி-அட-தாளம்.

சுவாமிசரணமென்னையாளாய்
சகிபகவானே தங்கத்தாளாய்
நேமகத்தோரனுகூலா உம்மை
நினையாதபேர்க்கு மத்திரக்குலகாலா (சுவாமி)

சிரஞ்சீவியேநளதிரா-கிருபை
செய்தேன்செய்தேனிதோகோ
வாமெல்லாந்தருகுவேன் பாரா-யுந்தன்
மனதயிந்தேனினிவாராய் (சிரஞ்சீவி)

பண்டுசெய்ததவந்தானோ-இந்தப்
பாரிற்குறையென்செய்தேனோ
தொண்டனாமுமக் கெதிர்நானோ-என்னைத்
தொட்டுவிட்டீர்கலந்தானோ. (சுவாமி)

உன்றனலாகாதினியேது-உங்க
ளிடமிருக்கமுடியாது
சொன்னல்நீகேளாமல்வாது-எதிர்
சொல்லுவொண்ணாது இருவகாணிப்போது (சிரஞ்சீவி)

காரணனேகலிராஜா-வும்மைக்
கருதுவார்களன்பர்நேசா
தாரணியிற்சகிபீசா-சர்வ
ஜீவரக்ஷகதாணிவாசா. (சுவாமி)

நாடுநகர்செல்வம்தாளும்-இதோ
நாதனேதந்தேனீயாளும்
சோடுகட்டிக்குதைபாடும்-சுக
மாகவுன்றிட்டங்கைக்கூடும். (சிரஞ்சீவி)

நளராஜன்சொல்-விருத்தம்.

பானுவின்றவத்துதித்த பகவானேசரணமையா
தானவனுனைசம்பு சதாசிவனைஇங்கச்செய்யத
மானுபாவாவெங்களுக்கும் வாழ்வுசம்பத்துண்டாகத்
தினாசகூசபோதேவர் திருவடித்துணைசெய்வாயே.

(வ-ம்) சரணஞ் சரணமையா சுவாமி சநியீசுரபகவானேதேவரீரவர்கள் திரிமூர்த்திகளையுங்கடுநடுங்கத்தக்கதாகச்செய்துவைத்தமகானுபாவரோ அடியேன்பேரில் இருமைபுவைத்து என்னிட சரித்திரத்தையும் கொண்டாடப் பட்டபேனையும் கேட்டபேனையும் இதுமுதல்தங்களானுகாமல் தவப்பிரசாதந் தரவேணுமையாசுவாமி.

சநியீசுரன்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய்ராசனே நீர் கேட்டுக்கொண்டபடியே வரப்பிரசாதமுந்தந்தோம் ஆனால் இந்த தாணிவிருக்ஷத்துனிமூலமேலேவந்தவர்களொருதவிரமற்றொருவர்களிடத்திலும்நான் அணுகிறதில்லைநீர் இந்தக்ஷணமே அந்தருதுபர்ணராஜாவினிடத்தில்போய்ச்சேர்ந்தாயானால் அவனைத்தோர்க்கவைத்து உம்மைக்கெலிக்கவைத்து உனக்குச் சகலசாம்பிராச்சியங்களும் வரும்படிக்குச்செய்து உமக்குபட்டாபிஷேகம் பண்ணிவைக்கிறேன் போய்வாரும்பிள்ளாய் ராஜனே.

பகவான்-ரிதுபர்ணனுக்குச்சொல்-விருத்தம்.

எந்தனைவைத்தேயானு மிங்கவேனைசொல்லக்கேளீர்
உந்தன்வாய்மொழிப்படிக்கு வுயர்தாணியிலையுங்காயும்
சந்தேகமில்லையிலக்கஞ் சரியாகவிருக்குதிப்போ
சிந்தையுமகிழ்ந்துநாமுனு செல்லுவோமெழுந்திடீரோ.

(வ-ம்) அகோ சரணஞ்சரணமையாசுவாமி தாங்கள்சொல்லிய கணக்குப்பிரகாரம் அந்தத்தாணிவிருக்ஷத்துப்பூ இலை காய் பழம் இதுமுதலானதுகளும் சரியாகவிருக்கிறது இது மகா அருமையானவித்தையாயிருக்குதையாசுவாமி.

ரிதுபர்ணராஜன்சொல்-விருத்தம்.

அருமையாம்ரதசாரத்ய மதுசெயும்பாகவாகேள்
அருமையாமசுவமந்திர மதைநமக்கருளிச்செய்தால்
அருமையாமெனதுவித்தை யுதனைநானுனக்குரைப்பேன்
அருமையாமெளியதல்ல வசுவமந்திரஞ்சொல்வாயே.

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய் பாகவா உம்மிட அசுவமந்திரம்நமக்குக்காண்பித்தால் உனக்குத்தாணிவிருக்ஷமந்திரஞ் சொல்லுவேன்பிள்ளாய்பாகவனே.

பாகவன்சொல்-விருத்தம்.

செந்திருவளருஞ்சிலை செகராஜதிராபோற்றி
மைந்தருவாழுந்தேவர் பழமனுமறியாரிந்த

மந்திரமுமக்குரைப்பேன் மனதினில்வருத்தக்கொள்வீர்
வந்துநோங்களாச்சு வருகுவீர்செல்லுவோமே.

(வ-ம்) ஆகோவாருமையா ரிதுபர்ணமகாராசாவே அந்தருமர்மூர்த்திக ளாலுமறியகூடாத மந்திரம் உமக்குத்தெரிவித்தேன் அடியேனுக்கு தாணிவிருஷத்து மந்திரமுந்தெரிவித்து காலதாமசமாகாமல்நாம்வந்த காரியத்தைநாடிப்போவோம் வாருமையாராசனே.

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் ரிதுபர்ணராசாவானவர்தாணிவிருக்ஷத்து மந்திரம் சாரதிக்கு வுபதேசஞ்செய்ய அப்போது பாகவலனென நளராசாவும்ரிதுப ர்ணராசனுக்கு அசுவமந்திரம் போதிக்க இருவரும் சம்மதப்பட்டு விதர் ப்பதேசத்தை நாடிதேரைவிட்டுக்கொண்டு வருகிறவேகத்தை தமயந்தி யானவள்பார்த்து தன்தகப்பனாகிய வீமராசனுக்குச்சொல்லுகிறவித மெப்படியென்றால்.

வீமராசனுக்குத்-தமயந்திசொல்-விருத்தம்.

தந்தையேசரணங்கேளீர் தாணிவிண்ணைநோக்கி
வந்திடுந்தேரின்வேகம் மகாராசனேநீர்பாரும்
வந்தபாகவன்றனோந்தன் மணவாளனல்லால்வேறு
இந்தவாறுலகுதன்னிலின் னொருவனைக்காணேனே.

(வ-ம்) அகோ சரணஞ்சரணமையா சுவாமி என்தந்தையாகியவீமம காராசனே இதோதேர்வருகிறவேகத்தையும்அகலவேகத்தையும்பார்த் தால் என்புருஷனென நளச்சக்கரவர்த்திமகாராசரே யல்லாமல்வேறல்ல அந்தரிதுபர்ணராசனைஎதிர்சென்றழைத்துவந்தால் அந்தசாரதியாயி ருக்கப்பட்ட நளராசாவும் வருவார் அப்போது எல்லாமறிந்துக் கொள் வோமையா சுவாமி.

பொது-விருத்தம்.

மகள்தமயந்திசொன்ன வார்த்தைதனைக்கேட்டுவீமன்
அகமகிழ்ந்தெழுந்துவந்து அரசனுக்கெதிர்கொண்டேகி
தகமையாயழைத்துத் தானுந்தனதரண்மனையில்வைத்துச்
சுகசேஷமதனைப்பேசித் துரைவீமனிருந்தானன்றே.

இதுவுமது.

சந்தோஷமாயிருந்து ரிதுபர்ணேந்திரன்
தமயந்திதனக்குமறுவிவாகமென்று
வந்தோமென்றையுங் காணேமின்னடப்போது
மட்டுமிருந்தறிகுவோ மர்மமெல்லாம
பந்தற்சோடினையுமில்லை முகூர்த்தத்திற்குப்
பாராசர்களாக்காணோம் பார்ப்பமென்று
புந்திதனிலெண்ணி ரிதுபர்ணராசன்
போசனஞ்செய்தே பொழுதைப்போக்கினனே.

பொது-வசனம்

ஆகோதெப்படியென்றால் இரதப்பிரகாரம்ரிதுபர்ணராசாவானவர் அதிகவேகமாக ரதம நடத்திவருகிறவேகத்தைத் தமயந்தியானவள் பார்த்து தன் தகப்பனாராகியவீமராசனுக்குத்தெரிவித்து எதிர்சென்றழைத்து வரும்படிசொல்ல அப்போது வீமராசனானவர் ரிதுபர்ணராசனையெதிர் சென்றழைத்துவந்துவுட்காரசெய்துக்ஷேமகாரியங்களைப்பேசிக்கொண்டிருக்க அப்போது ரிதுபர்ணராசன் தமயந்திமறுமூகூர்த்தமென்று சொல்லியனுப்பினார்களே இவடத்திற்பந்தல்சோடிக்க வில்லைதேசதேசத்து ராசாக்களும வரவில்லை இன்றையவரையிலிருந்துபார்ப்பமென்று யோசித்திருக்க அதற்குள்பாகவனாகியசாரதியானவர் ரதத்தைநிறுத்தி குதிரைகளையவிழ்த்துக்கொண்டுபோய் குதிரைகட்டும்டேறாவில்கட்டி விட்டிருக்க அதற்குமேல்தமயந்தி யானவள்செய்கிறவிதமெப்படியென்றால்.

தமயந்தி தாதிக்குச்சொல்-விருத்தம.

வாருமென் தாதிமாரே வார்த்தையென்னுரைக்கக்கேளீர்
சாரதிகுதிரைலாயந்தனிலிருப்பார்போய்நீங்கள்
கூறியென்வளமையெல்லாங் கூடவேகலந்துபேசிப்
பாருநீயவர்சொல்வார்த்தைப் பயனைநீயறிகுவாயே.

(வ-ம்) அகே வாரும்பெண்ணேசகிமார்களே நம்மிடகுதிரைலாயத்திலே ரிதுபர்ணராசாவுக்கு ரதசாரதியாக வேஷவுருமாறி வந்திருக்கிறாரே அவரண்டையில் வெகுதந்திரவுபாயமாகப்போய்என்வளப்பங்களையும்வருத்தங்களையுஞ் சொல்லி அவர்குறிகுணங்களையறிந்து வாரும்பெண்ணே சகிமார்களே.

தாதிகள்-சாரதிக்குச்சொல்-விருத்தம்

சாலமெல்லாமறிந்த சாரதிமானுபாவா
காலங்கண்டே நீரிந்தக் கபடமாயிருப்பதேனோ
மேலவர்விண்ணோ நம்மை மெச்சுவாரிசாரத்யம்
காலமுமறியார்போலக் கலக்கமாயிருக்கின்றீரோ.

தாதிசொல்-தரு-இ-ம்-ஆகிரி-திரிபுடைதாளம்.

என்னகாணையா-நீர்-ஏதொன்றுமறியார்போலிருக்கின்றீரோ.
மன்னவனும்ரிது பர்ணராசனிடம்
உன்னிதமாய்ரதம் ஓட்டுஞ்சாரதியேநீர்
சின்னமில்லாதெங்க ளன்னைத்தமயந்தியை
முன்னந்தனியேவிட்டார் மோசத்துக்குடன்பட்டார். (என்ன)

கொண்டபெண்ணைநளேந்திரன் ஒண்டியாகவிட்டு
மண்டலந்தனிலெங்கே மறைந்திருக்கிறானோ
பண்டிதேவர்களெல்லாம் பாணிக்கிரகணஞ்செய்ய
விண்டமொழிதுறந்தார் கொண்டுவிட்டேமறைந்தார். (என்ன)

பின்னைபெண்ணுளைவிட்டுப் பிரிந்தபேர்களுக்கு
எள்ளத்தனையிரக்கம உள்ளத்தினிலிராதோ
கன்னத்தனஞ்செய்தாலுங் காலைச்சுற்றியபாம்பு
கடிக்காமற்போகுமோ ஐயாவே (என்ன)

பாதித்துயிலுடனே பாரவனத்தில்விட்ட
நாதனைத்தேடிய நாயகிபாவியோ
ஆதியிலேகொண்ட ஆசைவெறுத்தனன்
ஆண்பிள்ளையல்லவோ ஐயாவே. (என்ன)

பாகவன் விருத்தம்.

கன்னியேநளேந்திரன்செய்த கதையெலாமென்னிடத்தில்
அன்னிதமெனவேசொன்னீர் யான்செய்யலாவதென்ன
உன்னிடதமயந்திக்கு உபகாரஞ்செய்யவந்த
மன்னவன்ரிதுபர்னேந்திரன் வாய்மொழியறிவீர்மாதே.

(வ-ம்) அகோ வாரும்பெண்ணே சகிமார்களே நீங்கள் என்னிடத்தி
ல்வந்து அந்தநளராஜாசெய்த அக்கிரமத்தையும் மோசங்களையுஞ்சொ
ல்லுவதிற்பயனென்ன நானோ ரிதுபர்ணராஜாவுக்குச் சாரதியாகவந்தவ
ன் என்னாலேயென்னபாவிந்த தமயந்திக்குச்செய்த பிழைமோசத்
தைச் சொல்லவந்தீர்கள் இதல்லாமல் அந்தரிதுபர்ண ராஜாவண்டை யி
லே போய்ச்சொன்னால் அவர் அதற்குத்தகுந்த யுத்திரவு சொல்லுவார்
நீங்கள் என்னுடனே பேசுவதை எங்கள்ராஜா கண்டால் கோபிப்பார்
போய்வாரும் பெண்ணே சகிமார்களே.

தாதிகள்-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

காரியக்காரியான நற்றமயந்தித்தாயே
கூறியமொழிப்படிக்கு குதிரைசாலயத்தில்சென்று
சீருடனுங்கள்வார்த்தை செப்பினோம்நளனைக்காட்டி
ஏறுமாறாகப்பேசி எங்களையனுப்பினனே.

(வ-ம்) அகோ சரணஞ் சரணமம்மாதாயே ராஜபரமேஸ்பரி தங்கள்
திருவுளப்பிரகாரம் நளமகாராஜனைப்போல அவனைப்பாவனைசெய்து த
ங்கள் வளப்பம் வருத்தங்களையெல்லாஞ் சொல்லினோம் அவர் ஒப்பாம
ல் வெறுப்பாகப் பேசினாரம்மாதாயே.

தமயந்திசொல்-விருத்தம்.

நல்லதென்சகிமேயெந்த நாயகனளேந்திரபூபன்
வல்லவனெனதாலே மர்மமாய்வார்த்தைசொல்வார்
செல்லுவீர்மடப்பள்ளிக்குத் தின்னுங்காய்கறிகள்சாதம்
நல்லிதமாகச்சமயலாகு முபாயத்தையறிவீர்மாதே.

(வ-ம்) ஆகோ வாரும்பெண்ணே சகிமார்களே நீங்கள் சொன்னவா ர்த்தைகளை அவரிடங்கொடுத்ததினுல் சமயல் சாப்பாடு முதலானதுஞ் செய்கிறவிதங்களை யறிந்து வாரும்பெண்ணே சகிமார்களே.

தாதிகள்சொல்-விருத்தம்.

என்னதான்சொல்வமம்மா யேந்திழைக்காரியாரே
தன்னிலந்தனிலேமாந்தர் நளபாகமெனவேசொல்லும்
உன்னிதவுபாயமுந்தா னுயிர்ப்பிராணநாதன்செய்யும்
அன்னமுங்கறிபதார்த்த மமார்க்குமகப்படாதே.

சகிகள்-சமயல்செய்கிறவிதஞ்சொல்லல்-கண்ணிகள்.
இ-ம்-சஹானா-ஆதிதாளம்.

சொல்லுவோமம்மா அதிசயம் சொல்லுவோமம்மா
அல்லியங்குழல்மடவார்க்கதிபதியே யன்புடன்கேளம்மா
நானிலந்தன்னிலும் வானுலகத்திலும் நாங்களகண்டறியோமம்மா
ரதசாரதியஞ்செய்யுஞ் சமயல்விநோதமும் பதமாயிருக்குதம்மா
மாயமாயடுப்பெரியுது நெருப்பில்லை மகத்துவந்தன்னையம்மா
ஆயிரநாவுள்ள வாதிசேடனாலு மாகாதுரைக்கவம்மா
தண்ணீரில்லாதுலை பொங்கிப்பானையில் சாதங்கொதிக்குதம்மா
விண்ணோர்மேலோரவர்செய்யுஞ் சமயலை மெச்சுவார்களம்மா
காய்கறிவகையுஞ் சாதமும்பொரியலுங் கமகமென்றவாசம்
தாயேவிசுநாயகன்போலவே தானேதோன்றுமம்மா
தெய்வபிரசாதந்தனின் முதற்பாகந் தேவர்க்குநளபாகம்
மெய்பொய்யுங்கள் திருவுளமறியவும் வெகுசிரேஷ்டமம்மா
வேஷமாறியே விகுர்தரூபமாய் மெத்தவுங்கேவலமாய்-இந்தக்
காசினிதனிலே வாசஞ்செய்முழு கபடநாடகனம்மா
ஈசன்செயலால் ராசனனேந்திர னிவராகவேயிருந்தால்
ஆசையுடனுங்க ளிடம்வந்துசேர்ந்தா லதுவெங்கள்தவமம்மா
பாசமில்லார்போல ரோஷமிலார்போலப் பழமையறியார்போல்
பாகனைப்போல வந்திருப்பதுங்கள் பாக்கியந்தானம்மா.

தமயந்தி-விருத்தம்.

ஆறுதலடையாளங்க ளறிந்திட்டவம்மமாரே
சாரதிதன்பால்சென்று சாதமுங்கறிபதார்த்தம்
சீராய்க்கேட் டுவாங்கிச் சீக்கிரம்வந்தீரானல்
சீருயர்சகிமாரேயான் தின்றுபார்த்துரைசெய்வேனே.

(வ-ம்) அகோவாரும்பெண்ணே சகிமார்களே அவர்சமைக்கிற சாதமுங் கறிபதார்த்தங்களில் மெள்ளதந்திரமாகக் கொஞ்சங்கேட்டுவாங்கிவந்தீர்களேயானால் நான்போசனஞ்செய்துச் சொல்லுகிறேன் சகிமார்களே.

சகிசொல்-விருத்தம்.

ஐயாசாரதியேயெங்க ளரசியாந்தமயந்திப்பெண்
ணையகந்தன்னில்மூன்று வருஷபோஜனமுகித்தினை
செய்யாமல்மெலிவதாலே திருவுளமகிழ்ந்துவுந்தன்
கையமுதளித்தாலுண்டு களைதெளிந்துய்குவாளே.

(வ-ம்) அகோவாருங்களையா சாரதிசிரோஷ்டரோ எங்கள் ராஜாத்தியாள தமயந்தியம்மாள் தன்னிடநாயகன் பிரிந்துபோன நாள் முதலாய்கவலித்தினை அகபோஜனமில்லாமல் மெலிந்திருக்கிறாள் தேவரீர்வைபாகம் போற்செய்திருக்கிற சாதத்திற் கொஞ்சங் கொடுத்தீர்களானால்நாங்கள்கொண்டுபோய்க் கொடுப்போம் ஆகையால் கொஞ்சங்கொடுத்தால் மெத்த சகிர்தமுண்டாகுமையா சாரதியே.

சாரதிசொல்-விருத்தம்.

தாதிமாரோநீருங்கள் தமயந்திக்கதைசொல்வானேன்
சாதமார்கேட்பாரகிந் தருவதேதீதியாகும்
போதுமான துகொடுப்போம் புசித்துங்கள்பசியையாற்றிக்
காதலியேகீசிப்போ கடிநகர்க்கேகுவீரோ.

(வ-ம்) அகோ வாரும்பெண்ணே சகிமார்களே நீங்கள் என்னிடத்தில்வந்து தமயந்திக்குச்சாதம் வேணுமென்று கேட்கவந்தீர்களே சாதமென்று யார்கேட்கிறார்களோ அவர்களுக்கில்லையென்னுமற்சாதம் போடவேணுமென்று தருமசாஸ்திரமுறைபடி இதோவுங்களுக்குத் தேவையானசாதமுங் கறிபதார்த்தங்களுந் தருகிறேன் கொண்டுபோம் பெண்ணே சகிமார்களே.

சகிகள்சொல்-விருத்தம்.

பொறுமையில்மிருந்தவெங்கள் புண்ணியவதிபேதைக்கோர்ய்
சிறுமையாய்வந்திருக்குந்தேர்ப்பாகனிடம்போய்நாங்கள்
அருமையாய்ச்சாதங்கேட்டோமவரிதோதந்தார்நீங்க
ளொருமனதாகவுண்டு வுண்மையையறிகுவீரோ.

(வ-ம்) அகோ வாருங்களம்மா லோகபரமேஸ்பரிதங்களுத்தரப்படிக்கு அந்தசாரதி அண்டையிலேபோய் மெள்ள தந்திரவுபாயமாக சாதமுங்கறிபதார்த்தங்களும் வேண்டியமட்டும் வாங்கிவந்திருக்கிறோம்இதைப் புசித்து இளைப்பாருங்களம்மா தாயே.

தமயந்திசொல்-விருத்தம்.

அல்லவேதாதிமாரே யாகட்டும்நீங்களெந்தன்
செல்வனைக்கூடக்கூட்டிச் சென்றவர்முன்னேவிட்டால்
சொல்வதையறிந்துநீங்கள் சுருக்கினில்வந்துசேர்வீர்
இல்லையேல்புத்திரசோக மெந்தனுக்குண்டாய்செய்வீரே.

(வ-ம்) அகோ வாரும்பெண்ணே சகிமார்களே நீங்கள்வாங்கிவந்தசாதமுங் கறிபதார்த்தங்களும் என்பத்தாவாகிய நளராஜன் செய்த சாப்பாடேயல்லாமல் வேறல்ல ஆகிலும் இன்னமொருதரம் பிள்ளைகளைக்கூட்டிக்கொண்டுபோனால் அவர் அந்தப் பிள்ளைகளைக்கண்ட வுடனே புத்திரவாஞ்சை யிருப்பதும் இல்லாமலும் பார்த்துவந்து சொல்லும்பெண்ணே சகிமார்களே.

சகிகள்-பாலரைக்கூட்டிவருதல்-தரு-இ-ம்

சங்கராபரணம்-ஆதிதாளம்.

பாலரையழைத்துவந்தாரே-சாரதியிடம்
பாலரையழைத்துவந்தாரே
ஞாலமெங்கும்புகழ் நளராஜன்வனவாசஞ்செல்ல
சீலமிகும்வீமனல்ல செல்விதமயந்திசொல்ல (பால)

வாலவயனிற் பிரிந்தே-தந்தைதனைவிட்டு
வந்துதாரையிடமிருந்தே
காலங்கழித்திடவந்த கலிசெய்கபடத்தாலிந்த
கோலமாயிருக்கும்விந்தை கொற்றவனிடத்திற்சொந்தப் (பால)

மாயச்சூதாடிக் கெடுத்தே-நாடுநகரும்
மனைவியையுங்காட்டில் விடுத்தே
போய்வனத்தில்வேஷமாறிப் புரவலர்க்காளாகத்தேடி
சேயிருமமனம் வேசாறித்திரியுறுமென்றுகூறி. (பால)

சாரதி-பிள்ளைகளைக்கண்டு-புலம்பல்-கண்ணிகள்.

இ-ம்-பிலஹரி-திரிபுடை-தாளம்.

ஆதிகேசவஅச்சுதானந்தகோவிந்த நாரணனே-இந்த
அல்லலுக்கெல்லாநாளுமாகப்பிறந்தேனே நாரணனே
பூதலந்தனிற்பல புருஷகொலைபுரிந்தேனோ நாரணனே-பூர்வ
புண்ணியமோவிந்தப்புதுமையெல்லாம்பார்க்க நாரணனே
ஏனக்குஇந்தவுடலை யெடுத்தே-னெடுத்தேனரி வாசுதேவா-நான்
இந்தக்கண்காட்சிக்கோ இருந்தேனிருந்தேனரி வாசுதேவா
காதல்மனைவியுமிந்தவாதனைப்பட அரி வாசுதேவா-செய்த
தருமவசமோவிதிவசமோவென்றானே வாசுதேவா

வேலைத்துரும்பதுபோல் மெலிபுதேமனைதயாவேணுகோபாலன்னை
விட்டகுறைமயோவிந்த வேஷமாகிதேனையா வேணுகோ
பாலராசலையனீக்கப் படுவதில்லையோஅரி வேணுகோபா கொண்ட
பாவலையைப்பிரிந்திடலாவதுன் செயல் வேணுகோபா
மன்னராகப்பிறந்து வாழ்ந்ததும்போதும்போதும் மாதவனே இந்த
வாருகவேயுயிர் வைத்திருந்தவருண்டோ மாதவனே
பொன்பொருளாளாகி புத்திரரையும்விட்டேன் மாதவனே இந்த
பிள்ளைகையிற்கொடுக்கப் பொருளொன்றுமில்லையேமாதவனே (ஆதி)

பிள்ளையைப்பார்த்து ராஜன் சொல்-விருத்தம்

அப்பாவென் சுவாமியையா யார்பெற்றபாலர்நீங்கள்
கட்டாகவென்முன் வந்தீர் நமக்கொருசாந்தமுண்டோ
ஒப்பாகுமுங்களைப்போ லுண்டென்றன் குழந்தையேக்கம்
இப்போதுதீர்ந்துங்க விருப்பிடமேகுவீரே.

(வ-ம்) ஆகோவாரும் எனதிரு கண்மணியான செல்வ மைந்தர்களே நீங்க ளார்பெற்றபாலர்களோ உங்களைப்போலஎனக் கிரண்டுகுழந்தைகளிருந்தது அதுகளை விட்டுப்பிரிந்து அநேகநாளாச்சுது இதென்னசென்மம நம்முடையவயிறு பெரிதென்றுபிசாசபெண்சாதியையும்விட்டுவிட்டு இதுபர்ணராஜனிடத்தில் ஏவல்செய்துக் கொண்டிருக்க பிரமதேவன் தலையிலெழுதினுனே உங்களைக்கண்டவுடன் பிள்ளைகள் ஞாபகம் வந்து அநேகவிதனமடைந்து உங்களைக் கண்டமாத்திரம்மறுபடியுஞ்சந்தோஷமாகினேன் இப்போது ஏதாவது உங்களுக்குக்கொடுப்போமென்றால் என்கையிலொன்றுமில்லையேபோய்வருங்களப்பாமைந்தர்களே.

சகிகள்-இராஜனைத்தற்சித்தல்-கண்ணிகள்

இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

என்னகாணுமுமக்கித்தனை துயரங்கள்
எங்கள்குழந்தையைக் கண்டேதுகாணும்
கள்ளியரோவெனக்குப் பிள்ளைகளிரண்டுண்டு
கண்டுவெகுநாளாச்சே பெண்ணரசே
தமயந்திநளராஜன் சரியனிடுக்கத்தினால்
தான்வாந்தார்வனவாசமேவிர்வந்தேனையா
சமையல்செய்யவும் சாதஞ்செய்யவும்
தலைவிதியிருக்கையில் தவறிடுமோபெண்ணே
மனையில்லாமலிந்தப் படிக்கெங்களரசனும்
மக்களைவிட்டுவெயிலுவளர்க்கச்சென்றானையா

ஈனந்தாளொருவ ரிடத்திற்சேவகமாக
இருப்பதுமிகவுந்தான் ஏந்திழையேபெண்ணே
தந்திரமாகச்சென்ற நளனிவரவாவிடில்
தமயந்திபிழையாள்காண் சாரதியேஐயையா
இந்தப்பிரதாபதனை யென்னிடத்தினிற்சொன்னால்
எனக்கென்னதெரியுங்காணேந்திழையேபெண்ணே.

தாதிகள்-தமயந்திக்குச்சொல்-விருத்த

அன்னையர்க்கதிகமான வம்மாளேசரணர்தாங்கள்
சொன்னசொற்படிக்குவுங்கள் சுதனையுமெதிரேவிட்டு
பன்னியேஓடிவந்து பார்க்குமுன்பாலர்தம்மைத்
தன்னிடமார்பிற்சேர்த்துத் தழுவியேயனுப்பினரோ.

(வ-ம்) அகோகேளுமம்மாராஜபரமேஸ்பரிதங்கள்திருவாய்மொழிப்படியே பிள்ளைகளையழைத்துக்கொண்டு அவர்முன்பாகப்போகிறபோது அதற்குமுன்னதாகஓடிவந்து பிள்ளைகளைக்கண்டு வாரியெடுத்து உச்சியைமோந்து அழுதுபுலம்பி அப்பா வுங்களுக்குக் கொடுக்க என்னகையிலொன்றுமில்லையேபோய்வாருங்களென்று அனுப்ப அப்போதுநாங்கள் வணமதித்து எங்கள் பிள்ளையைக்கண்டு அழவேண்டியகாரணமென்னவென்றுகேட்க அவரதற்கிடங்கொடாமல் எனக்கிரண்டுபிள்ளைகளுண்டு அதைவிட்டுவந்து அனேகநாளாச்சுதென்றுசொல்லி அவர்ஒப்பாமல் வெறுப்பாகப்பேசினாரம்மாதாயே.

தமயந்திவீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

தந்திரமாகவந்த சாரதிவாலாறெல்லாஞ்
சுந்தரமானதாதி சோதனைபார்க்கவெந்தன்
மைந்தனையவர்க்குக்காட்ட மனமெலிந்தழுதாரிப்போ
எந்தனாயகனோபார்ப்போமிவ்விடமழைத்திடீரோ.

(வ-ம்) அகோசரணஞ்சரணமையா சுவாமிஎனதுதந்தையாகிய வீமராஜனே நம்முடையதாதிகள்குதிரைலாயத்தில் வந்திருக்கிறசாரதியிடத்திற்போய் அவர்குறிகுணமும்சமயல்சாப்பாடுவிதமும் புத்ரவாஞ்சையுமிருக்கிறதாகநமக்குத் தெரிவித் திருக்கிறார்கள்மேலும்நான் என் கண்ணாலேபார்க்கவேண்டியபடியினால் அவனைநம்முடஅரண்மனைக்குவரும்படி ரிதுபர்னராஜனுக்குஅறிவித் தழைப்பிக்கவேணுமையா

வீமராஜன்-விருத்தம்.

சந்ததந்தருமநீதி தவறிடாச்சொரூபசீல
சுந்தரமிகுமயோத்தி ஆர்தாரவுமதுபக்கல்

வந்தசாரதியைப்பார்க்க வாஞ்சையாயிருப்பதாலே
வந்தனைச்சமுகத்தன்னி லிங்ஙனமனுப்புவீரோ.

(வ-ம்) அகோகேளுமையா அயோத்தியாபுரியை யாளுமிருதுபர்ணமகாராஜனே உமதுரதசாரத்யஞ்செய்துவந்திருக்கிறசாரதியைப்பார்க்கமெத்தவும் அபேக்ஷையாயிருக்கிறது நம்மிடசமூகத்திற்கு அனுப்பிவைக்கவேணும் மகாராஜனே.

இருதுபர்ணன் சாரதிக்குச்சொல்-விருத்தம்.

செகமெலாம்புகழுமெந்தன் தேர்ப்பாகவாகேளுன்னை
மகிபதிவீமராசன் வரவழைத்திருப்பதாலே
அகமகிழ்ந்துறைவையாம லவர்முகத்திற்சென்று
சுகமுடன்கண்டுபேசித் துரிதமாய்வருகுவாயே.

(வ-ம்) அகோவாரும்பிள்ளாய்சாரதியே வீமராசனானவர் நீர் சாரத்யஞ்செய்து வந்ததின்பேரில்உன்னைப்பார்க்கவேணுமென்றவரும்படி நமக்குத்தெரிவித்திருக்கிறார் ஆகையால் நீபோய் அவரைக்கண்டுபேசி சடுதியில் வந்துசேரும்பிள்ளாய் சாரதியே.

சாரதி வீமராசனுக்குச்சொல்-விருத்தம்.

தேகத்திற்கழலைப்புண்கள் சிரங்குசீயொழுகுமென்னை
லோகத்தார்பழிக்கும்பாவி துன்னையனைப்பொருட்டாயெண்ணித்
தாகமாயழைத்தவாறு தார்வேந்தேயுரைத்தால்நீயும்
பாகவனதிந்தமாற்றம் பகர்ந்துயானேகுவேனே.

(வ-ம்) அகோ சரணஞ் சரணமையா சுவாமி வீமராஜனே உலகத்தோர் என்னிடத்தில் நெருங்கிப்பேச அசங்கிதப்படும்படியான என்னைத்தேவரீர் ஒரு பெரிதாயெண்ணி என்னை யழைப்பித்தகாரியம் அருளிச்செய்யவேணுமையாசுவாமி.

வீமராஜன்-விருத்தம்.

பாரெலாங்கீர்த்திபெற்ற பாகவசிரேட்டரோகேள்
தேர்நடத்துவதில்மிக்க திறமையுள்ளவரென்றார்கள்
வாருஞ்சிம்மாசனத்தில் மனமகிழ்ந்திருந்தெனக்குத்
தெளிதலானவார்த்தை செப்புவீர்செப்புவீரோ.

(வ-ம்) அகோவாருமையா பாகவசிரேஷ்டரே இவ்வுலகத்தில் ரதசாரத்யஞ்செய்ய சாமார்த்தியமுள்ளவராரென்றால்-என்னுடைய மருமகனை நளராஜனைத்தவிர மற்றொருவரையுங் கண்டதுமில்லை கேட்டதுமில்லை ஆகிலும் அவருக்கு மேலான சாமார்த்தியமுள்ளவரென்று உம்மைச்சொல்லுகிறார்கள் ஆகையால் எனக்குமிகவும் அதிகப்பிரீதியுண்டாயிற்று என்னுடையசிம்மாசனத்தின்பேரில்உட்காரும்நாமிருவரும் சக்

தோஷமான வார்த்தைகளைப்பேசிக்கொண் டிருப்போமையாசாரதி சி
ரேஷ்டரே.

சாரதிசொல், கண்ணிகள்-இ-ம்-காம்போதி-ஏகதாளம்

சிம்மாசனக்கொலுக்கத்தகாது தேரோட்டுஞ்சாரதிநான்
உம்முடன்சரியானராஜனோமருகனோ சம்மந்தியோசுவாமி
உம்மிடபெண்தனக்கே சுயமாவோலைவந்ததினாலே
எம்மிடராஜன்பின்னே யிதபாகவனுக்கிதுதகுமோசுவாமி
எங்கள்தன்ராஜாவும் மந்திரிதுணையில்லாமலேயொண்டியாய்ச்
சங்கையால்வீற்றிருப்பாரே யான்போகவே தான்விடைதாருமையா
மங்களகரமென்ன அதிவேகமாகவந்ததினாலே
அங்கம்வேசாறிய தாலெனக்குத்தரவது செய்வீர்வாரனையா
ஈதென்னகாரணங்கா ணென்னையிந்தபாக்கியசாலி
வாதைப்பட்டழுது விழுந்துபுலம்பிடும்வாறென் றுமறியேனையா
ஏதென்தவக்குறையோ அரிகரி எந்தன்விதிதானோ
போதும்போதுமையாஇந்தவன்மங்கல்ல போகவிடைதருவீர்.

வீமராஜன்-விருத்தம்.

ஞூழியதிர்துளாத்தபாகன் சொற்றவையான்றுவென்று
தெரிந்துமே வீமராஜன் ஜெயநளனிருகைத்தாங்கி
அருமையாம்பேரர்தன்னை யவர்மடிதன்னில்வைத்து
ஒருமையாய்த்தமதுபெண்ணோ ருடனழுதனைசெவாயே.

வீமராசன்புலம்பல்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.
ஐயனேநளராசேந்திரா யானுமுமைவரவழைக்கச்
செய்தவுபாயந்தானிது தெய்வமதுசாட்சியாக
வையகமுழுதுஞ்சேடி மன்னன்ரிதுபர்ணனிடம்
மெய்க்கருதியேவல்செய்த விசமுமிகத்தெரிந்தோம்
இந்தவெத்தினங்கள்செய்தே யிவ்விடத்திலழைப்பித்தோம்
சந்தேகமாய்நினைந்தீரோ சமமதிப்பாளோயிஸ்தேவி
உந்தன்மேற்கோபமையாமலென்மகளைச்சேர்ந்துவாழ்வீர்
மைந்தர்முகம்பாருமையா மனதறியாவர்மமுண்டோ. (ஐய

சாரதிசொல்-விருத்தம்.

குலம்புகழுநல்ல பிள்ளையைப்பெற்றபேர்கள்
காதலால்மிகுந்தகீர்த்தி களிப்புறுவிகட்சிதோன்றும்
தீயர்மக்களாலுல் செகத்தினில்வசையுண்டாகும்
ஈதெந்தவிடத்திற்சொன்னு னியாதொன்றுமறிகிலேனே,

(வ-ம்) அநேகோசரணஞ் சரணமையாசுவாமி உலகத்திலேநல்லபிள்ளைப்பெற்றவர்களுக்கு கீர்த்தியுண்டாகும் கெடிதியாயிருக்கிறபிள்ளைகளைப்பெற்றவர்களுக்கு அபகீர்த்தி யுண்டாகும். ஆகையால் ருதுபர்ண ராஜாவுக்கு ஊழியஞ்செய்யப் பட்டவன் கேவலமாகியஎன்னைநளனென்று பாவித்து எண்ணிப்பேசுவதுதருமமல்ல இப்பேர்ப்பட்டபாக்கியவதியைப்பெற்ற வுமக்கு என்னகுறைச்சல் அந்த நளராஜாவானவர்தான் என்ன அவருக்கதிகமான ரிதுபர்ன ராஜாவை வரவழைத்திருக்கிறீர் அவருக்கேமருகலியாணஞ்செய்துவையும்எங்கள் ராஜன் தனியேயிருப்பார் நான்போய் வருகிறேனையா சுவாமி.

தமயந்தி-சாரதிக்குச்சொல்-விருத்தம்.

வல்லமைகூறுமெக்தன் மன்னவாசுவாமிநாதா
சொல்கிறமொழியைக்கேட்சத் துடிக்குதேயெந்தனுளவி
வெல்லுவோர்பொய்வழக்கை மெய்ப்போலபேசுவார்கள்
பொல்லாதபாவியன்றே புறக்கூறத்துணிந்தீரையா.

தமயந்திசொல்-கண்ணிகள் -இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்.

என்னவார்த்தைசொல்லத்துணிந்தீர்-பிராணநாதனே
இதுதகுமோநீரொன்னே

கன்னியெந்தனை யாதொன்றெண்ணியே
கட்டமாயுரைத்தீர் கதைமிகவேவிரித்தீர்
பொன்னும்பொருளும் பூமியென்னையும்
பிள்ளையையும்பிரிந்தீ ரிந்தவேஷமாயிருந்தீர்
மன்னன்ரிதுபர்ணன் வாராவிட்டாலிங்கு
வருவீரோசாமிவந்தும் அறியீரோசுவாமி
பெண்டிரைவிட்டிந்த மண்டலஞ்சுதந்திப்
புரிந்திருப்பாருமுண்டோ தாங்கள்பேசுவதும்நன்றோ
கொண்ட புருஷனும் மொண்டகஞ்செய்திடக்
கோதையென்செய்வாளோ தேவர்க்காமொல்லுவாளோ
சண்டாளியென்னைக்கைவிடச்
சம்மதித்தாயோஎன் துணையே தர்மமாமோவின்றுனையே

பொது-விருத்தம்.

வந்தசுயம்பாகியிடம் கொடாமற்செல்ல
மன்னனேன்றனைத்தே வாராபிம்போது
மெ

கந்தமலர்க்குழலி தமயந்திமாது
கணவனுருமாறியுமெய்க் கருத்தறும்வாடிச்
சிந்தையனல்பெருகெனவே சிதறிச்சோபந்
தீராமலொருவகையாய்த் துன்பமெய்திச்
சுந்தரமாயிருந்ததிரு முகமபேதித்துத்
துயரமுற்றுகோபமுடன் சொல்லுவாளே

சாரதிதமயந்தியைப்பார்த்து-கோபமாய்ச்சொல்-தரு.

இ-ப-புன்னாகவராளி-அடதாளம்.

என்னைக்கண்டழுவதேது-பெண்ணே
என்னைக்கண்டழுவதேது
இதற்குமுன்னேநடந்ததுண்டோவதையோது
உன்மனக்குறையெல்லாந்தீர-இன்றே
உன்றந்தையுந்தனுக் கேசபமீற
மன்னன்ரிதுபர்ணக்கோலைபெண்ணே-தீட்டி
மறுகலியாணமென் றனுப்பினத்தாலே
இன்னம்விசாரமென்னமானே-இது
சொன்னேனுன்றந்தையர்க்கேர்க்காதுதானே (என்னைக்)

நளராஜன்சொல்-விருத்தம்.

நளனெனவேயென்னாதே நற்றமயந்திமாதே
அழகுமாப்பிள்ளையாம்வீம னழைப்பித்தார்நளனுக்கொப்பாய்
வளர்மதிமுகத்தினாளே மறுகலியாணஞ்செய்து
வுளமகிழ்ந்திருக்கலாமே வுனக்குண்டோகிலேசந்தானே.

(வ-ம்) அகோவாராய் பெண்ணே தமயந்தி என்னையுன் புருஷனென்று நினைத்து மிகவும் வருத்தப்படுகிறாய் இதோ வுன்தகப்பனாராகிய வீமராஜன் நளனுக்குமேலானநாயகனையழைத்துஉனக்குமறுகலியாணஞ் செய்யப்போகிறார் இனிமேலுனக்குக்கிலேசம் வேண்டியதென்ன சொல்லும்பெண்ணே தமயந்தி.

தமயந்திசொல்-விருத்தம்.

அன்னியர்போலவென்னை யகற்றிநீர்பேசலாமோ
உன்னையிங்கழைக்கவிந்த வுபாயஞ்செய்தேனென்சுவாமி
என்னிடப்புடைவைபாதி யிடையினிலிருக்குதேதான்
மன்னவாபோதும்போது மகிழ்ந்தெனையாளுவாயே

தமயந்திக்கும்-நளனுக்கும்-தர்க்கம்-தரு.

இ-ம-துஜாவந்தி-ஆதிதாளம்.

சொல்வதுவுசிதமாமோ என்சுவாமியே-நீர்
சொல்வதுவுசிதமாமோ

நல்லவர்பெரியோரிந்த நானிலந்தன்னிலெழுந்த
வல்லவராலுஞ்சொந்த மனையவள்கண்ணீர்சிந்த (சொல்வ)

வெல்வதுவெகுகடினமே-மெல்லியாசொல்லை
வெல்வதுவெகுகடினமே
வல்லமைமிகுந்தகாலன் வார்த்தையறியாதபாலன்
சொல்லைநம்பலாம்பிரபஞ்சம் தோகையர்மனதுவஞ்சம் (வெல்)

சாலத்தெரியாதவரோ-என்சாமிநீ
காலமறியா தவரோ
ஆலகாலவிடம்போலே யாரபாரித்தீரென்மேலே
ஞாலந்தனிலேயும்மாலே நான்வனம்வந்ததினாலே (சொல்வது)

சொந்தமனைவியைப்போலே-பழமைத் துயர்
சொல்லுகிறாய்நீமென்மேலே
தொந்தமினியொருக்காலே தோகையர்பொருந்தும்போலே
எந்தனைக்கண்டிருக்காலே இக்ஷணஞ்சொல்லுவதாலே (வெல்வ)

புத்திரவாஞ்சையையும்விட்டேன்-புண்யபுருஷா
மெத்தவுன்னால்பாடு பட்டேன்
குத்தமெனச்சொல்லலாமோ க்ஷத்திரியபெண்பாவம்போமோ
சித்தமுங்கலங்கலாமோ செத்தபின்னுயிர்வருமோ (சொல்வது)

கொண்ட புருஷனுநல்லவே-தேறுதலையாய்க்
குளுந்தவசனங்கள்சொல்லவே
மண்டலத்தினினிமேல்வரும மறுமுகூர்த்தஞ்செய்யும்பேரும்
பெண்டுகட்கில்லையோவாரும் பிறபுருஷனைபேரும் (வெல்வ)

நித்திரையும்வருகுதில்லையே-யுந்தனைப்போலே
நீலகண்டனுரு மில்லையே
சத்தியமொழிந்தசொல்லைத் தானுமறந்தாரோதொல்லை
மெத்தவந்ததினால்சல்லை வேண்டாதவர்சொல்லுஞ்சொல்லை.

பெண்ணேனவுனக்கென்ன கிலேசம்-மறுபுருஷன்
பிரியமாய்வைத்தாரோ நேசம்
பின்னும்புருஷன்மேற்பாசம் பேதையேவைபாதேநேசம்
அன்னியர்மேல்விசுவாசம் ஆகுதேசெய்தமோசம் (வெ)

தமயந்திசொல்-விருத்தம்.

என்னிடமனதிருந்த விஷயகாரணங்கேளீர்
தன்மனதினிலேவேறு சமசியமெண்ணவேண்டாம்
சின்னயமாகவிப்போ நெருப்பினில்மூழ்கிவாரேன்
பன்னகசயனபாத பங்கயமறியத்தானே.

(வ-ம்) அகோ சரணுகு சரணமையாசுவாமி தேவரீர் என்னுடைய மனதை யறிந்திருந்தும் இப்படிக்குச்சொல்வது நியாயமல்ல அப்படிக் குமறு கலியாணஞ்செய்ய நானெத்தனித்தால் ஆகாயவாணி பூமிதேவி யறியார்களா இரண்டாவது சுயமரம்நாட்டி யிருக்குதாபாரும் சகலதேசத்து ராஜாக்கள் வந்திருக்கிறார்களோ சொல்லும்நீ ரிதுபர்ணராஜாவினிடமா யேவற்பணிவிடை செய்துக்கொண்டிருக்கிறது தெரிந்து உம்மை இவடத்துக்கழைக்க வேண்டியகாரணமா யழைத்தே னேயல்லவேறல்ல மனதிலொன்று வாக்கிலொன்று நினைத்திருந்தது தங்களுக்குச் சந்தேகமிருந்தால் முப்பத்து முக்கோடி தேவர்க்கும் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி பாதசாட்சியாக இந்த அக்கினியில் மூழ்கியெழுந்து வருகிறேன் பிற்பாடாகிலும் தேவரீர் கிருபைவைத்து என்னை இரட்சிக்கவேணுமையா சுவாமி.

தேவர்கள்வருகிற-பொதுவிருத்தம்.

தந்தையுடன்றமயந்தி மயிலாள்தானும்
　　தனையனொடுநளராஜன்றனில்வீழ்க்கச்
சந்திரனையனையமுகவதனந்தோர்ந்து
　　தாமரையினிலேநீர்போற்றயங்கும்போது
இந்திரனுந்திராணிபிற்மதேவன்வாணி
　　யிலக்குமிநாரணனாளேஸ்பரியுந்தேவர்
வந்துவாகனநடராகவானில்
　　மகிழ்ந்துநளன்றன்னைக்கண்டுவசனித்தாரே.

(வ-ம்) அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரம் தமயந்தியானவள் குதிரைலாயத்திலிருந்த சாரதியைவரவழைத்து வுற்றுப்பார்த்துத் தன்னுடைய வஸ்திர அடையாளத்தையுங் கண்டுபிடித்து கணபுருஷனென்று நிச்சயித்து அநேகவிதமாக ராஜனைப்போக விடாமல் மடியைப் பிடித்துக்கொண்டு ஒருவருக்கொருவர்சம்மந்தா சம்மந்தமில்லாமல் இடங்கொடாமல் நளராஜன் திடச்சித்தனாயிருக்கிறதைத்தமயந்தி பார்த்து ஓப்பிராணநாதா நான் மறுகலியாணஞ்செய்ய எத்தனித்ததல்ல உம்மையழைக்க இந்தயோசனை செய்ததல்லாமல் வேறல்ல அப்படிக்குச் சந்தேகமிருந்தால் இந்தஅக்கினிக்குழியில் மூழ்கியெழுந்து வருகிறேனென்று அக்கினியில்மூழ்கி நீந்திவிளையாடி வருகையில் அப்போது முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீசுவரர்களும் ஆகாயவாணி பூமிதேவியும் திருமூர்த்திகளும் அவரவர்களேறுகிறவாகனங்களின்மேலேறிக்கொண்டு ஆகாயமார்க்கமாய்வந்து நளராஜனுக்கு சமாதானஞ்செய்யவருகிற விதங்காண்க.

### தேவர்கள்வருகிற-தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

கங்காதரனும்வந்தார்-கயிலைவாழும்
கங்காதரனும்வந்தார்
பங்கயத்திருமாலும் பார்பதிதேவியும்
ஐங்கரக்குரிசிலு மறுமுகனுருடன் (கங்காதரனும்)

இந்திராதிதேவர்வர ரிஷிமுனி வொழுங்குகலாகுதர
சந்திராதித்தர்தொழ அஷ்டவசுக்கள் தருமதேவதைகள்சூழ
சுந்தரத்தும்புரு நாதருர்வசிந்
தோணகமேனகைரம்பைதிலோர்த்தமைநடனமாடக் (கங்கா)

ஆகாயவாணியுடன்வயிரவனு மையனொடுளகேசனும்
ஏகாதசிருத்ராளும் பூதகணங்க ளியனைபாகவதாளும
போகபூமியருமேகாதிபரும
புலிபதஞ்சலியுடன் புகிதரிஷபருடன். (கங்கா)

### தேவர்களை-ராஜனும்-மனைவியும்-தோத்திரஞ்செய்-தரு

### இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

அாகரசிவசங் கரநாராயணஅம்பிகைநாதா சிவசரணம்
சிவ சம்போ சங்கரா சிவசரணம்
பாமரகசியா பக்தப ரக்ஷகா
பாலலோசனு சிவசரணம்திரு சூலபாணியேசிவசரணம்
நவநாயகர்துதி நாதா நீதா
நடனப்பொற்பாதா சிவசரணம்-லோக
நாயகிநாதா சிவசரணம் பவசாகரபாசாடவிநாசா
பஞ்சன தீக்ஷா சிவசரணம்கடல்நஞ்சையுண்டவாசிவசரணம்

### இராஜன்சொல்-விருத்தம்.

சிவசிவசிவனேபோற்றி செந்திருமாலேபோற்றி
பவமறுத்தாண்ட ளிக்கும் பக்தரக்ஷகனேபோற்றி
நமனுதிசித்தர்போற்றும் நம்பனேயன்பர்வாழ்வே
அவமறுத்தாள்வாயெங்க ளாண்டவாபோற்றிபோற்றி.

### வசனம்.

கோசரணஞ் சரணமையாசுவாமி முப்பத்துமுக்கோடிதேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம்ரிஷி ஈசுரான் கின்னரகிம்புருடர்சித்தவித்யாதரர் தும்புருநாரதர் இந்த அண்டபிண்ட சராசரங்களி லிருக்கப்பட்ட சீவம் புகடையானைமுதல் எண்பத்துநான்குலக்ஷ சீவராசிகளுக்கெல்லாம் தேவராயிருக்கப்பட்ட திரிமூர்த்திகளே சரணஞ் சரணமையாசுவாமி.

### தேவர்கள்சொல்-விருத்தம்.

தருமமேசொரூபமான சத்யவாசகநேளந்திரா
பாதவப்படவேவேண்டாம் பத்தினியுன்றன்றேவி

ஒருகுறையுங்கட்டில்லை யுலகெலாம்நீயேயாள்வாய்
கரியங்கார்க்கோடன்செய்த காரணமகலுந்தானே.

(வ-ம்) அகோ வாரும்பிள்ளாய் சத்தியந்தப்பாத நளமகாராஜாவே நீர் சுகமாக விருப்பாய் உன்தேவியாகிய தமயந்தியின்பேரில் ஒருஅணுவளவாகிலும் நீர்சம்சயம் எண்ணத்தகாது இந்தப்பதிவிரதையான பத்தினியும் நீயும் உன்பிள்ளைகளுங் கூடிவாழ்ந்துக் கொண்டிரும் இதோ கார்க்கோடகன் தன்விருபத்தை வாங்கவந்திருக்கிறார் ஆனதால் உம்முடைய நிசரூபத்தைவெளிப்படுத்தி எப்போதும் போலே அரசாட்சிசெய்துக்கொண்டிருந்து அந்தியகாலவேளையில் நம்மிடபதவிவந்துசேரும்பிள்ளாய் நளராசனே.

சனீச்சரன்சொல்-விருத்தம்.

சத்யவாசகமென்னாளுந் தவறுதலிடதபூபா
இத்தனைநாளுமுன்னை யிடுக்கண்கள்மிகவேசெய்தேன்
சித்தமுமகிழ்ந்துவுன்றன் செல்வருந்தேவியோடும்
சத்தமுஞ்சூழவாழ்ந்து சுகித்தரசாளுவாயே.

(வ-ம்) அகோவாரும் பிள்ளாய் நளராஜனே அந்தத்தமயந்தியை நான் கலியாணஞ்செய்யவேணுமென்று எண்ணியிருந்தேன் நீர்வந்துகலியாணஞ் செய்தபடியால் உன்னைப்படாத பாடெல்லாம் படுத்திவைக்க வேணுமென்று உம்மண்டையில் பனிரெண்டுவருஷங் காத்திருந்தேன் இந்தப்பனிரெண்டு வருஷமாய் உம்மிடத்தில் அணுவேனுமதற்கு எதுவில்லாமலிருந்துவிட்டது ஆகிலும்நான் நினைத்தபிரதிக்கினை நிறைவேற வேணுமானதால் உம்மிட குதிக்காலில் ஒரு எள்ளுமுனை நனையாமலிருந்துவிட்டது அதின்வழியாக உன்னுடலிற் கலந்துயுத்திகளைப் பேதவித்து இவ்வளவு அலங்கோலஞ் செய்துவிட்டேன் நீர் எவ்வளவிலும் தருமமேஜெயமென்றுநம்பி யிருந்தபடியால் உன்பேரிலும் மறுபடியுஞ் சந்தோஷம் வந்துவிட்டது ஆகையினாலே நீரிந்தக்ஷணமேஉம்மிட பூர்வரூபத்தைப்பெற்று உன்பெண்சாதிபிள்ளைகளுடன் கலந்து அந்தப்புட்கராஜனிடத்திற் போய்மறுசூதாடி உம்மிடராச்சியமெல்லாவற்றைக் கொண்டு முன்போல்பதின் மடங்கதிகமாய் ராச்சியபரிபாலனஞ்செய்துகொண்டு சுகமாயிரும்பிள்ளாய் நளராஜனே.

கார்க்கோடகன்-விருத்தம்.

கடல்நஞ்சையுண்டவீசன் கலங்கிடச்செய்ததேவன்
மடமங்கைமீதிற்கொண்ட மையலாலீந்தவாதை
உடன்கொண்டாய்நளாநின்சேர்ந்திராவுன்னுடல்முன்போலாகும்
விடங்கொண்டசனியன் தோர்த்தானென்மேலுங்கீர்த்தியாமே.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் நளராஜனே திரிமூர்த்திகளைப் பங்கப்படுத்தினவத்த சனியீசுரபகவான் அந்தத்தமயந்திபேரில்வைத்த ஆசையினால் உம்மை இவ்வளவுபடாதபாடுகளெல்லாம படுத்தினவதனால் அவன்பேரில் நீர் ஆயாசப்படவேண்டாம்உம்மிடசத்யாசத்தியமானது சாத்தியமேசனீசுரபகவானை நடுக்கும்படியாகச் செய்துவிட்டது அந்தசனியீசுரபகவான்பயந்து எங்கேசாபங்கொடுக்கிறாரோவென்று எண்ணங்கொண்டிருக்கிறார்நான்முன்னமே என்விஷத்தினாலேயிருந்தரூபம் வரும்படிசெய்திருந்ததை இதோநான்வாங்கிக்கொண்டு உம்மிட பூர்வரூபத்தைத் தந்துவிட்டேன் நீயும்உன்பெண்சாதி பிள்ளைகளுங்கூடிவாழ்ந்து ஏகச்சக்கிராதிபதியாயிருந்து அரசாட்சி செய்துக்கொண்டுகடைசியில் அரியினிடபாதாரவிந்தகமலங்களிலே வந்து சேரும்பிள்ளாய் ராசனே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் தமயந்தியும் நளராஜனுந் தர்க்கஞ்செய்து அக்கினியில் தமயந்திமூழ்கியெழுந்துவர அப்போது முப்பத்துமுக்கோடிதேவர்களும்வந்து சமாதானஞ் செய்துகார்க்கோடனால்முன் பூருவரூபத்தைப்பெற்றுக்கொள்ளபிறகு சகலதேவதைகளும் அவரவரிடங்களுக்குச்செல்ல அதின்பிறகுசகலராஜாக்களும்தமயந்தியும் வீமராஜனும்பிள்ளைகளும் தபஸியும்வந்து இடம்புரிவலம்புரியாக நளராஜனுக்குச் சரணமடைந்துநிற்க அப்போது அயோத்தியையாளப்பட்ட ரிதுபர்ணராஜன் இந்தச்செய்திகளையெல்லாங்கேட்டு திடுக்கிட்டுப்பயந்துநடுநடுங்கி ஏவற்பணிவிடைகளைச்செய்ச்சொன்னேனேயென்று நளராஜனண்டைவந்துகாலில்விழுந்து அழுதுபுலம்பிநான்செய்தஅபசாரத்தையெல்லாம்பொறுத்துநான் மனமறியாமற்செய்தபிழையைப் பொறுக்கவேணுமென்றுமிகவுந்துதித்துச் சரணஞ்செய்கிறவிதமெப்படியென்றால்.

பொது-விருத்தம்.

தேயவிராசருநளனைக்கண்டுசென்றார்
　　தீண்டியகார்க்கோடகன்றன்னுருவமாற்ற
மாயமாய்வந்துநின்று தன்ரூபத்தை
　　வாங்கிக்கொண்டேகியபின் னளராஜேந்திரன்
ராஜரூபத்துடனே விளங்கக்கண்டு
　　நாயகியும்பணிந்து மகிழ்ந்திருக்கிலிற்க
ஆக்ஞைசெய்த ரிதுபர்ணன் வந்து
　　அடிபணிந்துவணங்கியுற வாடுவானே.

நளராசனைரிதுபர்ணராசன்தோத்திரஞ்செய்கிற-கண்ணிகள்

இ-ம்-மோகனம்-திரிபுடைதாளம்.

சரணஞ்சரணமையா நளராஜேந்திர
 தயாநிதியேசரணம்
வருணமாதினைதா னறியாமலுனைமவேலை
 வாங்கினேனேமன்னவா
அறிந்துதேவரீரை யலுவல்செய்யச்சொல்லவும்
 ஆகுமோ.ஆண்டவனே
தெரிந்துசெய்தாலந்தத் தோஷமனுபவிப்பேன்
 தேவரீர்பொறுத்தருள்வீர்
வருந்தியென்மனமெத்த நோகுதேயென் செய்வேன்
 மன்னர்க்குமன்னர்கோவே-யிது
பொருந்துமோவுலகோர்க்கு மதித்தவஞ்சனையல்ல
 பொறுத்தருளுமையனே.

ரிதுபர்ணன்-விருத்தம்.

விக்ரமவிதரகூதனீக வேந்தர்கட்கரசேலோக
சக்ரவர்த்திக்குண்மிகத்தலைவனேநிடதர்கோவே
இக்கருத்துடனிவ்வேஷ மெடுத்தென்னைசோதித்தாய்
அக்கண வந்தேதன்னை அருள்செய்வீரசனந்தானே

நளராசன்-விருத்தம்.

நம்மைவைத்தாதரித்த ராஜனேரிதுபர்ணேந்திர
உம்மிடபேரிற்குற்ற மொருதினையளவுமில்லை
சும்மாநீவருந்தவேண்டாஞ் சுகதுக்கமனுபவித்தேன்
தம்மிடநகரிற்சென்று சந்தோஷமாய்வாழ்வீரே.

(வ-ம்) ஆகோவாருமையா ரிதுபர்ணமகாராசாவே இதுகாலவரையில் நீர்நம்மை வைத்தாதரித்து சவரக்ஷணைசெய்துவந்தீர் உம்மிடபேரில் ஒருகாருங்குற்றமில்லைதேவரீருக் கிரகத்திலேநான் தன்னையனுமேனன் சென்மசாபல்ய மீடேற்று அந்தசநிபகவான் மாயையால் நடந்ததல்லாமல் வேறல்லநீர் என்பேரில்தயைசெய்து இந்தவஸ்திரபூஷணாதிகளை யணிந்துக்கொண்டு தங்கள்நகரம்போய்ச்சுகமாயிருமையாராசனே.

பொது-விருத்தம்.

அயோத்திரிதுபர்ணராசனுக்கும்
 அன்பாகவிடைகொடுத்தேயனுப்பிவிட்டுத்
தையல்தமயந்திமைந்தன்வீமராசன்
 தபனுடனேசந்தோஷமீறச்

ஜெயயோகமாயிருந்து ரதமேற்கொண்டு
தமயந்திமயிலாளுந்தானுங்கூட
வையமெல்லாம் வணங்கநிடதபுரிராஜன்
மன்னவன் புட்கரன் சமுகமதில்வந்தாரே.

நளராஜன்-தரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

தேசம்புகழுநள ராஜன்மறுசூதாடச்
ஜெயநிடதபுரிவந்தார்
நேசமாகமைந்தர் மனைவியுடனேநாடி
நீதியுயர்மைத்துனன் தம்பியுடன்கூடி (தேசம்)
வஞ்சனையாய்ச்சனி மாயையினிற்செய்த
வாழ்வும்பதியரசு மானதைச்சூதால்விட்டு
அஞ்சியென்றவன வாசந்துலைத்துமாயன்
அருளினால்புட்கா னுடனேமறுசூதாட (தேசம்)
முந்துசெய்யுந்தவத்தால் சந்திரகுலந்தழைக்க
மூர்த்திகளும்வந்து நன்மைமிகவளிக்க
சந்தோஷமாய்ச்சுற்றத் தார்களரசுடன்
தானரசாளவே சதிருடன்வாழவே (தேசம்)
பத்தினிதமயந்திச் சந்திரபதிநளேந்திரன்
பட்ட பாடுகளெல்லாந் தொட்டார்கலிராஜனும்
இஷ்டமாகமன திரங்கிவேண்டியவாம்
இசைந்தநன்றுணர்ந்த யிந்திரவைபோகமுடன் (தேசம்)

நளராஜன் சொல்-விருத்தம்.

பூவுலகத்தையாளும் புட்காராஜனே கேள்
தீவினைப்பயன்றொலைந்தன் தேசத்தையுனக்களித்தேன்
தேவிமைந்தனைப்பிரிந்து தேசசஞ்சாரஞ்செய்தேன்
ஆவலாய்மறுசூதாட யான்வந்தேனுமீரோ.

(வ-ம்) அகோவாருணமயா புண்யசீலராகிய புட்காமகாராஜனே நீரென்னிலும் மகாபராக்கிரமமுடையவரானதினாலே என்னுடன் கபடமாகவந்துசூதாடி "என்னுடைய ராஜ்ஜியங்களையெல்லாம் ஜெயித்துக்கொண்டு எங்களையும் வனவாசம்போகும்படி செய்துவைத்தீர் நாங்களும் வனவாசம்போய் உம்மிட அநுக்கிரகத்தினால் வந்துசேர்ந்தோம முன்னமே ஆடினசூதை இன்னமொருதரமாடவேணுமென்று மனதாய்வந்தேன்" நாமிருவரும் சூதாடலாம் வாருமையாராஜனே.

டின

புஷ்கராஜன்சொல்-விருத்தம்.

என்னகாரணமேனேகேளா யென்பாக்யவசத்தினாலே
தன்னிடநாடுதோர்த்தீர் தானேவந்தேசூதாடி
உன்னிடகஷ்டகால மூாவிட்டுப்போயிருந்தும்
இன்னாள்சூதாடவந்தீ ரீடுண்டோவதைச்சொல்வீரே.

(வ-ம்) அகோவாருமையா நளராஜனே முன்னம்நாமிருவரும் மனது சம்மதமாகப் பந்தயம்வைத்து சூதாடினோம உம்முடையவிதிப்பயனால் நீர் தோர்த்துவிட்டீர் இப்போது மறுபடியுமவந்து சூதாடவேணுமென் றீர் பந்தயமென்ன கொண்டுவந்திர் சொல்லுமையாராஜனே.

நளராஜன்சொல்-விருத்தம்.

பந்தயமெனக்குமென்ன பாக்கியமிருக்குதென் றீர்
ஏந்தநாயகியையீடா யிணைகட்டிவைத்தேனிப்போ
உந்தன்னகருநாடு மொருமிக்கவெல்லாஞ்சேர்த்து
வந்துநீவொந்தனோடே மறுசூதையாடுவீரே.

(வ-ம்) அகோவாருமையா புஷ்கரராசனே நாமிருவரும் இன்னமொருதரம் சூதாடவேணுமென்று சொல்லுதற்கு பந்தயங்கட்ட வும்மிடத்தில் என்னவஸ்திருக்குதென்றுகேட்டீர் உம்முடையநாடுநகரம் ராச்சியங்களும் அதிலுள்ளசொக்கம் யானைசேனைரதகெஜதுரகபதாதிகளுக்கும் பதிலென்னிட தேவியாகியதமயந்தியை யீடாகக்கட்டிவைத்தேன் நாமிருவரும் சூதாடுவோம்வாருமையாராஜனே.

புஷ்கராஜனுக்கும்-நளராஜனுக்கும்-உ-வது-சூதாடல்-தரு

இ-ம்-மத்தியமாவதி-ஏகதாளம்.

சொக்கட்டாடுவோம்வாரீர்-நளமஹிப
சொக்கட்டாடுவோம்வாரீர்
இச்கெட்டுமறியவே மறுசூதாடவந்தீர்
கைத்தொட்டுப்பாச்சிகையைவைத்தெடுத்துருட்டியே (சொக்)

பாசாய்ப்புஷ்கராஜ நீராவந்தேன்முதல்
பனிரெண்டெனக்குவிழுந்துதே-அதைச்
சோமறுவிருத்தம் யிருக்காவிருபகடை
ஜெயம்பெறச்சூழ்ந்ததுவே
ஓரொட்டுமூன்றத்தொன் றுமக்குவிழுந்ததுகாண்
சோராமலென்கைக்காய் சோடுகட்டிப்போந்தது (பாரா)

கட்டாமலெனதுகாய் வெட்டுப்பட்டாலென்ன
கட்டுவதுபெரிதோ-நளமகிபா
தொட்டாலெனதுகைக்கு விருத்தங்கள்விழுவதும்
சோடுகட்டுவ தரிதோ
கட்டமென்னவிதோ குட்டுபட்டுத்தொயில்
விட்டவுந்தன் பாச்சிகை-எட்டிப்பேசச்சுதுபார் (சொக்க)

மஞ்சட்காய்க்கிருக்கால் மறுக்காய்பனிரெண்டெட்டும்
மாராமல்விருத்தமிதோ-புஷ்கரனே
கெஞ்சுதுன்கருப்புக்காய் சிகப்புஞ்சோடுகெட்டாமல்
இடப்பதைப்பாருமிதோ
பஞ்சைசயென்றெண்ணாதே பச்சைமஞ்சளும்பழுக்
குஞ்சாமற்புழுத்துது தோர்க்குமுந்தனுட்டம் (பாராய்)

நளராசன்சொல்-விருத்தம்.

பந்தயம்வைத்துத்தோர்த்த பாவிபுஷ்கரனேகேளாய்
உந்தனுல்நானுமெத்த உபகாரம்பெற்றுக்கொண்டேன்
எந்தனன்னகருநாடு மிப்போதெனவசமாய்விட்டு
இந்நாளுமதுதேச மேகுவீரேகுவீரோ.

(வ-ம்) அகோவாருமையா புண்யசீலாகிய புஷ்கராசனே யாவருக்குஞ்சுகதுக்கம் வருவதும்போவதும் நிலையல்லஆதியிலேநான் உம்முடனேசூதாடிஎன்னுடையராச்சியங்களெல்லாம்உம்மிடத்தில்தோர்த்துவிட்டோங்கள் ஸ்திரீபுருஷாளிரண்டுபேரும் இருக்கும்போதுகொஞ்சமாகிலும் சூரியவம்சத்து ராசாவாச்சுதேஎன்றெண்ணிப்பாராமல்எங்களையும்பட்டணத்திலிருக்கவொட்டாமல்வேளியேதுரத்தி விட்டமகானுபாவனல்லவாஇப்போதுநீர்இனிமேல்என்னசெய்யப்போறீர்ஆகிலும் நீர் அப்படிக்குத்தயைதாக்ஷண்ய மில்லாதவராயிருந்தாலும்நான்உன்பேரில்மிகவும் அதிகபிரியமா யிருக்கிறேன் இப்போதும்இந்தவஸ்திராபரண பூஷணங்களை யணிந்துக்கொண்டு பூர்வமாகிய உம்முடையபுட்கரதேசம்போய்ச் சேர்ந்துசுகமாய் அரசாக்ஷிசெய்து வாருமையாராசனே,

புஷ்கராஜன்சொல்-விருத்தம்,

சக்கராயுதநளேந்திர தயாபராசரணக்கேளும்
இக்கணமெனதுதேச மேகுவேன்றடையொன்றில்லை
அக்காலந்திருநல்லாற்ருனுக்கினைப்படிநடந்தேன்
எக்காலுமென்னேனலத்தே யிரட்சிப்பீரிரட்சிப்பீரோ

(வ-ம்) அகோசாணஞ் சாணமைய்யாசுவாமி ஏகசக்ராதிபதியான மகாராஜனே என்பேரிலொருக்காலுங்குற்றமில்லை அந்தசனியிசுவரபகவான்மாயையால்நடந்ததல்லாமல் வேறல்ல நான்மனமறியச்செய்ததில்லை என்பேரில் தயைசெய்து எப்போதும்போல இரக்ஷித்திட வேணுமையாசுவாமி.

பொது-விருத்தம்.

சூரியகுலந்தனிலுதித்தநளராஜேந்திரன்
    சூக்ஷிசெய்தபுஷ்கரனையலுப்பிவிட்டுக்
காரியஸ்தர்மந்திரிபிரதானிமார்கள்
    கனத்தகுடியானபேர்தமையழைத்துச்
சீருடனேநகரையலங்காரஞ்செய்துத்
    தினமுகூர்த்தம்பார்த்துத்தானமீந்து
பாரிலுள்ளோர்தெண்டனிடப்பணிந்துபோற்றப்
    பரிவொடுபட்டாபிஷேகமுடிகொண்டாரே.

தரு-இ-ம்-பூபாளம்-ஏகதாளம்.

பாரெங்குஞ்செழிக்க நரேந்திரன்சிம்மாசனாதி
    பதியாகவாழ்ந்தனனே
பேரணிமன்னர் மறையோர்கவிவாணர்
    பெரும்புகழ்கூறியே சிரக்குவித்தேதகிழ்க
காரியர்மஞ்சனீ ராடெடுக்கவே
    ராஜாதிராஜர்கள் காணிக்கைகொடுக்கவே (பாரெங்கும்)

பட்டவர்த்தனர்கள் மகுடவர்த்தனர்கள்
    பழமைபேசித்துதிக்க
மெட்டியர்வாணவர்களாரியர்சபஞ்செ[illegible]
    வியப்புடனேமதிக்க
இட்டிவந்துநின்று சாதிபெனவி[illegible]
    கீர்த்திப்ரதாபஞ்சொல்[illegible]
அட்டவிக்ரகஞ்செய்து ஆதிலொருகடமை
    தோராமற்கொண்டேநல்ல
சிஷ்டபரிபாலனஞ் செய்துதன்மங்களுந்
    தினங்குறையாமலே தனதானியங்களும்
அஷ்டலட்சுமியாக லாமல்விளங்கநாளும்
    இஷ்டவைபோகப்ர திஷ்டையுடன்மேன்மேலும் (பா)

சத்ரப்திகளராஜன் முப்பத்திரண்டு
தானதருமங்கொடுக்க
பத்தியுடனேதேவாலயம் பூசைகள்
பாங்குடனேநடக்க
சுத்தத்தாருந்தவ முனிவர்களியாவர்க்குஞ்
சொர்ணபிஷேகஞ்செய்ய
தொல்புவியாவுஞ் செழிக்கப்புழமுத்து
சொரிந்துமும் மாரிபெய்ய
புத்ரமித்ராதியர் பொங்கமாகக்கூடி
புந்திமகிழ்வுடன் பட்டாபிஷேகஞ்சூடி
உத்தமன்சபிமகவானருளைக்கொண்டாடி
ஓமவெக்கியஞ்செய்ய பூமழையெங்கும்பெய்ய (வா)

வாழி-விருத்தம்.

சீர்வாழிவிநாயகனுக்குகனும்வாழி
தேவருடன்மும்மூர்த்திக்திருநாள்வாழி
பார்வாழிகடலுரவிமதியும்வாழி
பாமாதுபூமாதுபலநாள்வாழி
கார்வாழிமறையோர்கள் மறையும்வாழி
கன்னிதமயந்திநளன் கதையும்வாழி
ஊர்வாழியிராஜர்கவிராஜர்வாழி
இதைப்படித்துகேட்போர்களென்றும்வாழி

115809

தமயந்திநாடகம்.

முற்றிற்று.

5A
10-12